# இனி இல்லை இந்து

## ராஜேஷ்குமார்

# 1



### விடியல்

விடிவது உனக்கு
வயதாவதற்கு மட்டுமல்ல
நீ வாழ்வதற்காகவும்தான்.
(ஒரு கவிதை தொகுப்பிலிருந்து)

பெரிய ப்ரௌன் கவர்க்குள் எக்ஸ்ரே – ஸ்கேன் – சங்கதிகளோடு காத்துக் கொண்டிருந்தான்... சேகர் பக்கத்து பாலி வினைல் நாற்காலியில் – சோர்வாய் கண்களை மூடியபடி அவன் மனைவி பரிமளா உட்கார்ந்து – தன் வயிற்றின் மேல் கையை வைத்து 'ஸ்... ஸ்' என்று அரற்றிக் கொண்டிருந்தாள்.



''என்ன பரிமளா ரொம்பவும் வலிக்குதா?''

''தாங்க முடியலைங்க...''

''கொஞ்சம் பொறுத்துக்க. அடுத்த டோக்கன் நம்மளோடதுதான்.''

''என்னங்க...?''

''ம்...''

''இந்த டாக்டராவது என்னை குணப் படுத்துவாரா...?''

''உனக்கு கண்டிப்பா குணமாயிடும் பரிமளா... கவலைப்படாமே இரு...''

பக்கத்து ரிசப்ஷன் கௌண்டரில் உட்கார்ந் திருந்த அந்த குண்டு நர்ஸ் சேகரிடம் திரும்பினாள். ''மிஸ்டர்...! வளவளன்னு கொஞ்ச நேரம் பேசாமே இருக்க மாட்டீங்களா? நீங்க பேசறது மத்த பேஷண்டுகளுக்கு தொந்தரவா இருக்காது...?''

''ஸாரி சிஸ்டர்...''

அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே – டாக்டரின் அறைக்கதவு திறந்து – உள்ளே போன ஒரு வயதான பெரியவர் இருமிக் கொண்டே வெளியே வந்தார்.

நர்ஸ் சேகரைப் பார்த்து கண் காட்டினாள்.

''நீங்க உள்ளே போங்க...''

சேகர் பரிமளாவின் தோள்பட்டையைப் பற்றி – மெல்ல எழுப்பினான். அவள் உதட்டைப் பற்களால் கடித்து வலியை மென்ற படி மெதுவாய் எழுந்து அவனோடு நடந்து – டாக்டரின் அறைக்குள் நுழைந்தாள். கதவு பின்பக்கமாய் சாத்திக் கொண்டது.

பேஷனில் கை கழுவிக் கொண்டிருந்த டாக்டர் நாகராஜ் நல்ல உயரத்தில் – மின்னும் வழுக்கைத் தலையோடு இருந்தார். வயது நாற்பதிலிருந்து நாற்பத்தைந்துக்குள் இருக்கலாம்... சதை பிடிப்பான கன்னத்தில் – மரு ஒன்று முளைத்திருக்க கண்களில் வெள்ளி பிரேமிட்ட கண்ணாடி மின்னியது.

''உட்காருங்க...''

டவலில் கைகளை துடைத்தபடி – நாற்காலிக்கு வந்தார் டாக்டர். சேகர் – பரிமளா டாக்டர்க்கு எதிரே இருந்த ஸ்டீல் சேர்களில் உட்கார்ந்தார்கள்.

''டாக்டர்... ஷி... ஈஸ் மை ஒய்ஃப்... கடந்த ஒரு மாச காலமாக கடுமையான ஹிப்–பெய்ன். வலி வந்தா துடிச்சு போயிடறா... மொதல்ல டாக்டர் புனிதாவை பார்த்தோம்... அவங்க ஸ்கேன், எக்ஸ்ரே எல்லாம் எடுத்து பார்த்துட்டு – மாத்திரைகளுக்கு எழுதி குடுத்தாங்க... மாத்திரைகளை சாப்பிட்டதுல எந்த குணமும் தெரியலை. அதற்குப்புறமா டாக்டர் கிருஷ்ணமூர்த்தியை கன்ஸல்ட் பண்ணினோம்... அவர் ரெண்டு நாள் க்ளினிக்ல தங்க வெச்சு ட்ரீட்மெண்ட் எடுத்தார். ஓரளவு குணமான மாதிரி தெரிஞ்சது. மறுபடியும் ஒரு வாரம் கழிச்சு வலி ஆரம்பமாயிடுச்சு... எங்க வீட்டுக்கு பக்கத்தில் இருந்த ஒரு பெரியவர் சொன்னார்ன்னு சொல்லி கணபதியில் இருக்கிற ஹோமியோபதி டாக்டர்கிட்டே போனோம்... ஒரு வாரம் ட்ரீட்மெண்ட் எடுத்தோம். எதுவும் சரிப்பட்டு வரலை... கடைசியில் என் ஃப்ரண்ட் ஒருத்தன் உங்க பேரைச் சொன்னான். நம்பிக்கையோட வந்திருக்கோம்...''



டாக்டர் நாகராஜ், சேகர் சொன்னதையெல்லாம் உன்னிப்பாய் செவிமடுத்துவிட்டு கேட்டார்.

''உங்களுக்கு கல்யாணமாகி எத்தனை வருஷம் இருக்கும்?''

''ரெண்டு வருஷம்...''

''குழந்தை இருக்கா...?''

''இல்லை...''

''எக்ஸ்ரே, ஸ்கேன் எல்லாம்... எடுத்துப் பார்த்துட்டு மத்த டாக்டர்ஸ் என்ன சொன்னாங்க...?''

''நார்மல்ன்னு சொல்லிட்டாங்க...''

''அந்த ரிப்போர்ட்ஸெல்லாம் வெச்சிருக்கீங்களா...?''

''இதோ...'

தன் கையிலிருந்த ப்ரௌன் கவரை நீட்டினான் சேகர். டாக்டர் நாகராஜ் அதை வாங்கிக் கொண்டே கேட்டார்.

''எங்கே எடுத்தீங்க...?''

''சாய் லாப்ரட்ரீஸ்...''

எக்ஸ்ரேக்களை வெளிச்சத்தில் அண்ணாந்து பார்த்துவிட்டு – ப்ளட், யூரின் ரிப்போர்ட்களை புரட்டினார். கடைசியாய் ஸ்கேனையும் பார்த்தபின் சேகரிடம் திரும்பினார்.

''எத்தனை நாளா இந்த வலி இருக்குன்னு சொன்னீங்க?''

''ஒரு மாசமா...''

''மென்ஸஸ் சைக்கிளிங் எப்படி...?''

''அதுல எந்த பிராப்ளமும் இல்லை டாக்டர்... சரியா இருபத்தெட்டு நாளைக்கு ஒரு தடவை பீரியட் வந்துடுது...''

''எந்த சந்தர்ப்பத்திலாவது நாள் தள்ளிப் போயிருக்கா...?''

''கல்யாணமான மூணாவது மாசம் ஒரு பத்து நாள் தள்ளிப் போயிருக்கு. இவ்வளவு சீக்கிரத்துல குழந்தை வேண்டாம்ன்னு நினைச்சு, மாத்திரையை சாப்பிட்டு சரி பண்ணிக்கிட்டா...''

டாக்டர் பின்பக்கமாய் திரும்பிப் பார்த்து 'சிஸ்டர்' என்று குரல் கொடுக்க – பக்கத்து அறையினின்றும் ஒரு நர்ஸ் வெளிப்பட்டாள்.

''எஸ் டாக்டர்...''

''இந்தப் பெண்ணை கூட்டிக்கிட்டு போய் – உள்ளே இருக்கிற டேபிளில் படுக்க வை...'' சொன்ன டாக்டர் சேகரிடம் திரும்பினார்.

''நீங்க ரெண்டு நிமிஷம் வெளியே இருங்க...''

சேகர் வெளியே போனதும் – நர்ஸ் பரிமளாவை அழைத்துக் கொண்டு போய் – டேபிளின் மேல் படுக்க வைத்தாள். டாக்டர் நாகராஜ் ஸ்டெத்தை மாட்டிக் கொண்டு பக்கத்தில் வந்தார். நாடியைப் பிடித்தும் – கண்ணிமைகளை தாழ்த்தியும் பார்த்துவிட்டு கேட்டார்.

''உனக்கு என்ன வயசும்மா...?''

''இருபத்தி மூணு...''

''கல்யாணத்துக்கு முந்தி இந்த வலி இருந்ததா?''



''இல்ல...''

''குறிப்பா வலி எங்க இருக்குன்னு சொல்றியா?''

இடுப்பின் வலது பக்கத்தை தொட்டுக் காட்டினாள் பரிமளா. நாகராஜ் அந்த இடத்தை அழுத்திப் பார்த்துவிட்டு – 'மென்சஸ் பீரியட் உள்ள நாளிலேயும் இந்த வலி இருக்கா...?'

''இல்ல டாக்டர்...'

''சாப்பிட்ட உடனே வாமிட் பண்ற உணர்ச்சி இருக்கா?''

''ஊ...ஹூம்...ம்...''

''எந்திரிச்சு உட்காரம்மா...''

பரிமளா சிரமமாய் எழுந்து உட்கார்ந்தாள்.

''சிஸ்டர்! ஒரு ப்ருடண்ட் இஞ்செக்ஷனை தயார் பண்ணு. வெளியே இருக்கிற இந்தப் பெண்ணோட ஹஸ்பெண்ட்டையும் அப்படியே கூப்பிட்டு விடு...''

நர்ஸ் தலையாட்டிவிட்டு வெளியே போக – அடுத்த நிமிஷம் சேகர் உள்ளே வந்தான். டாக்டர் பிரிஸ்க்ரிப்ஷனில் எதையோ கிறுக்கிக் கொண்டே அவனை புன்னகையோடு ஏறிட்டார்.

''பயப்படற மாதிரி எதுவுமே இல்லை...''

''அந்த வலி எப்படி வருது டாக்டர்...?''

''ட்யூ... டு... அடிஷன்...'

''அடிஷனா...? அப்படின்னா...?''

''குடல் பகுதிகள் ரெண்டும் ஒண்ணோடு ஒண்ணு ஒட்டிக்கிட்டு கர்ப்பப்பைக்கு கீழே இருந்து ஒரு ப்ரஷரை கொடுக்கும்... அந்த

ப்ரஷர் இடுப்புப் பகுதியில் இருக்கிற நுண்ணிய நரம்புகளை தாக்கும்போது – தாங்க முடியாத வலி உற்பத்தியாகும்...''

சேகர் புன்னகைத்தார்.

''இதெல்லாம்... உங்களுக்கு எப்படி டாக்டர் தெரியுது?''

''ரிடிகுலஸ்! எப்படி தெரியுதா...? அதுக்குத் தானே நான் படிச்சிருக்கேன்...''

''என்னது...? நீங்க படிச்சிருக்கீங்களா...? போர்டில் உங்க பேர்க்கு பின்னாடி இருக்கிற MBBS., MS., F.R.C.F. எல்லாம் நிஜமா நீங்க... படிச்ச படிப்பா...?''

நாகராஜ் முகம் சிவந்தார்.

''என்ன பேத்தறீங்க...?''

''நான் பேத்தலை... மிஸ்டர் நாகராஜ். உண்மையைச் சொல்றேன். நீங்க டாக்டர்க்கே படிக்கலை... கொச்சையா சொல்லப்போனா... நீங்க ஒரு போலி டாக்டர்... உங்க உண்மையான எஜுகேஷனல் க்வாலிஃபிகேஷன் பி.ஏ. எக்ஸாமிக்ஸ்...''

நாகராஜ் ஏதோ ஆவேசமாய் பேச முயல – பரிமளா புன்னகையோடு கையமர்த்தினாள்.

''நாகராஜ்! வீணா கத்தி ஆர்ப்பாட்டம் பண்ணாதீங்க...! நானும் மிஸ்டர் சேகரும் போலீஸ் டிபார்ட்மெண்ட் க்ரைம் ப்ராஞ்ச் விஜிலென்ஸை சேர்ந்தவங்க. உங்க கிட்டே இப்படி தனியா பேசத்தான் – கணவன் மனைவி மாதிரி வந்தோம்... எக்ஸ்ரே, ஸ்கேன், ப்ளட் ரிப்போர்ட், யூரின் ரிப்போர்ட்... எல்லாமே ஒரு செட்டப்தான்...''



''நோ...'' – என்று கூறி வியர்த்து வழிந்த நாகராஜ் உறைந்து போய் அவர்களையே பார்த்தார்.

## 2



வெட்ட வெட்ட
வளரும் நீ என்ன
விரல் நகமா...?

டெலிபோன் தன் தொண்டையைத் திறந்து – முதல் கத்தலை வெளியிட்டதுமே – பரிதி ரிஸீவரை எடுத்தான்.

''ஹலோ...''

''ஹலோ...! எழுத்தாளர் இந்துவதனா வீடுங்களா இது...?''

''ஆமா...''

''அவங்க இருக்காங்களா...?''

''இருக்காங்க...''

''பேசணுமே...?''

''நீங்க யாரு...?''

''யோகம்' பத்திரிகையோட சப்–எடிட்டர் பேசறேன்...!''

''புதுப் பத்திரிகையா...?''

''ஆமா...''

பரிதி பேசிக் கொண்டிருக்கும்போதே – குளியலறையிலிருந்து இந்துவதனா வெளிப்பட்டாள். கூந்தல் ஈரத்தை டவல் உறிஞ்சிக் கொண்டிருக்க – உடம்புக்கு வெளிர் மஞ்சள் நிற சேலை கொடுத்திருந்தாள். மாந்துளிர் நிறம்.

''யார்ங்க போன்ல...?''

பரிதி ரிஸீவரை அவளிடம் நீட்டினான்.

''யோகம்'ங்கிற புதுப் பத்திரிகையோட சப்–எடிட்டர் பேசறார்...''

இந்து ரிஸீவரை வாங்கி –

''ஹலோ... நான் இந்துவதனா பேசறேன்.''

''வணக்கங்க... அம்மா...''

''வணக்கம்...''

''யோகம்' பத்திரிகையோட சப்–எடிட்டர் தெய்வீகன் பேசறேன்.''

''என்ன விஷயம்...?''

''அடுத்த மாசம்... எங்க பத்திரிகையை கொண்டு வரலாம்ன்னு இருக்கோம். முதல் இதழிலேயே... உங்க தொடர் கதை வெளியாகணும்ன்னு பப்ளிஷர் விருப்பப்படறார்...''

''பப்ளிஷர் யாரு...?''

''யோகநாதன்...''

''பருவச்சிட்டு'ன்னு ஒரு பத்திரிகையை நடத்திட்டிருந்தாரே?''

''அவரேதான்...''

''என்னோட ஷெட்யூல்படி... அடுத்த தீபாவளி வரைக்கும் எந்த புதுப் பத்திரிகைக்கும் தொடர் எழுத முடியாதே...?''



''அப்படி சொல்லாதீங்கம்மா... ஏஜெண்ட்செல்லாம் உங்க கதை முதல் இஷ்யூவிலேயே வரணும்ன்னு ஆசைப்படறாங்க...''

''உங்க பேர் என்ன சொன்னீங்க...?''

''தெய்வீகன்...''

''மிஸ்டர் தெய்வீகன்! ஒரு உண்மையை முதலிலேயே புரிஞ்சுக்குங்க... நான் ஏஜெண்ட்களுக்காக கதை எழுதறதில்லை... என்னோட வாசகர்களுக்காகத்தான் எழுதறேன்...''

''அ...அது வந்துங்கம்மா...''

''ஒரு ஆறு மாசம் டயம் குடுங்க பின்னாடி பார்க்கலாம்.''

''அம்மா... சன்மானத்தைப் பத்தி கவலைப் படற மாதிரி தெரியுது! நீங்க கேக்கிற அமௌண்ட்டை பப்ளிஷர் தருவாரும்மா...''

''நான் பணத்துக்காக மட்டும் கதை எழுதறதில்லை... உங்க பத்திரிகையோட தரம் எப்படின்னு பார்த்துட்டு... நானே உங்களை காண்டாக்ட் பண்றேன். இப்ப ரிஸீவரை வெச்சுடறீங்களா...?''

சொன்ன இந்துவதனா ரிஸீவரை வைத்துவிட்டு – பக்கத்தில் நின்றிருந்த கணவன் பரிதியை ஏறிட்டாள்.

''இனிமே 'யோகம்' பத்திரிகையிலிருந்து போன் வந்தா நான் வீட்ல இல்லேன்னு சொல்லிடுங்க...''

''பாவம்! புதுசா பத்திரிகை தொடங்கறார்... எழுதிக் குடேன்.''

''அந்த பப்ளிஷர் யோகராஜனைப் பற்றி உங்களுக்குத் தெரியாதுங்க. அவன் ஒரு பிராட். ஏஜெண்ட்டுகளை ஏமாத்தறதுக்காகவே பத்திரிகை ஆரம்பிப்பான். கொஞ்ச நாள் பத்திரிகை வரும். அப்புறம் திடீர்னு நின்னுடும்...''

வெளியே காலிங்பெல் சத்தம் கேட்டது.

இந்து ஜன்னலில் எட்டிப் பார்த்தாள்.

அந்த பதினாறு வயது சிறுவன் – கம் – வாலிபன் நின்றிருந்தான்.

''என்ன தம்பி...?''

''கல்கியிலிருந்து வர்றேம்மா... தொடர் கதை அத்தியாயத்தை கேட்டு வாங்கிட்டு வரச்சொன்னாங்க...''

''ட்ராயிங் ரூம்ல ஒரு நிமிஷம் வந்து உட்காரு...'' சொன்னவள் தன்னுடைய அறைக்குப் போய் – மேஜையின் மேல் எழுதி வைத்திருந்த – அத்தியாயத்தாள்களை எடுத்து – 'ஸ்டேப்ளரிங்' – செய்து கவரில் போட்டு ஒட்டினாள்.

பரிதி அவளுக்கு பின்பாய் வந்து நின்று – இடுப்பைக் கிள்ளியபடியே கேட்டான். ''எத்தனையாவது அத்தியாயம்...?''

''பதினாலாவது...?''

''மொத்தம் எத்தனை அத்தியாயம்...?''

''லிமிட்டெல்லாம் இல்லை...''

''ரெஸ்பான்ஸ் எப்படியாம்...?''

''ஆண் வாசகர்கள் கல்லெறியறாங்களாம். பெண் வாசகிகள் பூத்தூவறாங்களாம்.''



''நீ ஆண்களை ரொம்பத்தான் மட்டம் தட்றே இந்து...''

''உள்ளதைத்தான் எழுதறேன்...''

''ஆனாலும் ஓவர். கொஞ்சம் குறைச்சுக்க...''

''நான் அதுக்கு ஒத்துக்கிட்டாலும் என் பேனா ஒத்துக்காது...'' சொன்னவள் – அத்தியாயக் கவரை கொண்டுபோய் பையனிடம் கொடுத்துவிட்டு வந்தாள்.

பரிதி ஞாபகப்படுத்தினான். ''பாக்கெட் நாவலுக்கு டைட்டில் கேட்டிருந்தாங்களே...? குடுத்துட்டியோ...?''

''காலையிலேயே போன் பண்ணி சொல்லிட்டேனே?''

''என்ன டைட்டில் குடுத்தே...?''

''இலையுதிர்காலம் நிரந்தரமல்ல...''

''க்ளாஸிக் டைட்டில்...! இதுக்கு நான் ஏதாவது பரிசு குடுத்தே ஆகணும்...''

''நீங்க என்ன பரிசு குடுப்பீங்கன்னு எனக்குத் தெரியுமே...! கைக்காசை செலவழிக்காமே... கன்னத்தைக் காட்டுன்னு சொல்லுவீங்க... வரவர உங்க பரிசு ரொம்ப சீஃப்பாயிடுச்சு...''

''இப்ப உனக்கு பரிசு வேணுமா வேண்டாமா...?''

''சரி... குடுங்க...'' சலித்துக் கொண்டே போய் அவனுக்குப் பக்கத்தில் போய் நின்றாள் இந்து.

பரிதி சந்தன சோப் வாசனையடிக்கும் அவளுடைய கன்னத்தை மோப்பம் பிடித்து — மெல்ல உதடுகளைப் பதித்து — முத்தமிட்டான்.

கண் சொருகினாள் இந்து.

''உங்க உதடு ரொம்ப சூடு...''

''உன் உதடும் சூடா இருக்கான்னு பார்க்கட்டுமா...?''

''கட்... கட்...''

இந்து கணவனிடமிருந்து விலகி — சமையலறையை நோக்கி போகும்போது — காம்பௌண்ட் கேட்டுக்குள் — போலீஸ் பைக் நுழைவது தெரிந்தது.

நின்றாள்.

போர்டிகோவுக்கு வந்து பைக்கை நிறுத்திய — அந்த போலீஸ் அதிகாரி 'குட்மார்னிங் மேடம்' — என்று சொல்லிக் கொண்டே உள்ளே வந்தார்.

''குட்மார்னிங்...! வாங்க...''

''நான் இன்ஸ்பெக்டர் குருராஜன். எஃப்–ஒன் ஸ்டேஷன்ல இருக்கேன்... உங்ககிட்டே ஒரு நிமிஷம் பேசணும்...'

''ப்ளீஸ்... பீ... ஸீட்டட்...''

இன்ஸ்பெக்டர் குருராஜன் உட்கார்ந்ததும் — பரிதியும் வந்து இணைந்துக் கொள்ள — இந்து கேட்டாள்.

''என்ன விஷயம் இன்ஸ்பெக்டர்...?''

''விக்டர்ன்னு ஒரு தூக்கு தண்டனை கைதி. மனைவியையும், மாமியாரையும்... குத்திக் கொலை பண்ணிவ அவனை நாளை கழிச்சு



மறுநாள் விடியற்காலையில தூக்குல போடப் போறோம்... ஜெயில் சம்பிரதாயப்படி இன்னிக்குக் காலையில — அவனைச் சந்திச்சு 'உன்னோட கடைசி ஆசை' என்னன்னு கேட்டோம். அதுக்கு அவன் எழுத்தாளர் இந்துவதனாவை சந்திக்க விரும்பறேன்னு சொன்னான்.''

இந்து வியப்பாய் இன்ஸ்பெக்டரை ஏறிட்டாள்.

''என்கிட்டே அந்த தூக்குத் தண்டனை கைதி பேசணுமாமா?''

''எஸ்...''

''என்ன விஷயமாய்?''

''தெரியலை மேடம்... நீங்க விருப்பப் பட்டால் அவனை சந்திக்கலாம்... தயக்கமா இருந்தா மறுத்துடலாம்...''

''சந்திக்கிறேன்'' — என்றாள் இந்து.




## நம்பிக்கை

புயலில் படகு
அதனால் என்ன...? அதோ
தூரத்தில் நிலம்.

நாகராஜ் அவர்களையே பார்க்க சேகர் சிரித்தான். ''என்ன அப்படி பார்க்கறீங்க...?

நாங்க ரெண்டு பேரும் சகலவிதமான ஏற்பாடுகளோடுதான் வந்திருக்கோம். நீங்க உண்மையை ஒத்துக்கிட்டா பிரச்சனையை இதே ரூம்ல வெச்சு – வெளியே ஒரு ஈ காக்கைக்கு தெரியாமே சால்வ் பண்ணிடலாம்... அப்படி யில்லாமே... உண்மையை ஒத்துக்கிறதுல பிடிவாதம் காட்டினா... உங்களை கைது பண்ணி ஸ்டேஷனுக்கு கொண்டு போறதைத் தவிர வேறு வழியில்லை...''

''நா... நான் டாக்டர்தான்...''

''நீங்க டாக்டரா இருக்கிற பட்சத்துல ஏன் இப்படி வேர்த்து வழியணும்...?'' பரிமளா புன்னகைத்தாள். ''தப்பு பண்ணினவங் களுக்குத்தான் இப்படி பேயா வேர்த்துக் கொட்டும்...! மிஸ்டர் நாகராஜ், நாங்க டிபார்ட்மெண்டுக்கு தெரியாமே... உங்க கிட்டே வந்திருக்கோம். நீங்க ஒரு போலி டாக்டர்ங்கிற விஷயம் நம்பகமான ஒரு நபர்கிட்டயிருந்து எங்களுக்கு கிடைச்சது. ஆதாரங்களும் கைவசம் இருக்கு. ஆனா உங்களை டிபார்மெண்ட்டுக்கு காட்டிக் கொடுக்காம பிரச்சனையைத் தீர்க்கத் தான் வந்திருக்கோம்...''

பரிமளா சொல்லிக் கொண்டிருக்கும்போதே நர்ஸ் ஊசி மருந்தோடு உள்ளே வந்தாள். நாகராஜ் சுரத்தில்லாத குரலில் – அவளை ஏறிட்டு கூட பார்க்காமல் ''அப்படி வெச்சுட்டு போ...'' என்றார்.

''டாக்டர்... இந்த இஞ்செக்ஷன்...?''

''எனக்குத் தெரியும்... நீ போய் ஓ.பி.வார்டை அட்டெண்ட் பண்ணு.''



''எஸ்.டாக்டர்...''

அவள் போனதும் நாகராஜ் – எழுந்து போய் கதவை உட்பக்கமாய் தாழிட்டு விட்டு வந்தார். கர்ச்சீப்பால் வியர்வையை ஒற்றிக் கொண்டே சேகர் – பரிமளாவை ஏறிட்டார்.

''உங்க ஐடெண்டிஃபிகேஷன் கார்டுகளை நான் பார்க்கலாமா?''

''ஷ்யூர்...''

போலீஸ் டிபார்ட்மெண்ட்டின் நீலநிற அட்டைகளை எடுத்துக் காட்டினார்கள். நாகராஜ் அடையாள கார்டுகள்ளை பார்த்துவிட்டு – பெருமூச்சோடு கேட்டார்.

''இந்த விஷயத்தை உங்களுக்கு சொன்னது யாரு...?''

''அந்த விபரமெல்லாம் உங்களுக்கு வேண்டாம் நாகராஜ். வெளியே கசிஞ்சிட்ட உங்க ந்யூஸை... மூணாம் மனுஷனுக்குத் தெரியாமே அடைக்கிறதுதான்... இப்ப இருக்கிற ஒரே பிரச்சனை...''

''பிரச்சனையை சால்வ் பண்றது எப்படி...?''

''ஈஸி! டிபார்ட்மெண்ட்டுக்கு விஷயம் போகாமே இருக்கணும்ன்னா நீங்க டாக்டர் தொழில் பார்த்து சம்பாதிக்கிற பணத்தில் பாதியை எங்களுக்கு மான்யமா குடுத்துட வேண்டியதுதான்...''

''ப்யூர்லி... பிளாக்மெய்லிங்...''

''போலி டாக்டர் உத்யோகம் பார்க்கிறதைக் காட்டிலும்... ப்ளாக்மெய்ல் பண்றது எவ்வளவோ உத்தமமான காரியம்...''

நாகராஜ் தன் வழுக்கையை அவஸ்தையாய் கீறினார். கை நடுக்கத்தோடு பேப்பர் வெயிட்டை சுழற்றினார்.

''என்ன யோசிக்கிறீங்க... நாகராஜ்...! உங்களை கைது பண்ணி கோர்ட்டுக்கு கொண்டு போய் நிறுத்தினா... கேஸை விசாரிக்கிற எந்த ஜட்ஜும் கண்ணை மூடிக் கிட்டு 'டெத் சென்டன்ஸ்'தான் கொடுப்பார். எப்படின்னு கேக்கறீங்களா...? இந்த போலி டாக்டர் தொழிலை எட்டு வருஷ காலமா பண்ணிட்டு வர்றீங்க. இந்த எட்டு வருஷ காலத்துல ஒரு பத்து பர்செண்ட் பேஷண்ட்ஸாவது உங்க ட்ரீட்மெண்ட்டாலே பரலோகம் போயிருப்பாங்க... உண்மையாவே டாக்டர்க்கு படிச்ச ஒருத்தர் கேஸை அட்டெண்ட் பண்ணி பேஷண்ட் செத்துப் போனா... அது குற்ற மில்லை. ஆனா டாக்டர்க்கு படிக்காத ஒரு நபர் தான் டாக்டர்ன்னு சொல்லிக்கிட்டு கேஸை அட்டெண்ட் பண்ணி பேஷண்ட் செத்துப்போனா அது மர்டர்... கடந்த எட்டு வருஷ காலத்துல... உங்க க்ளீனிக்ல... செத்துப்போன பேஷண்ட்ஸ் எவ்வளவு பேர்ன்னு கொஞ்சம் கணக்கு போட்டு பாருங்க...''

நாகராஜ் மறுபடியும் வியர்த்தார்.

''சரி... பிரச்சனையை இதே ரூம்ல சால்வ் பண்ணிக்கலாம்... இந்த டாக்டர் தொழிலில் நான் சம்பாதிக்கிற பணத்தில் பாதியைக் குடுத்துடறேன்...''

''பேச்சு மாறமாட்டீங்களே...?''

''நிச்சயமா மாட்டேன்...''



''சரி... எங்களுக்கு ஒரு சந்தேகம்... கேட்டா பதில் சொல்வீங்களா?''

''எ... என்ன சந்தேகம்...?''

''டாக்டர் படிப்பையோ... சர்ஜரியையோ படிக்காமே உங்களாலே எப்படி ஆப்ரேஷன் கேஸ்களை கவனிக்க முடிஞ்சது...?''

''அ...அது வந்து... வந்து...''

''இதோ பாருங்க டாக்டர்... முழுக்க நனைஞ்சுட்டீங்க... இனிமே முக்காடு எதுக்கு...?''

நாகராஜ் தயங்கிவிட்டு தொடர்ந்தார்.

''நான் கடைசி வார் ஃபீல்டுல... ஒரு அமெரிக்க டாக்டர்க்கு கீழே மெடிக்கல் அட்டெண்டரா ஆறு வருஷம் ஒர்க் பண்ணிக் கிட்டிருந்தேன். போர் நடக்கிற காலங்களில் குண்டடிபட்ட சோல்ஜர்களை கூடாரத்துக்கு கொண்டு வந்து – காடா விளக்கு வெளிச் சத்துல அந்த அமெரிக்க டாக்டர் விடிய விடிய ஆப்ரேஷன்களை பண்ணுவார். அந்த சமயத்துல அவர்க்கு ஹெல்ப்பரா இருந்த நான் ஆப்ரேஷனோட நுணுக்கங்களையெல்லாம் கத்துக்கிட்டேன். ஒரு சமயம் டாக்டர் குண்டடி பட்டு இறந்துட்டார். அப்புறம் வந்த சந்தர்ப் பங்களில் – அவசரத்துக்கு நானே ஆப்ரேஷன் களை பண்ண ஆரம்பித்தேன்.''

''சரி... அங்கிருந்து ஏன் இந்தியாவுக்கு வந்தீங்க...?''

''திடீர்ன்னு கண்ணுல ஏற்பட்ட பார்வைக் குறைவுதான் காரணம். துப்பாக்கி ரவையோட சில்லுபட்டு என் வலது கண்ணோட பார்வை

குறைஞ்சுட்டே வந்ததினாலே எனக்கு கட்டாய ஓய்வு குடுத்து மிலிடரியிலிருந்து அனுப்பிட்டாங்க. நான் இந்தியாவுக்கு வந்து ஒரு தனியார் ஹாஸ்பிடல்ல அட்மிட்டாகி என் கண்ணை... சரி பண்ணிக்கிட்டேன். நான் ஹாஸ்பிடல்ல தங்கியிருந்தப்ப எனக்கு பக்கத்து பெட்ல இருந்த கண்ணுச்சாமிங்கிற பிளாக் மேக்கரோடு எனக்கு பழக்கம் ஏற்பட்டது. கண்ணுச்சாமி... எந்த துறை சம்பந்தப்பட்ட பட்டத்தையும் — அதே மாதிரி பிளாக் எடுத்து செஞ்சு தர்றதுல கில்லாடிங்கிறதை தெரிஞ்சுக்கிட்டு... டாக்டர் பட்டங்களை பிளாக் எடுத்து பிரிண்ட் பண்ணி குடுக்கும்படியா சொன்னேன். அவனும் டாக்டர் டிகிரி சர்ட்டிபிகேட்களை துல்லியமா எடுத்துக் குடுத்தான். இந்த பெரிய சிட்டியில் என் தொழிலை ஆரம்பிச்சுட்டேன்.''

''அந்த ப்ளாக் மேக்கர் கண்ணுச்சாமி இப்ப உயிரோடு இல்லையா?''

''அவன் ரெண்டு வருஷத்துக்கு முந்தி செத்துட்டான்...''

''உங்க பேர்ல யார்க்கும் சந்தேகம் வராமே இருந்ததுக்கு என்ன காரணம்.।.?''

''என்னோட மெடிகல் நாலேஜ் தான் காரணம். ரொம்பவும் சிக்கலான ஆப்ரேஷன்களைக் கூட துல்லியமா பண்ணி பேஷண்ட்களை பிழைக்க வெச்சிருக்கேன்...'' சொன்ன நாகராஜ் சேகரை ஏறிட்டார்.

''என்னை எப்படி ஸ்மெல் பண்ணீங்க?''

''எங்களுக்கு வேண்டிய ஒருத்தர் ஒரு பேப்பர் கட்டிங்கை கொண்டு வந்து



கொடுத்தார். அந்த கட்டிங்கில் உங்க போட்டோ இருந்தது.''

''பேப்பர் கட்டிங்கா...?''

''எஸ்... அது ஒரு பழைய பேப்பர் கட்டிங்...'' சொன்ன சேகர் கையோடு கொண்டு வந்திருந்த பேக்கை பிரித்து — அந்த பேப்பர் கட்டிங்கை எடுத்தான்.

நாகராஜ் வாங்கிப் பார்த்தார்

AT WAR FRONT — என்று தலைப்பிட்ட வாசகத்துக்கு கீழே அந்த போட்டோ தெரிந்தது. ரைஃபிள்களை உயர்த்திக் கொண்டு சிரிக்கும் அமெரிக்க இராணுவ வீரர்களுக்கு மத்தியில் — நாகராஜுைம் தெரிந்தார்.

சேகர் கேட்டான்.

''சோல்ஜர்களுக்கு மத்தியில் இருக்கிறது நீங்கதானே...?''

''ஆமா...! இந்த பேப்பர் கட்டிங் உங்களுக்கு எப்படி கிடைச்சுது...?''

''எங்களுக்கு வேண்டிய ஒருத்தர் கொண்டு வந்து கொடுத்தார். இந்த போட்டோவில் இருக்கிற ஆளைப் பார்த்தா இண்டியன் மாதிரியும், அதே சமயத்தில் இங்கே க்ளீனிக் வெச்சிருக்கிற டாக்டர் நாகராஜ் மாதிரியும் இருக்கார். கொஞ்சம் கவனிங்கன்னு சொல்லி போட்டோவைக் கொடுத்தார். நாங்க உங்களைப் பற்றி மறைமுகமா விசாரிக்க ஆரம்பிச்சோம்... விசாரிச்ச அளவில் நீங்க ஒரு டாக்டரா இருக்க முடியாதுங்கிற முடிவுக்கு வந்தோம்.... பை.... த...பை... நான் இந்த டெலிபோனை யூஸ் பண்ணிக்கலாமா...?''

''ப்ளீஸ்...''

டெலிபோன் நகர்த்தி வைத்தார் டாக்டர்.

சேகர் ரிஸீவரை எடுத்துக் கொண்டு – டயலைச் சுழற்றிவிட்டு – மறுமுறை ரிங்குக்கு காத்திருந்து பின் பேசினார்.

''ஸார்... நான் சேகர்...''

''...''

''வீ... காட் இட் ஸார்...''

''....''

''எஸ்... எஸ்... நாகராஜ் ஒத்துக்கிட்டார்... க்ளீயரா வாக்குமூலம் குடுத்துட்டார். வேனை அனுப்புங்க ஸார்... பாதுகாப்பா கொண்டு வந்துடறோம்...'' – சேகர் பேசிவிட்டு ரிஸீவரை வைக்க நாகராஜ் அதிர்ச்சியோடு நிமிர்ந்தார்.

''வாட் ஈஸ் திஸ்...! என்கிட்ட நீங்க சொன்னதென்ன...? இப்ப நீங்க நடத்துக்கிற முறை என்ன...? யா...யார்க்கு போன் பண்ணிங்க?''

சேகர் புன்னகைத்தான்.

''என்னோட சுப்பீரியர்க்கு! குற்றவாளியை பிடிச்சா அவர்க்கு இன்ஃபார்ம் பண்ண வேண்டாமா...?''

''அப்படின்னா... நீங்க என்கிட்ட பேசின... பேரம்...?''

பரிமளா குறுக்கிட்டாள்.

''அந்த மாதிரி நாங்க பேசலைன்னா... நீங்க வழிக்கு வந்து அவ்வளவு க்ளீயரா வாக்குமூலம் குடுத்திருக்க மாட்டீங்களே...?



நாங்க இந்த ரூமுக்கு வந்த நிமிஷத்திலிருந்து இந்த நிமிஷம் வரைக்கும் – பேசின எல்லா வார்த்தைகளும் துல்லியமா நாங்க கொண்டு வந்திருக்கிற மைக்ரோ ஆடியோ டேப் ரிக்கார்ட்ல பதிவாகியிருக்கு...''

சேகர் தன் சட்டை பைக்குள் கையை நுழைத்து – தீப்பெட்டி சைஸில் இருந்த அந்த மைக்ரோ டேப் ரிக்கார்டரை எடுத்துக்காட்ட – நாகராஜ் விதவிதமாய் முகம் மாறி நொறுங்கினார்.

## 4



**சரித்திரம்**

எத்தனை விரல்களில்
ரத்தம் கசிந்து நீ
சிவப்பானாய் ரோஜாவே.

''நல்லா யோசி இந்து...?''

''யோசிச்சுட்டேன்...''

''அந்த தூக்கு தண்டனைக் கைதி விக்டரை அவசியம் பார்க்கத்தான் வேணுமா?''

''அவசியமெல்லாம் இல்லை.. அவன் ஆசைப்பட்டிருக்கான். அதுவும் கடைசி ஆசை. போய் பார்த்துட்டு வரலாமே...?''

''எனக்கென்னவோ இது வேண்டாத வேலை மாதிரி தெரியுது...?''

"இருகட்டுமே? வாழ்க்கையில் நாம எத்தனையோ வேண்டாத வேலையெல்லாம் பண்றோம்... அந்த லிஸ்ட்ல இதுவும் ஒண்ணா இருந்துட்டு போகட்டுமே..."

பரிதி இடுப்பில் கை வைத்துக் கொண்டு முறைப்பதை லட்சியம் செய்யாமல் – கண்ணாடிக்கு முன் நின்று உடம்புக்கு புடவையைக் கொடுத்திருந்தாள் இந்துவதனா.

"ப்ளீஸ்... இந்து... இந்த மாதிரியான... விஷயங்களை யெல்லாம் நீ அவாய்ட் பண்ணிடக் கூடாதா...?"

"எதுக்காக அவாய்ட் பண்ணணும்...? இந்த மாதிரியான ஒரு வித்தியாச அனுபவம் எத்தனை பேருக்கு கிடைக்கும்...?"

வாசலில் போலீஸ் ஜீப் ஹார்ன் சத்தத்தோடு வந்து நின்றது. இந்து கணவனின் கன்னத்தை மெல்ல தட்டினாள். "அழாமே... சமத்தா வீட்ல இருக்கணும்."

இன்ஸ்பெக்டர் உள்ளே வந்தார்.

"குட்மார்னிங் மேடம்..."

"குட்மார்னிங்..."

"புறப்படலாமா...?"

"நான் ரெடி..."

இந்துவதனா கிளம்பினாள். ஜீப் காம்பௌண்ட் கேட்டை தாண்டியதும் இன்ஸ்பெக்டரிடம் கேட்டாள்.

"கைதியை நாளைக்கா தூக்குல போடப் போறீங்க?"

"ஆமாம்..."



"பிரஸிடெண்ட்டுக்கு மெர்ஸி பெட்டிஷன் போட்டானா...?"

"போடலை..."

"ஏன்...?"

"என்னை யாரும் மன்னிக்க வேண்டிய அவசியம் இல்லை. நான் ரெண்டு கொலைகளை பண்ணினது வாஸ்தவம்தான்... எனக்கு என்ன தண்டனை வேணுமின்னாலும் கொடுங்கன்னு சொல்லிட்டான்..."

"அவன் யாரை கொலை பண்ணினதா சொன்னீங்க...?"

"மாமியாரையும் மனைவியையும்..."

"காரணம்...?"

"காரணத்தை அவன் சொல்லலை..."

ஜீப் அந்தக் காலை நேரப் போக்குவரத்தில் – பதினைந்து நிமிடங்களை கரைத்தப்பின் – சிறைச்சாலையின் மயான அமைதிக்குள் நுழைந்தது.

சிறைச்சாலைக்குள் நுழைவது இந்துவுக்கு முதல் அனுபவம். தொலைவில் தெரிந்த கைதிகளின் நடமாட்டமும், அந்த வேண்டாத அமைதியும் – வயிற்றுக்கு கொஞ்சம் இம்சையாய் இருந்தது.

ஜீப் கண்டெம்ட் வார்டுக்கு முன்னால் இருந்த அந்த செங்கல் கட்டிடத்துக்கு முன்னால் நின்றது.

"வாங்க மேடம்..."

இன்ஸ்பெக்டர் வழி நடத்தி உள்ளே

கூட்டிப் போனார். தலையும், மீசையும் நரைத்
ஜெயில் சூப்பிரண்ட் 'வணக்கம்' சொல்
எழுந்தார். ''உங்களுக்கு சிரமத்தை குடுத்து
டோம். ஒரு தூக்கு தண்டனை கைதியோ
கடைசி ஆசையை நிறைவேற்ற வைக்
வேண்டியது எங்க கடமை... அதான் உங்கள
அப்ரோச் பண்ண வேண்டியதாயிடுச்சு...''

''ஸோ வாட்...''

''ஏதாவது ட்ரிங்ஸ் சாப்பிடறீங்களா...?

''அதெல்லாம் வேண்டாம்...! கைதியை
பார்த்துடலாமா...?''

''ப்ளீஸ்...வாங்க...''

சூப்பிரண்ட்டும், இன்ஸ்பெக்டரும்
இந்துவைக் கூட்டிக்கொண்டு – கண்டெம்
வார்டின் கருங்கல் வராந்தாவில் நடந்தார்க
பெரும்பாலான செல்கள் காலியாய் இருக்
– லேசாய் ஒரு நாற்றம் அடித்தது. வராந்தா
யொட்டிய வேப்ப மரத்தில் – காகம் ஒன்
உட்கார்ந்து சிறைச்சாலையின் மொத்
நிசப்தத்தையும்... 'கர்...கர்...'' – என்
அறுத்துக் கொண்டிருந்தது.

இரண்டு நிமிஷ நடைக்குப்பின் –

ஒரு செல்லின் இரும்புக் கதவுக்
முன்பாய் நின்றார்கள். சூப்பிரண்ட் வார்டனை
பார்க்க – அவர் கேட்டில் தொங்கி
கொண்டிருந்த – பூட்டுக்கு வேகவேகமா
விடுதலை கொடுத்து தள்ளினார்.

''ஜ்ஜ்ஜ் ர்ர்ர்ர்ர்...''



கதவு பின்நோக்கி போக –

உள்ளேயிருந்த சிமெண்ட் திட்டில் – படுத்திருந்த அந்த இளைஞன் திரும்பிப் பார்த்தான். சற்று உலர்ந்த முகம். தலைமுடியைக் குறைத்திருந்தார்கள். கால்களுக்கும், கைகளுக்கும் விலங்கு போட்டிருந்தார்கள்.

அவன் கும்பிட்டான்.

''வணக்கம்மா...''

இரும்புச் சங்கிலிகள் கலகலத்தன.

அவனை நெருங்கினாள் இந்து.

''என்னைப் பார்த்து பேசணும்னு சொன்னியாமே...?''

''ஆமாம்மா...! நான் உங்க வாசகன். கடந்த அஞ்சு வருஷமா உங்க நாவல்களை தேடித் தேடி படிச்சுட்டிருந்த பரம வாசகன்...''

''நீ பொய் சொல்றே...?''

''பொய்யா...?''

''ம்... நீ என் வாசகனா இருக்க முடியாது.''

''இல்லீங்கம்மா...! நிஜமா உங்க வாசகன்தான்...''

''நீ என் வாசகனா இருந்திருந்தா... கொஞ்சம் கூட இரக்கம் இல்லாமே ரெண்டு பெண்களை கொலை செஞ்சிருக்க மாட்டே...?''

அவன் புன்னகைத்தான்.

''என்னை கைது பண்ணியபோது போலீஸ் கிட்டேயும் சரி... அதுக்கப்புறம் கோர்ட்ல கொண்டு போய் நிறுத்தின போதும் சரி... கொலைகளை நான் ஏன் பண்ணினேன்ங்கிற

துக்கான காரணத்தை சொல்லலை. எ
சொல்லலைன்னு கேட்டா... சொல்ல
பிரியப்படலை... அவ்வளவுதான். ஆன
நாளைக்கு தூக்குல தொங்கப் போகிற நா
– இன்னிக்கு உங்ககிட்டே அந்த காரணத்தை
சொல்லத்தான் என் கடைசி ஆசையா உங்களை
பார்க்கணும்னு ஜெயில் அதிகாரிகள் கிட்டே
சொன்னேன்...''

''சரி... என்கிட்ட சொல்லு... உன்னோட
கொலைகளுக்கு என்ன காரணம்...?''

''உங்க நாவல்கள்ல... ஆண்களை
அயோக்கியர்களாகவும் பெண்களை உத்தம
பத்தினிகளாகவும்... சித்தரிக்கிற நீங்க..
மோசமான பெண்களைப் பத்தியும் எழுதணும்ங்
கிற ஒரேயொரு காரணத்துக்காகத்தான்... என்
மனசில் இருக்கிறதை உங்ககிட்டே
சொல்றேன்... தயவு பண்ணி நான் சொல்லப்
போறதை பத்திரிக்கைகளுக்கு ந்யூஸா
குடுத்துடாதீங்க... நான் சொல்லப் போற
விஷயங்களை வெச்சு... நீங்க ஒரு நாவலா
எழுதணும்ங்கிறதுதான் என்னோட ஆசை.''

''சரி... சொல்லு...''

அவன் பெருமூச்சு விட்டபடி பேச
ஆரம்பித்தான்.

''என் பேரு விக்டர். நான் ஒரு இந்து
பொண்ணைத்தான் கல்யாணம் பண்ணிகிட்
டேன். காதல் கல்யாணம். எனக்கு அப்பா,
அம்மா, அண்ணன், தங்கச்சிங்கிற மாதிரி
நெருக்கமான உறவுகள் எதுவும் கிடையாது.
அப்போல்சரி ஒர்க் தெரிஞ்ச நான்.... ஒரு



பர்னிச்சர் கடையில் வேலை பார்த்துட்டிருந்
தேன். என்னோட ஒய்ஃப் கல்யாணி திருமண
மான ஆரம்ப நாட்களில் – என்கிட்டே
பிரியமாத்தான் இருந்தா. தனியா இருந்த
அவளுடைய அம்மா... எங்க கூடவே வந்து
இருந்துக்க ஆரம்பிச்ச பின்னாடிதான்
கல்யாணியின் நடவடிக்கைகளில் மாற்றங்கள்
தெரிய ஆரம்பிச்சது. நான் கஷ்டப்பட்டு
சம்பாதிச்சு கொண்டு வந்த பணத்தை வீட்டுச்
செலவுகளுக்கு வெச்சுக்காமே... ஆடம்பரமான
செலவுகளுக்கு உபயோகப்படுத்தினா. நான்
காரணம் கேட்டாஅலட்சியமா பதில் சொன்னா.
நான் குறைச்சலா பணம் சம்பாதிக்கிறதை சுட்டிக்
காட்டினா...! இதனால வீட்ல நிம்மதி
குறைஞ்சு... அப்பப்ப பிரச்சனைகள் எழ
ஆரம்பிச்சுது. வீட்டுச் சண்டை வீதி வரைக்கும்
போயிடக் கூடாதேங்கிறதுக்கா நான் பல்லைக்
கடிச்சுட்டு பொறுமையா இருந்தேன். ஆனா
கல்யாணியோட ஆடம்பரச் செலவுகள் அதிக
மாச்சு. புதுசு புதுசா சேலைகளை எடுக்கிறதும்
நகைகளை பண்ணிக்கிறதுமா இருந்தா. எனக்கு
லேசா சந்தேகம். நான் சம்பாதிக்கிற பணத்துல...
இதெல்லாம் சாத்தியமில்லையேன்னு யோசிச்
சேன். மூச்சு காட்டாமே ஒரு வார காலம்
கல்யாணியை கண்காணிச்சேன். உள்ளூர்ல
இருக்கிற ஒரு அரசியல் பிரமுகர்க்கும்
அவளுக்கும் தொடர்பு இருந்ததை கண்டு
பிடிச்சேன். இந்த தொடர்புக்கு ஆதரவா பாலமா
இருந்தது வேறு யாருமில்லை. என்னோட
மாமியார்தான். ஒரு நாள் ராத்திரி அம்மாக்
காரியையும், மகளையும் உட்கார வெச்சு
நியாயம் கேட்டேன். அவங்க அதிர்ந்து போகாமே

அலட்சியமா பதில் சொன்னாங்க... கண்டுக்காமே இருக்கிறதானா... வீட்ல இரு... இல்ல... போய்ட்டே இருன்னு சொல்லி சிரிச்சாங்க. என்னால ஆத்திரத்தை கட்டுப்படுத்திக்க முடியலை... வீட்டுக் கூரை எரவானத்துல சொருகி வெச்சிருந்த கத்தியை எடுத்து ரெண்டு பேரையும் சரமாரியா குத்திக் கொன்னேன்...''

விக்டர் பேசி முடித்ததும் – செல்வியிடம் ஒருவித புழுக்கமான அமைதி நிலவியது. பின் இந்து அந்த அமைதியைக் கலைத்தாள்.

''நீ கோபப்பட்டது; ஆத்திரப்பட்டது... எல்லாம் நியாயம்தான் விக்டர். ஆனா... கத்தியை கையில எடுத்திருக்கக் கூடாது... கத்தியை உபயோகப்படுத்தினதுக்கு பதிலா புத்தியை உபயோகப்படுத்தியிருக்கணும்...''

''அதனால என்ன பிரயோஜனம்...?''

''கல்யாணி உனக்கு துரோகம் பண்ணினா... தப்புதான். எக்கச்சக்கமான கோபமும் வரும்... நான் மறுக்கலை... நீ புத்திமதி சொல்லி பார்த்திருக்கலாம். அதையும் மீறி அவ செயல்பட்டா... சட்டரீதியா டைவோர்ஸ் வாங்கிகிட்டு பிரிஞ்சிருக்கலாம். அதுக்கப்புறமா உனக்குப் பிடிச்சா வேற ஒரு பெண்ணைப் பார்த்து – கல்யாணம் பண்ணிகிட்டு சந்தோஷமா இருந்திருக்கலாம்...''

'உச்' – கொட்டினான் விக்டர். ''அம்மா...! இது நடந்து முடிஞ்சு போன விவகாரம்... நாளைக்கு காலையில நான் தூக்குல தொங்கப் போறேன். அதுக்கு முன்னாடி உங்களை சந்திச்சு என்னோட ஆதங்கத்தை சொல்ல நினைச்சேன். சொல்லிட்டேன். ஆண்களோட பலஹீனங்களை



பெரிசுபடுத்தி – அவங்களை அயோக்கியர்களா சித்தரிச்சு கதை எழுதற நீங்க – என்னோட வாழ்க்கை சம்பவங்களை வெச்சு கதை எழுதணும். ஒரு பெண் எழுத்தாளரான நீங்க... என் மனைவி மாயியாரோட கேரக்டர்களை ஜனங்க மனசுல பதியற மாதிரி உருவாக்கணும். அந்தக் கதையை படிக்கிற மத்த பெண்கள் திருந்தணும்.''

''கண்டிப்பா எழுதறேன். ஆனா எனக்கு இன்னொரு விஷயம் தெரியணும்...''

''என்ன...?''

''கல்யாணியோடு தொடர்பு வெச்சிருந்த அந்த அரசியல் பிரமுகர் யாரு...?''

''முன்னாள் எம்.எல்.ஏ. மதனகோபால்...''

## 5



**பிரிவு**

நெல் முற்றியதும் அது
நிலம் பார்த்தது
நாணத்தால் அல்ல;
பிரியப்போகும் நாளைய
சோகத்தால்.

''அப்ப... நீ கதை எழுதப்போறே...?'' – பரிதி ஒரு ஆப்பிள் பழத்தை தோல் சீவிக் கொண்டே கேட்டான்.

''ஆமா...''

நைட்டியில் நுழைந்து கொண்டே தலையாட்டினாள்... இந்து.

''அந்த தூக்கு தண்டனை கைதி விக்ட சொன்னது... பூராவும் ஏன் பொய்யா இருக்க கூடாது...?''

''அவன் பொய் பேசற மாதிரி தெரியலை...

''இதோ பார் இந்து... நீ எந்த கொலை காரனைக் கேட்டாலும் சரி... அவன் தா பண்ணின கொலைக்கு ஒரு நியாயத்தை சொல்லுவான்... அதே மாதிரிதான் இவனும்...

''விக்டர் அப்படி இல்லீங்க... எனக் மனுஷ முகங்களை நல்லாவே படிக்க தெரியும்... பொய் பேசறவங்களையும், உண்மை மாதிரி பொய் பேசறவங்களையும் எனக்கு தெரியும். விக்டர் என்கிட்டே பேசின ஒவ்வொ வார்த்தையும் நிஜம். அவன்பட்ட ஆத்திர நிஜம்.''

''சரி கதையை எப்ப எழுதப் போறே...?

''அதைப்பத்திதான்.. ஒரு பப் கேஷனோடு இப்ப பேசப் போறேன்'' சொன் இந்து டெலிபோனைத் தொட்டு ரிஸீவரை.. எடுத்துக் கொண்டாள்.

டயலைச் சுழற்றி எடிட்டரை தொடர் கொண்டாள்.

''வணக்கம். நான் இந்துவதனா...''

''வணக்கம்... வணக்கம்! என்னம்மா இந் நேரத்துக்கு போன்?''



''ஸார்! உங்க 'இதழில்' உடனடியா ஒரு தொடர் ஆரம்பிக்கலாம்னு இருக்கேன்... வசதிப்படுமா...?''

ஆசிரியர் சிரித்தார்.

''என்னம்மா இப்படி கேட்டுட்டே...? நான்தான் போன பொங்கல் அன்னிக்கே தொடர் ஆரம்பிக்கச் சொன்னேன். நீதான் ஷெட்யூல் டைட்டா இருக்கு... பின்னாடி பார்த்துக்க லாம்னு சொன்னே. ரொம்பவும் பிஸியா இருக்கிற உன்னை எதுக்காக கஷ்டப் படுத்தணும்னு நானும் விட்டுட்டேன்...! நீயாக போன் பண்ணி... தொடர் ஆரம்பிக்கட்டுமான்னு கேட்டது ரொம்ப சந்தோஷம்...''

''ஸார்... நான் எழுதப் போறது... உண்மைச் சம்பவங்களைக் கொண்ட ஒரு தொடர்.''

''நீ எதை எழுதினாலும் அது அமர்க் களமாத்தான் இருக்கும்... டைட்டில் என்னாங்கிறதை சொல்லும்மா... அடுத்த இஷ்யூ பேக் ரேப்பர்ல 'அனௌன்ஸ்மெண்ட்' வெச்சுடறேன்...''

''டைட்டில் கொஞ்சம் நீளமா இருக்கும் ஸார்.''

''பரவாயில்லை சொல்லம்மா...''

''மதனகோபாலின் மறுப்பக்கம்...''

''நல்லாயிருக்கு...! உன் போட்டோ ஒண்ணை குடுத்துவிடம்மா... அனௌன்ஸ் மெண்ட்ல போட்டு விடறேன்.''

''சரி... ஸார்...''

''அப்புறம்... இந்த மாச அமுதசுரபியில 'யாகம்'ங்கிற தலைப்புல நீ எழுதியிருந்த சிறுகதையை படிச்சேன். க்ளாஸிக்! அந்த நடை எழுத்து லாவகம், 'அடே'ன்னு திகைக்க வைக்கிற ஒரு 'எண்ட்' இதெல்லாம் உனக்குதாம்மா வரும்...''

''எல்லாம் உங்க ஆசீர்வாதம் ஸார்...''

''உன் ஹஸ்பெண்ட் எப்படி இருக்கார்...?''

''அவர்க்கு என்ன ஸார்...? பேங்க்ல ஃபேனுக்கு கீழே ஃபைல்ஸ்ல கையெழுத்து போடற உத்யோகம். பேங்க்லிருந்து அஞ்சு மணிக்கெல்லாம் வந்துடறார். என்னோட கதைகளை சுடச்சுட படிக்கிறார்... ஆர்க்யூ பண்றார்... இப்ப ஆப்பிள் பழத்தை கையில வெச்சுகிட்டு தோல் சீவிட்டிருக்கிறார்...''

சிரித்தாள் இந்துவதனா.

''எப்பவும் இதே சந்தோஷம் இருக்கட்டும்மா...'' – மறுமுனையில் எடிட்டர் ரிஸீவரை வைத்தார். இந்துவும் ரிஸீவரை வைத்துவிட்டு கணவனுக்கு பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள். அவன் கேட்டான்.

''தலைப்பு என்ன சொன்னே?''

''மதனகோபாலின் மறுபக்கம்...''

''அந்த மாஜி எம்.எல்.ஏ.பேரை மாத்தாமே அப்படியே வெச்சுட்டியே?''

''ஏன் வெச்சா என்ன...?''

''விக்டர், கல்யாணி பேரையும் மாத்தப் போறதில்லையா?''



''அதை மாத்திடுவேன்...''

''ஏன் அது மட்டும் அப்படி...?''

''உயிரோடு இல்லாதவங்க பேரை போட்டு பிரயோஜனமில்லை... உயிரோடு இருக்கிற மதனகோபாலைத்தான் இந்த கதை உறுத்தணும்...''

''டிடிங்... டிடிங்...''

வாசலில் காலிங்பெல் கூப்பிட்டது.

''இந்த நேரத்துல யாரு...?''

''உங்கம்மாவும் உங்கப்பாவும்தான்... இப்படி நேரங்கெட்ட நேரத்துல மூட்டை முடிச்சுகளோட வந்து நிப்பாங்க...''

இந்து முறைக்க பரிதி சிரித்துக் கொண்டே போய் கதவைத் திறந்தான்.

சேகரும், பரிமளாவும் நின்றிருந்தார்கள்.

''ஓ... க்ரைம் ப்ராஞ்ச்...! வாங்க...! வாங்க... வாங்க...! இந்து யார் வந்திருக்காங்கன்னு பாரு...''

இந்து வெளிப்பட்டாள், சந்தோஷித்தாள்.

''வாங்க... சேகர், பரிமளா...! நானே உங்களுக்கு போன் பண்ணனும்னு நினைச்சிட்டிருந்தேன். அந்த டாக்டர் நாகராஜ் விவகாரம் என்னாச்சு...?''

சேகர் உள்ளே நுழைந்து சோபாவில் உட்கார்ந்தபடியே சொன்னான். ''நாகராஜ் இப்ப லாக்கப்புல இருக்கார்...''

''அப்படின்னா நாம கெஸ் பண்ணினது சரிதான்...''

''ஆமா...''

இந்து கணவன் பரிதியிடம் திரும்பினாள் ''என்னங்க! நான் சொல்லலை...? லைப்ரரியி அந்த அமெரிக்கன் புக்கை புரட்டி பார்த்தப் கிடைச்ச அந்த போட்டோவை பார்த் நிமிஷத்திலிருந்தே எனக்கு சந்தேகம்தான்...''

பரிமளா புன்னகைத்தாள். ''மேடம்! நீங்க போட்டுக் கொடுத்த திட்டம் மாதிரியே செயல்படுத்தினோம். நான் பேஷண்ட்டாகவும் மிஸ்டர் சேகர் கணவராகவும் நடிச்சார் நாகராஜுக்கு ஆதரவா பேசற மாதிரியே நடிச்ச — அவர் வாயிலிருந்தே உண்மையை வரவழைச்சு மடக்கினோம்...''

''ரியலி திஸ் ஈஸ் க்ரேட் திங்க்...''

''எல்லாமே உங்க கைங்கர்யம்தான் மேடம்... டிபார்ட்மெண்ட் உங்களை தகுந்த முறையில் கௌரவிக்கும்ன்னு கமிஷனர் சொன்னார்...''

''அவார்டையோ, ரிவார்டையோ எதிர் பார்த்து.. இதை நான் பண்ணலை மிஸ்டர் சேகர்... ஒரு ரைட்டரோட ட்யூட்டி எழுதறது மட்டுமில்லை... இது மாதிரியான காரியங்களில் ஈடுபடறதும்தான்... ஒரு போலி டாக்டரை அடையாளம் கண்டுபிடிச்சு சட்டத்துக்கு முன்னாடி நிறுத்தி தண்டனையை வாங்கித் தர்றது ஒரு சந்தோஷமான விஷயம்...! அந்த நாகராஜ்க்கு குறைந்தபட்சம் என்ன தண்டனை கிடைக்கும் சேகர் ஸார்...?''

''ஆயுள் தண்டனை...''



6



## தோழமை

வீணையை விரல்கள்
மீட்டினால் நாதம் - விளையாடினால்
விரல்களில் காயம்.

''லாயர் ஸார்! இந்த கேஸை உடைக்கவே முடியாதா...?'' – குமாரலிங்கம் கவலையாய் கேட்க லாயர் நாகசுப்ரமண்யம் தலையை பலமாக ஆட்டினார்.

''சான்ஸே இல்லை... கேஸ் மஹா ஸ்ட்ராங். உங்க அண்ணன் நாகராஜ் கொலைக் கேஸில் மாட்டியிருந்தாக்கூட... என்னால திறமையா வாதாடி அவரை வெளியே கொண்டு வந்திருக்க முடியும்... ஆனா இது அப்பட்டமான மோசடி கேஸ்... உங்க ப்ரதர் நாகராஜ் க்ளியரா ஒப்புதல் ஸ்டேட்மெண்ட் வேற குடுத்துட்டார்... பேப்பர்ல வேறே ந்யூஸ் சாங்கோபாங்கமா வந்துவிட்டது... என்னால என்ன பண்ண முடியும்...? வெறுமனே கேஸ் கட்டை தூக்கிட்டு போய் – கோர்ட்ல என்னத்தை வாதாடறது...? ஜட்ஜ் கோழித் தூக்கம் போட்டுக்கிட்டே ஆயுள் தண்டனைன்னு ஜட்ஜ்மெண்ட் குடுத்துடுவார்.''

''வேற என்னதான் வழி லாயர்...?''

''விதிப்படி ஆகட்டும்ன்னு விட்டுட வேண்டியதுதான்... அந்த ஸ்டோரி ரைட்டர்

இந்துவதனா கெட்டிக்காரப் பொண்ணு. துல்லியமா போலீஸ் டிபார்ட்மெண்ட்டுக்கு திட்டம் போட்டு குடுத்திருக்கா... இது மாதிரியான மாஸ்டர் ப்ரெய்ன் ப்ளானெல்லாம் ஸ்காட்லாண்ட் யார்டு போலீஸுக்குத்தான் உதயமாகும்...'

குமாரலிங்கம் தன் இடது கைவிரல்களால் கன்னத்தைத் தேய்த்தான். உதடுகள் உள்ளுக்குள் முனகியது. ''இந்தவதனா...''

''இதோ பார் குமாரலிங்கம்... யோசிச்சு ஒரு பிரயோஜனமும் இல்லை. பப்ளிக் பிராசிகூட்டர்க்கு லட்டு மாதிரியான கேஸ்... வேற எந்த வக்கீல் கிட்டேயாவது போய் கேஸை நடத்தச் சொன்னா பணத்துக்குத்தான் கேடு...''

''நான் வர்றேன் லாயர் ஸார்...''

குமாரலிங்கம் எழுந்து காருக்கு வந்தான். ட்ரைவிங் சீட்டில் உட்கார்ந்து சிகரெட் பிடித்துக் கொண்டிருந்த அவனுடைய நண்பன் ராஜ மன்னார் புகை கசியும் வாயோடு கேட்டான்.

''என்ன சொல்றார் உங்க லாயர்...?''

''ரெண்டு கையையும் விரிச்சுட்டார். கேஸ் கான்க்ரீட் ஸ்ட்ராங்க். எதுவும் பண்ண முடியாதுன்னு சொல்லிட்டார்...''

அப்படீன்னா உங்கண்ணன் நாகராஜ் கம்பி என்ன வேண்டியதுதானா...?''

குமாரலிங்கம் காருக்குள் ஏறி உட்கார்ந் தான். பாக்கெட்டில் இருந்த சிகரெட்டை எடுத்து பற்ற வைத்துக் கொண்டு ''காரை நகர்த்து'' – என்றான்.



கார் உருண்டது.

சிறிது நேரம் வரை பேசாமல் இருந்த ராஜமன்னார் கேட்டான்.

''என்ன யோசிக்கிறே...?''

''அந்த ஸ்டோரி ரைட்டர் இந்துவதனாவை நீ பார்த்திருக்கிறாயா...?''

''நேர்ல பார்த்ததில்லை... போட்டோவில பார்த்திருக்கேன்...''

''வீடு எங்கே...?''

''தெரியலை...''

''அவ அட்ரஸை விசாரி...''

''எதுக்கு...?''

''அவளை நான் தண்டிக்கணும்...''

## 7



### சுயநலம்

சாரல் அடிக்கிறது
ஜன்னலைச் சாத்தும்போது -
மரக்கிளையில்
நனைந்தபடி ஒரு குருவி.

கல்லூரி இலக்கியக் கூட்டத்தில் மைக்கின் முன் நின்று சண்டமாருதமாய் பேசிக் கொண் டிருந்தாள் இந்துவதனா.

''நம்மை நாமே சில கேள்விகள் கேட்டுக் கொள்வோம். எண்ணற்ற சிறுகதைகளும் நாவல்களும் வெளிவந்து கொண்டிருக்கும் இந்த யுகத்தில் எந்த மாதியான கதைகளைப் படிப்பது சிறந்தது. படிக்கும் ஒரு நாவல் க்ரைம் நாவலாகவோ சமூக நாவலாகவோ, சரித்திர நாவலாகவோ, நகைச்சுவை நாவலாகவோ இருக்கலாம். ஆனால் அதில் துளியேனும் ஆபாசம் இருக்கக் கூடாது. காலம் மாறியுள்ள இந்த நேரத்தில் இப்போது நூற்றுக்கணக்கான எழுத்தாளர்கள் எழுதுகிறார்கள். லட்சக் கணக்கான வாசகர்கள் படிக்கிறார்கள். எல்லாக் கதைகளையுமே சீரஞ்சீவி சித்திரங்கள் என்று எழுத்தாளர்கள் மார்தட்டிக் கொள்ளவும் முடியாது. எல்லாவற்றையும் புற்றீசல்கள் என்று ஒதுக்கவும் முடியாது. கதை கொடுக்கும் உணர்ச்சி உயர்தர உணர்ச்சியாக இல்லா விட்டாலும் பரவாயில்லை; வெறும் மகிழ்ச்சி தருகின்ற கதையாக இருந்தால்கூட போதுமானது. ஆனால் ஒருபோதும் மனதில் உட்கார்ந்து கொண்டு கீழ்த்தர உணர்ச்சிகளை உண்டாக்கும் கதை – அதை எத்தகைய எழுத்தாளர் எழுதியிருந்தாலும் சரி அது நல்ல கதை அல்ல. ரசமாக இருக்க வேண்டும். விரசமாக இருக்கக் கூடாது. வாசகர்களின் மனதில் நன்றாக பதிந்து மகிழ்ச்சியூட்டும் கதையை நல்ல கதை என்று ஒப்புக் கொள்ளலாம்.''

கைத்தட்டல் எழுந்து ஓய்ந்ததும் – மறுபடியும் தொடர்ந்தாள் இந்து. ''எந்த ஒரு எழுத்தாளனும் மனிதாபிமானம் மிக்கவனாய்



இருக்க வேண்டும். மக்கள் மீது அன்பு கொண்டு, கருணை கொண்டு, இரக்கம் கொண்டு எழுதுவது பணம் சம்பாதிப்பதற்கு மட்டுமே என்கிற குறிக்கோள் இல்லாமல்... ஜனங்களுக்கு எதையாவது சொல்ல வேண்டும் என்று நினைக்கிறவனே உண்மையான எழுத்தாளன்.''

மாணவிகளின் மத்தியிலிருந்து கடல் அலையாய் கரகோஷம் எழுந்தது. இந்து கரகோஷம் அடங்கியதும் தொடர்ந்தாள். ''எழுத்தாளனுக்கு பொருளும் வேண்டும். புகழும் வேண்டும். இவை இரண்டும் இல்லா விட்டால் – கற்பனைகள் காய்ந்த சட்டியாய் வறண்டு போகும். எனக்கு எழுத்துப்பணி மட்டுமில்லை... எதையாவது செய்ய வேண்டும் என்கிற ஆர்வமும் எனக்கு இருக்கிறது. சட்டத்தை மதிக்காதவர்களால் சமுதாயம் சீரழிவுக்கு உள்ளாகும் கொடுமையை தடுக்க நாம் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். கறுப்பு பண முதலைகளையும், கடத்தல் பேர் வழிகளையும் – கலப்படக்காரர்களையும் நாம் இனம் கண்டு தோலுரித்து காட்ட வேண்டும். என் பேனா... நான்கு அங்குல நீளமுள்ள என் பேனா அந்த காரியத்தைச் செய்யும். நான் எழுதுவது வெள்ளைத் தாள்களில் அல்ல. எஃகுத் தகடுகளில்... என்று கூறி உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்.''

பேசி முடித்து மேடையினின்றும் கீழே இறங்கிய இந்துவை மாணவிகள் சூழ்ந்து கொண்டார்கள். ஆட்டோகிராப்புக்காக பாக்கெட் டயரிகளை நீட்டினார்கள்.

''மேடம்! உங்க பேச்சு... இன்னிக்கு அற்புதம்.''

''அப்படியா தேங்க்ஸ்...''

''நீங்க ஏன் சரித்திர கதை எழுதக் கூடாது...?''

''சாண்டியல்யனின் ஆத்மா என்னைத் திட்டும்...''

மாணவிகள் சிரித்தார்கள்.

''மதனகோபாலின் மறுபக்கம் தொடர்கதை உண்மைக் கதையா மேடம்?''

''ஆமா...''

''கதை என்னிக்கு தொடங்குது...?''

''அடுத்த வாரம்...''

''உங்களுக்கு பிடித்த எழுத்தாளர் யா...?''

''லட்சுமி...''

''உங்க கதைகளுக்கு ஏன் பரிசு கிடைக்கிறதில்லை...?''

''பரிசுக்குழுவில் எனக்கு வேண்டியவங்க யாருமில்லை...''

''உங்க எழுத்துப் பணிக்கு உங்க கணவர் எப்படி உதவுவார்...?''

''பேனாவுக்கு மை ஊற்றி கொடுப்பார் அவ்வளவுதான்.''

''உங்க கதைகளில் இன்னமும் 'கனம்' இருக்கனும்ன்னு ஒரு பெண் எழுத்தாளர் சொல்லியிருக்காரே... அதைப் பற்றி...?''

''கனம் வேணும்ன்னா புக்கோடு சேர்த்து ஒரு கல்லைக் கட்டிக்க வேண்டியதுதான்..



ஒரு படைப்பாளி எல்லாருக்கும் பிடிக்கிற மாதிரி கதை எழுத முடியாது. ஒரு காரியம் எல்லோரையுமே திருப்திப்படுத்தும்ன்னு நினைக்கிறது தப்பு. நான் என் மனசுக்குள்ளே பிரசவமான கருக்களை வெச்சு.... எனக்கு சரின்னு படற முடிவுகளை வெச்சு கதை எழுதறேன். என்னோட ஆத்ம திருப்திக்காக எழுதப்படுகிற கதைகள் எல்லோரையும் திருப்திபடுத்தும்ன்னு நினைக்கிறது தப்பு.''

''உங்க எதிர்கால லட்சியம் என்ன...?''

''சமுதாயத்தில் களைகளா முளைச்சிருக்கிற சில விஷ மனிதர்களை அடையாளம் கண்டுபிடிச்சு... அவங்களைப் பத்தி கதை எழுதப் போறேன்.''

''மாத நாவல்கள் பற்றி உங்க அபிப்பிராயம் என்ன?''

''எழுத்துலகில் அது ஒரு ஆரோக்கியமான விஷயம். மாத நாவல்கள் வந்த பின்னாடிதான் மக்களுக்கு படிக்கிற ஆர்வம் வந்திருக்கு... என்னைக் கேட்டா ரூபாய் குடுத்து டிக்கெட் வாங்கி சினிமாவை பார்க்கிறதைக் காட்டிலும்... ஒரு மாத நாவலை வாங்கி படிக்கிறது ஒரு உத்தமமான விஷயம்...''

''நீங்க சினிமாத்துறைக்கு போவீங்களா?''

''போறதாக எண்ணமில்லை...''

''அரசியலைப் பத்தி என்ன நினைக்க நீங்க...?''

''அது ஒரு அசிங்கம்...''

கல்லூரி பிரின்சிபால் கோதாவரி மாணவிகளை விலக்கிக் கொண்டு இந்துவை நெருக்கினாள்.

''வாங்க... என் ரூமுக்கு போலாம்...''

''நான் கிளம்பறேன்...''

''நோ... நோ... லைட்டா டிஃபன் பண்ணிட்டு போலாம்... ப்ளீஸ் கம்...'' கோதாவரி இந்துவின் கையைப் பிடித்து – கல்லூரியின் வளாகத்தில் இருந்த தன் அறைக்கு அழைத்துப் போனாள்.

''இந்த காலேஜ் கட்டி எத்தனை வருஷம் இருக்கும்...?''

''பத்து வருஷம்...''

''காலேஜ் 'ட்ரஸ்ட்' குழுவால் நடத்தப் படுதுன்னு கேள்விப்பட்டேன்.''

''ஆமா...''

''குழுவில்... மொத்தம் எத்தனை பேர்...''

''ஆறு பேர்...''

''அறைக்குள் நுழைந்தாள் பிரின்சிபால் கோதாவரி. அவளைத் தொடர்ந்து உள்ளே போன இந்து – சோபாவில் சபாரி அணிந்த நடுத்தர வயது நபர் உட்கார்ந்திருப்பதை பார்த்து நெற்றியைச் சுருக்கினாள்.

கோதாவரி புன்னகைத்தாள்.

''இவர் ட்ரஸ்ட் மெம்பர்களில் ஒருத்தரான மிஸ்டர் மதனகோபால். எக்ஸ் எம்.எல்.ஏ...''

மதனகோபால் மட்டமான செண்ட் வாசனை யோடு ஒழுங்கில்லாத பல் வரிசையைக் காட்டி ''வணக்கம்'' சொன்னார்.



இந்து வேண்டா வெறுப்பாய் தலை யசைத்து – வணக்கம் சொல்ல கோதாவரி எதிர் சோபாவைக் காட்டினாள். ''உட்கார்ங்க... இந்து...! நான் டிஃபன் ஏற்பாடுகளை கவனிச்சுட்டு அஞ்சு நிமிஷத்துல வந்துடறேன். அது வரைக்கும் மிஸ்டர் மதனகோபாலோடு பேசிட்டிருங்க...''

கோதாவரி நகர்ந்துவிட்டாள்.

காதுவரைக்கும் கிருதா வளர்த்திருந்த மதனகோபால் அதை இடதுகை விரல்களால் நெருடிக் கொண்டே சிரித்த குரலில் சொன்னார்.

''உங்களைப் பத்தி நான் நிறைய கேள்விப் பட்டிருக்கேன். ஆனா இன்னிக்குத்தான் முதல் தடவையா பாக்கறேன்...''

''நானும் உங்களைப் பத்தி கேள்விப் பட்டிருக்கேன்.''

மதனகோபால் மறுபடியும் புதிதாய் இளித்தார். ''நான் பொதுவா காலேஜில் நடக்கிற எந்த விழாவுக்கும் வந்து கலந்துக் கிறதில்லை. ஆனா நீங்க காலேஜ்ல பேசப் போறீங்கன்னு தெரிஞ்சதும் – எல்லா வேலைகளையும் தள்ளி வெச்சுட்டு வந்தேன். முக்கியமா உங்கக்கூட பேசத்தான் வந்தேன்...''

''என்ன பேசணும்...?''

''ஒரு வாரப் பத்திரிகையில் நீங்க எழுதப் போற தொடர் கதையோட தலைப்பை ஏதேச்சையாக படிச்சேன்...ஆச்சரியமாயிருந்தது. மதனகோபாலின் மறுபக்கம்ன்னு தலைப்பு வெச்சிருந்தீங்க... அதுக்கென்ன அர்த்தம்...?''

''மதனகோபாலின் மறுபக்கம்னா... அவரோட முதுகுன்னு அர்த்தம்...''

அவர் முகம் சிவந்தார்.

''நான் ஸீரியஸா கேட்டுகிட்டு இருக்கேன்...''

''நானும் ஸீரியஸாத்தான் பதில் சொல்லிட்டிருக்கேன்...'' குரலில் மரியாதை காணாமல் போனது. ''இதோ... பார் எனக்கு எல்லாம் தெரியும்...! போன வாரம் தூக்குல தொங்கின அந்த விக்டர் உன்னை பார்க்க ஆசைப்பட்டது; நீ போனது; அவன் தன்னோட கதையைச் சொன்னது; நீ அதை எழுதப் போறது – எல்லாமே எனக்குத் தெரியும். நான் ஆளும் கட்சி ஆளு.... என் காதுக்கு எல்லா விஷயமும் வந்துரும்...''

இந்துவும் மரியாதையை வாபஸ் வாங்கிக் கொண்டாள். ''நீ ஆளும் கட்சி ஆளா இருந்தா என்ன... ஆளாத கட்சி ஆளா இருந்தா என்ன...? என் பேனா யார்க்கும் பயப்பட்டு பழக்கமில்லை... வாரா வாரம் கதையை படிச்சுட்டு வாங்க... நான் இப்ப கிளம்பறேன்...'' எழுந்தாள்.

''நில்லு...''

நின்றாள்.

''உன் பேனா யார்க்கும் பயப்படாதுன்னு சொன்னே?''

''ஆமா...''

''அது நிஜம்னா உனக்கும் எனக்கும் ஒரு டீல்...''

''டீலா...?''



''ம்... பந்தயம்தான்...''

''என்ன...?''

''மதனகோபாலின் மறுபக்கத்தைப் பத்தி நீ கண்டிப்பா எழுதப் போறே?''

''ஆமா...''

''எந்த ஒரு சூழ்நிலையிலும் அந்தத் தொடரை பாதியில் நிறுத்த மாட்டே?''

''மாட்டேன்...''

''நான் சொல்றேன்... இந்தத் தொடரை நீ ரெண்டாவது அல்லது மூனாவது அத்தியாயத்திலேயே நிறுத்தப் போறே...?''

''கனவு கூட காணாதே...! உன்னோட பர்சனல் அண்ட் பொலிடிகல் வண்டவாளங்களை குறைந்தபட்சம் இருபத்தஞ்சு வாரமாவது எழுதப் போறேன்...''

''இங்கதான் உனக்கும் எனக்கும் பந்தயம்...''

''என்ன...?''

''உன் கூட விளையாடப் போறேன்... நீயாகவே தொடரை நிறுத்தும்படியா பண்ணப் போறேன். இது உனக்கும் எனக்கும் மத்தியில் நடக்கிற பனிப்போர். போலீஸ் உதவியை நாடாமே நீ என்னை எதிர்த்து செயல்படணும். உன்னால் முடியுமா...?''

''நீ சொல்றது எனக்கு புரியலை...''

''புரியும்படியாவே சொல்றேன்... என்னைப் பத்தின தொடர் கதையை நீ எழுதியே தீர்றதுங்கிற முடிவில் இருக்கே. அதை நிறுத்தற


முயற்சியில் நான் இறங்கியிருக்கேன். என்னால உன்னோட உயிர்க்கு எந்த ஆபத்தும் வராது. உன்னோட எழுத்துத் திறமையை எதிர்த்துதான் நான் போராடப் போறேன். இந்தப் போராட்டம் நடக்கிறது வெளியே இருக்கிற யாருக்கும் தெரியக் கூடாது. உன்னோட புருஷனுக்குக் கூட தெரியக் கூடாது. போலீஸ் உதவியைத் தேடியும் நீ போகக் கூடாது... சம்மதமா...?''

''அதாவது நீ என்னோடு மோதப் போறது இல்லை; என்னோட எழுத்துத் திறமை யோடுதான் மோதப் போறே...?''

''ஆமா....''

''சவாலை ஒத்துக்கிறேன்...''

தன் இடதுகை கட்டை விரலை – மதனகோபாலின் முகத்துக்கு நேரே நீட்டினாள் இந்து.



பாங்க் அலுவலகம். மாலை ஐந்தரை மணி.

லெட்ஜரை மூடிவிட்டு – கைகளை உயரத்தூக்கி சோம்பல் முறித்தான் பரிதி. பக்கத்து டேபிள் சிவராஜ் கேட்டான்.

''என்ன கிளம்பியாச்சா...?''

''ம்...'' லெட்ஜரை டேபிளின் மூலைக்குத் தள்ளியபடியே எழுந்தான் பரிதி.



''நாளைக்கு காலையில் பத்து மணிக்கு பேங்க் வரும்போது நான் சொன்னதை மறந்துடாதே...''

''என்ன சொன்னே...?''

''நீ ஒரு சரியான ட்யூப்லைட்டுடா...! 'மதனகோபாலின் மறுபக்கம்' தொடர்கதையோட ரெண்டாவது அத்தியாயம் ஜெராக்ஸ் காபி இருந்தா எடுத்துகிட்டு வாடான்னு மத்தியானமே சொன்னேன்....''

''ஓ... அதுவா... ஞாபகம் வருது... வருது...''

''கண்டிப்பா கொண்டு வரணும்... தொடர்கதை 'ஜேஜே'ன்னு அமர்க்களமா ஆரம்பிச்சிருக்கு... அடுத்த வாரம் வந்து ரெண்டாவது அத்தியாயத்தை படிக்கிறதுக் குள்ளே... என்னால தாக்குபிடிக்க முடியாது... அதான் ரெண்டாவது அத்தியாயத்தை கேக்கறேன்...''

''கண்டிப்பா கொண்டு வர்றேன்... கிளம்பட்டுமா...?''

ஸ்கூட்டர் சாவியை சுழற்றிக் கொண்டு – பாங்க் கட்டிடத்தை விட்டு வெளியே வந்து – பின்புறம் இருந்த டூ வீலர்ஸ் பார்க்கிங்கிற்கு வந்தான்.

வரிசையாய் ஸ்கூட்டர்களும் பைக்குகளும் நின்றிருக்க தன் எல்.எம்.எல். வெஸ்பாவை நெருங்கி – அதன் தொண்டைக்குழிக்கு சாவி கொடுத்தான். ஸ்டாண்ட்டை விடுவித்து – ஸ்டார்ட் செய்வதற்காக தள்ளியபோது அந்த வித்தியாசத்தை உணர்ந்தான்.

பின்பக்க டயரில் காற்று இறங்கி போயிருக்க ஸ்கூட்டர் நகர சிரமப்பட்டது.

பரிதி ஆச்சர்யப்பட்டான்.

'மத்தியானம் லஞ்சுக்கு போய்விட்டு — பாங்க்குக்கு திரும்பியபோது டயரில் காற்று இருந்ததே...?'

'வண்டிக்கு ஸ்டெப்னியும் கிடையாது. கொஞ்சம் தொலைவில் பீடிப் புகையோடு இருந்த கேட்கீப்பரை கூப்பிட்டான்.

''முத்துச்சாமி...''

அவன் பீடியை எறிந்துவிட்டு ஓடி வந்தான்.

''ஸார்...''

''ஸ்கூட்டரில் காத்து இறங்கியிருக்கு... நான் வண்டியை விட்டுட்டு ஆட்டோவில் போறேன்...நீ டயரை வல்கனைஸ் பண்ணிடு...''

''சரி... ஸார்...''

''மறந்துடாதே...! இந்தா ஐம்பது ரூபாயை வெச்சுக்க...'' பணத்தைக் கொடுத்துவிட்டு — பாங்க் கட்டிடத்தை விட்டு வெளியே வந்தான்... பரிதி. போக்குவரத்து கறைந்த அந்த ரோட்டில் — ஆட்டோ கிடைக்குமா என்று நின்று பார்த்துக் கொண்டிருந்த விநாடி — அந்த அம்பாசிடர் கார் பக்கத்தில் வந்து நின்றது.

காரின் பின் சீட்டில் உட்கார்ந்திருந்த அந்த இளைஞன் வெளியே தலையை நீட்டி ''வணக்கம் ஸார்... நீங்க எழுத்தாளர் இந்துவதனாவோட ஹஸ்பெண்ட்தானே...?'' என்று கேட்டான்.

''ஆமா...''



''உங்க மனைவியோட தீவிர வாசகர் ஸார்.''

''அப்படியா சந்தோஷம்...''

''என்ன ஸார்... இங்கே நின்னுட்டிருக்கீங்க...?''

''இதான் நான் வேலை பார்க்கிற பேங்க்... வீட்டுக்குப் புறப்பட்ட நேரத்தில் ஸ்கூட்டர் பங்க்ச்சர். அதனால ஆட்டோ கிடைக்குமோன்னு பார்த்துட்டிருந்தேன்.''

''நீங்க எங்க ஸார் போகணும்...?''

''கார்டன் அவென்யூ...''

''ஏறுங்க ஸார். ட்ராப் பண்ணிடறேன்...''

''நோ... நோ... உங்களுக்கு எதுக்கு சிரமம்...! நான் ஒரு ஆட்டோ பிடிச்சு போய்க்கிறேன்...''

''என்னது உங்களை ட்ராப் பண்றதுல சிரமமா...? ஒரு புகழ்பெற்ற எழுத்தாளரோட ஹஸ்பெண்டா உங்களுக்கு இந்த உதவியைப் பண்றதுல... எனக்கு... சந்தோஷம்தான் ஸார்... ப்ளீஸ் கெட் இன்...''

அந்த இளைஞன் கதவைத் திறந்துவிட — ஒரு சின்ன தயக்கத்தோடு பிறகு உள்ளே நுழைந்தான் பரிதி. அவன் உட்கார்ந்ததும் கதவு சாத்தப்பட்டு கார் நகர்ந்தது. வளைவில் திரும்பியதும் பரிதி அந்த இளைஞனை ஏறிட்டான்.

''உங்க பேரைத் தெரிஞ்சுக்கலாமா...?''

''என் பேர் ஜெயக்குமார் ஸார். கங்கா நகர்ல டிராவல் ஏஜென்ஸி ஒண்ணை நடத்திட்டு வர்றேன். உங்க மனைவியோட பரம வாசகன்

ஸார். எந்த புக்குல அவங்க பேரைப் பார்த்தாலு[ம்] உடனே வாங்கி படிச்சுடுவேன்... எப்படி ஸா[ர்] இவ்வளவு அற்புதமா ஒவ்வொரு கதையையு[ம்] எழுதறாங்க...?''

''அதெல்லாம்... காட்ஸ் கிஃப்ட் தான்... ஆண்டவன் சில பேரை செலக்ட் பண்ண[ி] ஒவ்வொரு திறமையா கொடுத்திருக்கா[ன்] எஸ்.பி.க்கு குரல் வளம், இளையராஜாவுக்கு இசை, சிட்டிபாபுவுக்கு வீணை, அபாரமா[ன] ஓட்டத்துக்கு பி.டி.உஷா. அதுமாதிரி தா[ன்] எழுத்துக்கு என் ஒய்ஃப்பை செலக்ட் பண்ண[ி] அந்த திறமையை கொடுத்திருக்கார்...''

''உங்க ஒய்ஃப் எந்த நேரத்துல கதை எழுதுவாங்க ஸார்...?''

''பெரும்பாலும் விடியற்காலை நேரத்துல...''

''எழுதப்போற கதையைப் பத்தி உங்ககிட்ட அவங்க சொல்வாங்களா ஸார்?''

''ம்... சொல்லி டிஸ்கஸ் பண்ணிட்டுதான் எழுதவே ஆரம்பிப்பா...''

''இப்ப என்ன கதை எழுதிட்டிருக்காங்க ஸார்...?''

''மதனகோபாலின் மறுபக்கம்...''

''ம்... விளம்பரம் பார்த்தேன். உண்மைக் கதைன்னு போட்டிருந்தது. யார் ஸார் அந்த மதனகோபால்...?''

''கதையை ரெகுலரா படிச்சிட்டு வாங்க... புரிஞ்சுக்குவீங்க...''

''ஸார்...! ஒரு ரிக்வெஸ்ட்...?''

''என்ன...?''



''போற வழியிலதான் என்னோட வீடு. இறங்கி ஒரு கப் காப்பி சாப்பிட்டு போலாமா...?''

''இன்னொரு நாளைக்கு வர்றேனே...?''

''இப்ப விட்டா உங்களை எப்ப ஸார் பிடிக்க முடியும்...? பத்தே நிமிஷம்...! என் வீட்டுக்கு வந்து காப்பி சாப்பிட்டீங்கன்னா... எனக்கு பெருமையா இருக்கும். என் ஒய்ஃப்பும் ரொம்ப சந்தோஷப்படுவா...''

''வீடு எங்கே...?''

''போற வழியில முல்லை நகர் ஸார்...''

''எக்ஸ்டன்ஷன் ஏரியாவா...?''

''ஆமா ஸார்...''

''லேட்டாயிடுமே...?''

''ஒண்ணும் லேட்டாகாது சார்... நீங்க காப்பி சாப்பிட்டதுமே புறப்பட்டுடுவோம்...! ட்ரைவர்! காரை நம்ம வீட்டுக்கு திருப்பு...''

கார் வேகத்தைக் குறைத்துக் கொண்டு – இடது பக்க வளைவில் திரும்பியது.

## 9



**சந்தர்ப்பம்**

நிமிடங்களில் தவறவிட்டு
யுகங்களில் வாழ்க்கையைத்
தேடினால்
என்ன மிஞ்சும்...?

‘‘**வா**ய்யா மதனகோபால்...! என்கூட பேசணும்ன்னு நாலைஞ்சு தடவை போன் பண்ணியிருந்தியாமே...’’ – அமைச்சர் தங்கராசன். தோளில் சரிந்த துண்டை சரி செய்து கொண்டே கேட்டார்.

‘‘ஆமாண்ணே... ஒரு பிரச்சனை...’’

‘‘உட்கார்ந்து சொல்லு...’’

மதனகோபால் சோபாவில் உட்கார்ந்தபடியே – கேட்டார் ‘‘கதை எழுதற பொம்பளை இந்து வதனாவை உங்களுக்கு தெரியுமாண்ணே?’’

‘‘பார்த்ததில்லை... ரெண்டு மூணு கதைகளை படிச்சிருக்கேன். அவ்வளவுதான்... ஏன் எதுக்கு கேக்கறே...?’’

‘‘அவ கற்பனைக் கதைகளை அதிகமா எழுதறதில்லைண்ணே...! ஊர்ல நம்ம மாதிரி இருக்கிற பெரிய மனுஷங்களோட மறு பக்கங்களை கிளறி – விஷயங்களை பக்காவா சேர்த்துகிட்டு எழுதறா...’’

‘‘அப்படியா...?’’

‘‘கடந்த ரெண்டு வாரமா ஒரு வாரப் பத்திரிக்கையில் மதனகோபாலின் மறுபக்கம் என்கிற தலைப்புல என்னைப் பத்தி எழுத ஆரம்பிச்சிருக்கா...’’

‘‘ஆமா...! போஸ்டர்ல விளம்பரம் பார்த்தேன். அந்த மதனகோபால் நீதானா...?’’

‘‘ஆமாண்ணே...!’’

‘‘உன்னைப் பத்தி அது எப்படி எழுதப் போச்சு...?’’



‘‘அதையேண்ணே கேக்கறீங்க... விக்டர்ன்னு ஒருத்தன். ரெண்டு வாரத்துக்கு முந்தி அவனை தூக்குல போட்டுட்டாங்க. விக்டர் பண்ணின குத்தம் பெண்டாட்டியையும் மாமியாரையும் வெட்டிக் கொன்னுட்டான். காரணம்...?’’

‘‘புரியுது... விக்டரோட பெண்டாட்டியை நீ தொட்டுகிட்டு இருந்தே...?’’

‘‘ஆமாண்ணே!’’

‘‘இப்ப அந்த விஷயம்... இந்து வதனாவுக்கு தெரிஞ்சு போச்சு. அவ பேனாவை எடுத்துட்டா...’’

‘‘ஆமாண்ணே...!’’

‘‘அந்தக் கதையை அவ எழுதாமே பண்ணனும்...?’’

‘‘அதேதாண்ணே...!’’

‘‘மதனகோபால்! இந்த உலகத்துல யாரை வேணுமின்னாலும்... பகைச்சுக்கலாம்... ஆனா பத்திரிக்கைக்காரங்களையும், எழுத்தாளர் களையும் மட்டும் பகைச்சுக்கக் கூடாது. அவங்க கிட்டே இருக்கிறது பேனா இல்லை. கூர்வாள்... அந்த கூர்வாளுக்கு பெரிய பெரிய தலைகள் எல்லாம் உருண் டிருக்கு...’’

‘‘அண்ணே! நீங்க இப்ப மினிஸ்டர் போஸ்டில் இருக்கீங்க. உங்க அதிகாரத்தை பயன்படுத்தி அவளைக் கொஞ்சம் தட்டி வைக்கலாமே...’’

‘‘என்ன பண்ணலாம்ங்கிறதை நீயே சொல்லு...’’

''அவளோட தொடர்கதைகளை வெ
யிடும் பத்திரிகைகளுக்கு பேப்பர் கோட்ட
கிடையாதுன்னு மிரட்டிப் பார்த்தா என்ன...?

''இப்ப அவ எந்தெந்த பத்திரிகைகளுக்
தொடர்கதை எழுதிட்டிருக்கா...?''

''உன்னைப் பத்தின தொடர்கதை எந்த
பத்திரிக்கையில் வந்துட்டிருக்கு?''

''கண்ணாடி'ங்கிற பத்திரிக்கையில்''

''போன் நெம்பர் தெரியுமா...?''

''தெரியும்...''

''ஒரு பேப்பர்ல குறிச்சுக் கொடு...''

மதன கோபால் குறித்துக் கொடுத்தது
– மினிஸ்டர் தங்கராசன் பின்பக்கம் திரும்
''ரமணன்'' – என்று குரல் கொடுத்தார்.

வெள்ளை சர்ட் வேஷ்டியில் ஒரு நப
உள்ளே வந்தார்.

''ஸார்...''

''இது ஒரு பத்திரிகை ஆபீஸோட போ
நம்பர். எடிட்டரை போன்ல பிடிச்சு... எழுத்தா
இந்துவதனா எழுதற தொடர்கதை
உடனடியா நிறுத்தம்படி சொல்லுங்க. அ
ஏதாவது அப்போஸ் பண்ணினா... பேப்
கோட்டாவை நிறுத்திடுவோம்னு த்ரட்ட
பண்ணுங்க...''

''எஸ்... ஸார்...''

''எம் முன்னாடியே போன் பண்ணுங்க...

மினிஸ்டரின் செயலாளரான ரமணன்
டீபாயின் மேலிருந்த போனைத் தொட்
ரிஸீவரை எடுத்துக் கொண்டார். டயலை



சுழற்றிவிட்டு – பேசினார்.

''எஸ்...?''

''எடிட்டர் இருக்காரா...?''

''நீங்க யார் பேசறது...?''

''ஸோசியல் வெல்ஃபேர் மினிஸ்டர்
ஆபீஸிலிருந்து அவரோட பி.ஏ.பேசறேன்...''

''ஒரு நிமிஷம் லைன்ல இருங்க...''

ரமணன் காத்திருந்தார்.

சில விநாடிகளுக்குப் பின் எடிட்டரின் குரல்
கேட்டது.

''வணக்கம்.''

''ஸோசியல் வெல்ஃபேர் மினிஸ்டர்
ஆபீஸிலிருந்து பி.ஏ. பேசறேன்.''

''சொல்லுங்க ஸார்...''

''உங்க பத்திரிக்கைக்கு இப்போ...பேப்பர்
கோட்டா ஒழுங்கா வந்துட்டிருக்கா...?''

''வந்துட்டிருக்கே...!''

''இனிமே அது வரணுமா வேண்டாமா...?''

''என்ன ஸார்... பேச்சு தொனியெல்லாம்
ஒரு மாதிரியா இருக்கு...?''

''கேட்ட கேள்விக்கு பதில் சொல்லுங்க...
பேப்பர் கோட்டா உங்க பத்திரிக்கைக்கு
வரணுமா வேண்டாமா...?''

''வரணும்...''

''அப்படீன்னா நீங்க ஒரு காரியம்
பண்ணனும்...''

''என்ன...?''

''இப்ப உங்க பத்திரிக்கையில் வெளி வந்துட்டிருக்கிற தொடர்கதையை நிறுத்தனும்.''

''அதுல மூணு தொடர்கதை வந்துட் டிருக்கு. எதை நிறுத்தச் சொல்றீங்க...?''

''இந்துவதனா எழுதற தொடர்கதையை...''

''எதுக்காக நிறுத்தனும்...?''

''காரணமெல்லாம் கேட்டுகிட்டு இருக்காதீங்க... அந்த தொடர்கதையை நிறுத்திடுங்க... இது மேலிடத்து உத்தரவு...''

மறுமுனையில் எடிட்டர் சிரித்தார். ''மன்னிக்கனும். தகுந்த காரணம் இல்லாமே... வெளி வந்துட்டிருக்கிற ஒரு தொடர்கதையை திடீர்னு நிறுத்த முடியாது. வாசகர்களுக்கு நான் பதில் சொல்லியாகணும்... அதுவுமில்லாம இந்துவதனா ஆரம்பிச்சிருக்கிற இந்த தொடர் கதை வாசகர்களுக்கு மத்தியில் பரபரப்பாக போயிட்டிருக்கு...''

''உங்ககிட்டயிருந்து எந்தவிதமான விளக்கமும் எங்களுக்கு வேண்டாம். இந்து வதனா எழுதற தொடர்கதையை நிறுத்த முடியுமா... முடியாதா...?''

''தொடர்கதையை நிறுத்தறது சாத்திய மில்லை...''

''பேப்பர் கோட்டா... வராது...''

''என்ன மிரட்டறீங்களா...? இந்த பத்திரிகைத் துறையில் இருப்பத்தஞ்சு வருஷமா நான் இருக்கேன். பத்திரிகைத் துறையை மிரட்டி அதுமேல கை வெச்ச எந்த அரசாங்கமும் நிலைச்சு நின்னதில்லை... நீங்க எங்க பத்திரிகைக்கு பேப்பர் கோட்டாவை நிறுத்தினா அதனோட விளைவுகள் வேறுவிதமா



இருக்கும்... உங்களை அப்படிப் பேசச் சொன்னவங்க கிட்ட சொல்லுங்க, தொடர் கதையை நிறுத்த முடியாது... இருபத்தஞ்சு வாரங்களுக்கு அது வெளிவந்தே தீரும்...''

சற்று காரமான குரலில் சொன்ன எடிட்டர் ரிஸீவரை 'டொக்'கென்று வைத்துவிட பி.ஏ.ரமணன் மினிஸ்டரை தயக்கமாய் ஏறிட்டார்.

''எடிட்டர் மசியலை ஸார்...''

''என்னதான் சொல்றார்...?''

''அந்த தொடர்கதை இருபத்தஞ்சு வாரங்களுக்கு வந்தே தீருமாம்.''

''சரி... நீங்க போங்க... நானே இந்த பிரச்சனையை டீல்' பண்ணிக்கிறேன்...''

ரமணன் நகர்ந்து போனதும் – மினிஸ்டர் தங்கராசன் மதனகோபாலை ஏறிட்டார்.

''எடிட்டர் முரண்டு பிடிக்கிறாரே...? நாம ஏதாவது அடாவடித்தனமா பண்ணப்போய் பிரச்சனை பெரிசாயிட்டா... எதிர்க்கட்சிக்காரங் களுக்கு கொண்டாட்டம் ஆயிடும்... இந்த விவகாரத்தை நீ கண்டுக்காமே இருந்துடறது நல்லது... அந்த பொம்பளை என்னத்தையோ எழுதிட்டு போறா...''

''அண்ணே! அவ தொடர்கதை எழுதிட் டிருக்கிற பத்திரிகை பத்து லட்சம் வரைக்கும் விக்கற பத்திரிகை. அதிலும் அவ கதைன்னா ஜனங்களுக்கு ரொம்ப ரொம்ப ஈடுபாடு... அவ அந்த கதையை எழுதிட்டாள்ன்னா... என்னோட இமேஜ்... அரசியல் வட்டாரத்திலேயும் சரி.. தனிப்பட்ட முறையிலேயும் சரி மளமளன்னு சரிஞ்சுடும்...''

மினிஸ்டர் நெற்றியைச் சொறிந்தார்.

''அப்படின்னா ஒரு காரியம் பண்ணு...''

''என்னண்ணே...?''

''வா... இப்படி வந்து பக்கத்துல உட்காரு...''


மதனகோபால் எழுந்து போய் – மின்ஸ்டருக்கு பக்கத்தில் போய் உட்கார்ந்ததும் அவர் குரலைத் தாழ்த்திக் கொண்டு மெல்லிய குரலில் பேச ஆரம்பித்தார்.

பேசப் பேச – மதனகோபால் திடுக்கிட்டார்.

''அண்ணே! இது... இது...''

''தைரியமா காரியத்துல இறங்கு...! எது வந்தாலும் நான் பார்த்துக்கிறேன்...''

''மதனகோபால் தலையாட்டினார்.




## அவசர உலகம்

**சிதைந்த உடல் தண்டவாளத்தில்**
**சலித்த மனங்கள் கணக்குப்**
**போட்டது.**
**கால தாமதத்தை.**

**கா**ர் முல்லைநகர் எக்ஸ்டென்ஷன் ஏரியாவுக்குள் நுழைந்து – புதிது புதிதாய் கட்டிடங்கள் முளைத்துக் கொண்டிருந்த



பரப்புகளைத் தாண்டி – கடைசி குறுக்கு வீதியில் புகுந்து – ஒரு சிறிய பங்களாவின் காம்பௌண்ட் கேட்டுக்குள் பிரவேசித்தது.

''இதான் வீடு...இறங்குங்க ஸார்...''

''லேட் பண்ணிடாதீங்க...''

''பத்தே நிமிஷம் ஸார்... காப்பி சாப்டுட்டு நீங்க கிளம்பிட்டே இருக்கலாம்...''

பரிதி இறங்கி – அந்த இளைஞனைத் தொடர்ந்தான். அது புதிதாய் கட்டப்பட்டுக் கொண்டிருக்கிற வீடு என்பது ஈரமான சிமெண்ட், பெயிண்ட் மணத்தில் தெரிந்தது. வரவேற்பறையைத் தாண்டி ஹாலுக்குள் நுழைந்தார்கள்.

காஷ்மீர் கார்ப்பெட்டும் – குஷன் சோபாவும் பார்வையை இடறியது. இளைஞன் பவ்யமாய் சொன்னான்.

''உட்கார்ங்க ஸார்...''

பரிதி சுற்றும் முற்றும் – பார்த்துக் கொண்டே உட்கார்ந்தான்.

''என்ன சாப்ட்றீங்க... டீ... காபி...?''

''ஏதாவது ஒண்ணு... அரை டம்ளர் போதும்...?''

இளைஞன் இண்டர்காமை எடுத்து ''ரெண்டு காப்பி...'' – என்று சுருக்கமாக சொல்லிவிட்டு ரிஸீவரை வைத்தான்.

''வீடு எப்படியிருக்கு ஸார்...?''

''ஃபைன்... ஆர்க்கிடெக்ட் யாரு...?''

''என்ஜினீயர் பவானி சங்கர்தான்...''

''நல்லா டிசைன் பண்ணியிருக்கார்...

கம்ப்ளீட் மார் பிளே போட்டுட்டீங்களே...?''

''நோ... நோ... ஹாலுக்கு மட்டும்தான் மார்பிள். உள்ளே இருக்கிற ரூம்ஸ்க்கெல்லாம் ஸ்பார்டெக்தான்...''

''எலிவேஷனுக்கு என்ன ஸ்டோன்?''

''டோல்பூர்... ரோஸ்...''

காப்பி டம்ளர்களை ஏந்தியபடி ட்ரைவரே உள்ளிருந்து வந்தான். டீபாயின் மேல் ட்ரேயை வைத்துவிட்டு தள்ளி நின்றான்.

''காபி எடுத்துக்குங்க ஸார்...''

''தாங்க்ஸ்...''

பரிதி ஒரு டம்ளரை எடுத்து – உதட்டுக்கு கொண்டு போனான். அதே வினாடி இளைஞன் கேட்டான்.

''உங்க ஒய்ஃப்புக்கு கதை எழுதற இந்த தொழிலில் மாசத்துக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கும்...?''

பரிதி அந்தக் கேள்வியை விரும்பவில்லையென்றாலும், ''அது... ராயல்டி பர்சென்டேஜைப் பொறுத்தது...''

''எப்படியும் மாசம்... பத்தாயிரம் தேறும் இல்லையா...?''

''ம்... ம்...''

''அப்படின்னா உங்க பேங்க் சம்பாத்தியம் இல்லாமலேயே... அவங்களாலே குடும்பம் நடத்த முடியும் இல்லையா...?''

பரிதி காப்பி குடிப்பதை நிறுத்தி – டம்ளரை கீழே வைத்தான். ''உங்க பேச்சு நாகரீகமா இல்லை... நான் கிளம்பறேன்...''



''அடேடே... கோபப்பட்டுட்டீங்களே... ஸார்...! நீங்க உயிரோடு இல்லைன்னா... உங்க மனைவியாலே குடும்பம் நடத்த முடியுமா முடியாதான்னு தெரிஞ்சுக்கத்தான்... அந்தக் கேள்வியைக் கேட்டேன்...''

''நான்சென்ஸ்... என்ன உளர்றீங்க!''

''உங்க மனைவியோட பொட்டுக்கும் பூவுக்கும் நீங்க குடுத்த லைசென்ஸ் காலாவதியாயிடுச்சுன்னு சொல்ல வர்றேன்... இன்னிக்கு ராத்திரி பதினோரு மணியிலிருந்து பனிரெண்டு மணிக்குள்ள நீங்க சாகப்போறீங்க... உங்க ஸ்கூட்டரை பங்க்சர் பண்ணினதிலிருந்து நீங்க இங்கே நிக்கிற இந்த நிமிஷம் வரைக்கும் எங்க பாஸோட பிளான்தான்...''

''பாஸ்...?''

''ராத்திரி பத்து மணிக்கு வருவாங்க... அப்ப பார்த்துக்கலாம்.''

பரிதி பயமாய் பின்வாங்க –

பக்கத்தில் நின்றிருந்த – டிரைவர் வேகமாய் வந்து –

வலது கையை உயர்த்தி கழுத்தில் ஒரு போடு போட்டான்.

பரிதி சரிந்தான்... கண்மூடி.

''ரத்தினம்...''

''ஸார்...''

''இவனை உன் ரூம்ல பூட்டி வை...!''

ரத்தினம் பரிதியை இழுத்துக் கொண்டு போனான்.

# 11



## குழந்தைகள்

இரண்டானால் தென்றல் காற்று,
இரண்டுக்கு மேலானால்
மூச்சுத்திணறும்...
போபால் விஷக்காற்று.

எழுதிக் கொண்டிருந்த இந்து பேனாவை அப்படியே வைத்துவிட்டு – சுவர்க் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே எழுந்தாள்.

மணி ஏழே முக்கால்.

'எங்கே இவரை காணோம்...? ஆறு மணிக்கெல்லாம் வீட்டில் இருப்பாரே...?'

'ஏதாவது ஆடிட்டிங்கா...?'

''அப்படி ஏதாவது இருந்தால் இந்நேரம் போன் பண்ணி சொல்லியிருப்பாரே...?'

வாசலுக்கு வந்து தெரு முனையை எட்டிப் பார்த்தாள். கார்ப்பரேஷன் விளக்குகள் எரியாததால் –

தெரு முழுவதும் இருட்டாய் இருந்தது.

'ஃப்ரண்ட்ஸோடு சேர்ந்து கொண்டு – ஹோட்டல், சினிமா என்று கிளம்பிப் போய்விட்டாரோ...?'

'அப்படி போகக்கூடியவர் அல்லவே...'



மறுபடியும் அவள் ஹாலுக்கு திரும்பிய போது – உள்ளே டெலிபோன் அடித்தது. இது அநேகமாய் அவராகத்தான் இருக்கும் என்கிற அவசர உணர்வோடு போய் ரிஸீவரை எடுத்தாள்.

''ஹலோ...''

''வணக்கம்மா... மங்கையர் திலகம் பத்திரிகையிலிருந்து பேசறோம்...''

''வணக்கம்...''

''தீபாவளி மலர்க்கு ஒரு சிறுகதை வேணும். எடிட்டர் உங்களுக்கு முன்னாடியே லெட்டர் போட்டிருக்கிறதா சொன்னார்...''

''ஆமா... லெட்டர் வந்தது...''

''கதை எப்பங்கம்மா கிடைக்கும்...?''

''உங்களுக்கு என்னிக்கு வேணும்...?''

''அடுத்த புதன்கிழமைக்குள்ளே கிடைச்சா பரவாயில்லை...''

''பத்திரிகை ஆபீஸிலிருந்து யாரையாவது அனுப்புங்க... புதன் கிழமை காலைல பதினோரு மணிக்கு கதை ரெடியா இருக்கும்...''

''ரொம்ப நன்றிங்கம்மா...'' – மறு முனையில் ரிஸீவர் வைக்கப்பட்டுவிட – இந்து ரிஸீவரை கீழே வைக்காமல் – டயலைச் சுழற்றினாள். மறுமுனையில் நான்கைந்து தடவை ரிங் போன பிறகு ரிஸீவர் எடுக்கப் பட்டது.

''ஹலோ...'' ஒரு ஆண் குரல் விளித்தது.

''அது பஞ்சாப் நேஷனல் பேங்க் தானே...?''



4

''ஆமா...''

''அங்கே மிஸ்டர் பரிதி இருந்தா கூப்பிட்டு விடமுடியுமா...?''

''நீங்க யார் பேசறது...?''

''அவரோட மனைவி...''

''அம்மா... நீங்களா...? நான் பேங்க் வாட்ச்மேன் முத்துச்சாமி பேசறேன்... அய்யா புறப்பட்டு போயிட்டாரேம்மா...''

''புறப்பட்டு போயிட்டாரா...? எப்ப...?''

''அஞ்சரை மணிக்கே...! அவரோட ஸ்கூட்டர் பங்க்சர் ஆயிட்டதாலே... என்னை... வல்கனைஸ் பண்ணச் சொல்லிட்டு அவர் புறப்பட்டுட்டார்...''

''எதுல போனார்...? ஆட்டோவா...?''

''தெரியல்லீங்கம்மா...! பேங்க் கட்டிட வாசலை தாண்டறதைப் பார்த்தேன். அவ்வளவு தான்...''

''பேங்க்ல வேற யார் இப்போ இருக்காங்க...?''

''யாரும் இல்லீங்கம்மா... பேங்க்கை பூட்டியாச்சு...! அய்யா இன்னும் வீட்டுக்கு வரல்லீங்களா...?''

''வரலை...''

''சிநேகிதர் வீட்டுக்கு போயிருக்கலாம்மா''

இந்து ரிஸீவரை வைத்துவிட்டு –

அருகில் இருந்த சோபாவில் உட்கார்ந் தாள். பார்வை சுவர் கடிகாரத்துக்கு போயிற்று.



நேரம் 7.55.

'ஒரு நாளும் இப்படி லேட்டான தில்லையே...?'

இந்துவின் நெற்றி டென்ஷனில் மெல்ல வியர்த்தது.

எட்டு மணி அடித்த போது –

டெலிபோன் மறுபடியும் கூப்பிட்டது.

வேகவேகமாய் போய் ரிஸீவரை எடுத்தாள்.

''ஹலோ...''

''எழுத்தாளர் இந்துவதனாங்களா...?''

''ஆமா...''

''நான் உங்க வாசகன்... நீங்க எழுதின கதைகள்ன்னா எனக்கு உயிர். உடனே படிச்சுடுவேன்...''

''சந்தோஷம்...''

''எனக்கொரு ஆசை...''

''சொல்லுங்க...''

''நான் ஒரு தலைப்பு சொல்றேன்... அதுக்கு தகுந்த மாதிரி உங்களாலே கதை எழுத முடியுமா...?''

''என்ன தலைப்பு...?''

''ஒரு பஞ்சவர்ணக்கிளி வெள்ளைப்புறா ஆகிறது...''

தலைப்பை இந்து மனதில் வாங்கி பதிய வைப்பதற்குள்... மறுமுனையில் ரிஸீவர் அவசர அவசரமாய் வைக்கப்பட்டது.

''டொக்...!''

## 12



## சேமிப்பு

நானும் என் நினைவுகளும்
குருவியும் அதன் சேமிப்பு
நெல் மணிகளுமாய்.

முல்லைநகர் எக்ஸ்டென்ஷன்.

நேரம் பத்தரை மணி.

பியட் காரில் வந்து இறங்கினார்கள் குமாரலிங்கமும், ராஜமன்னாரும், அந்த இளைஞனும், ட்ரைவரும் எதிர்கொண்டார்கள்.

''என்ன ஆள் முழிச்சுக்கிட்டானா...?''

''இல்ல ஸார்... இன்னும் மயக்கத்துலதான் இருக்கான்...''

''கார் நெம்பர் போர்டை மாத்திட்டிங்களா...?''

''ஆளை பங்களாவுக்கு கொண்டு வந்ததுமே மாத்திட்டோம்...''

''பரிதி கார்ல ஏறினதை யாராவது பார்த்தாங்களா...?''

''இல்ல ஸார்...''

உள்ளே நுழைந்தார்கள்.

''சரியா பதினோரு மணிக்கு பரிதி பிணமாயிடனும். பனிரெண்டு மணிக்குள்ளே



பாடியை எங்கேயாவது கொண்டு போய் – போலீஸ் மோப்பம் பிடிக்க முடியாத இடத்துல புதைச்சு டிஸ்போஸ் பண்ணிடனும்...''

''நாங்க கச்சிதமா பண்ணிடறோம் ஸார்...''

அவர்கள் சோபாவில் உட்கார்ந்தபோது உள் அறையில் சத்தம் கேட்டது.

குமாரலிங்கம் கேட்டான். ''என்ன சத்தம்...?''

''ஆள் முழிச்சுக்கிட்டான் போலிருக்கு ஸார்...''

''போய் இழுத்துட்டு வா...''

இந்த இளைஞனும் ட்ரைவரும் போய் – உள் அறையின் பூட்டைத் திறந்து – பரிதியை பக்கத்திற்கொருவராய் பிடித்து தள்ளிக் கொண்டு வந்தார்கள். பரிதி தளர்ந்து போய் சோர்ந்த பார்வையோடு தெரிந்தான்.

குமாரலிங்கம் சிரித்தான்.

''தப்பு பண்ணினது உன் பெண்டாட்டி. ஆனா தண்டனையை அனுபவிக்கப் போறது நீ...''

பரிதி குழறலாய் கேட்டான்.

''யா...யார்... நீங்கெள்ளாம்...?''

''என்னை தெரியலையா உனக்கு...? பரவாயில்லை... நானே சொல்றேன்... உன் பொண்டாட்டியாலே வாழ்க்கையே நாசமாகிப் போன டாக்டர் நாகராஜோட தம்பி நான்... பேரு குமாரலிங்கம்... என்கிட்டே இருக்கிற ஒரு கெட்ட பழக்கம் என்னன்னா... எனக்கு

யாராவது ஒருத்தர் கெடுதல் பண்ணினா... அதே கெடுதல் வேற மாதிரி... அவங்களுக்கே பண்ணிக் காட்றதுதான்... உன் பெண்டாட்டியாலே... என்னோட அண்ணன் நாகராஜுக்கு ஆயுள் தண்டனை கிடைக்கப் போகுது... அதுக்கு முன்னாடி... அவ புருஷனான உனக்கு நான் மரணதண்டனை விதிச்சுட்டேன்... இன்னிக்கு பஞ்சவர்ணக்கிளியா இருக்கிற உன் பெண்டாட்டி நாளையிலிருந்து ஒரு வெள்ளைப்புறா.''

''உன்னோட அண்ணன் ஒரு போகஸ் டாக்டர்... இந்த சமூகத்துல விஷக்கிருமிக்கு ஒப்பான அவனை காட்டிக் கொடுத்ததுல என்ன தப்பு...?''

''ஊர்ல எவனுக்கும் இல்லாத அக்கறை உன் பெண்டாட்டிக்கு மட்டும் ஏன் வரணும்...? பேசாமே கதை எழுதிட்டு இருக்காமே... இந்த மாதிரியான சமுதாய தொண்டையெல்லாம்... அவளை யார் பண்ணச் சொன்னது...? அவளை நேரிடையாவே என்னால் தண்டிக்க முடியும்... ஆனா அதை நான் விரும்பலை.. உன்னோட இழப்பை அவ அணுஅணுவா அனுபவிக்கணும். இனிமே வரப்போகிற காலம் பூராவும் நெத்தியில பொட்டு இல்லாமே... தலையில பூ இல்லாமே... அமங்கலமா இருக்கணும்...''

பரிதி அவனையே பார்த்தான். பக்கத்தில் உட்கார்ந்திருந்த ராஜமன்னார் ஒரு சிகரெட்டை பற்ற வைத்துக் கொண்டு சிரித்தான்.

''சரியா பதினோரு மணிக்கு நீ சாகப்போறே...!''



# 13



## காத்திருக்கும் கன்னிகள்

கார்த்திகை தீபங்கள் ஏற்றி
மார்கழி கோலங்களிட்டு... பாவம்
தை மட்டும் வருவதேயில்லை.

நேரம் பத்தே முக்கால் ஆனபோது – இந்துவுக்கு முதல் தடவையாய் அந்த பயம் வந்தது. டெலிபோன் டைரக்டரியில் மதனகோபாலின் நெம்பரை பொறுக்கிக் கொண்டு அவருக்கு டயல் செய்து பிடித்தாள்.

''நான் இந்துவதனா...''

''ஓ... எழுத்தாள அம்மாவா வணக்கம்... வணக்கம்... என்ன இந்த ராத்திரி நேரத்துல திடீர் போன்...?''

''இதோ பார்! நாம போட்டுக்கிட்ட சவால் உனக்கும் எனக்கும் மட்டும்தான்... என்னை பணிய வைக்கிறதுக்காக... என் கணவர்க்கு எந்த ஆபத்தையும் நீ உண்டாக்கக் கூடாது... உண்மையிலேயே நீ ஆம்பளையா இருந்தா... நேரிடையா என்கிட்டே மோதிதான் நீ ஜெயிக்கணும்...''

''அப்படித்தான் ஜெயிக்கப் போறேன்...''

''சாயந்தரம் அஞ்சரை மணிக்கே பேங்க்லிருந்து வீட்டுக்கு வரவேண்டிய என்னோட கணவர் இன்னும் வந்து சேரலை... உன்னோட ஆட்கள்...''

‘‘புரியுது... புரியுது... உன் புருஷனை நாங்க கடத்திட்டு... வந்து வெச்சுக்கிட்டு உன்னை பணிய வைக்க முயற்சி பண்றோமோன்னு நீ நினைக்கிறே! அந்த மாதிரியான ஒரு காரியத்தை நான் பண்ணவே மாட்டேன்... உன் புருஷன் வீட்டுக்கு சரியான நேரத்துக்கு வரலைன்னா வேற விவகாரமா இருக்கலாம்... சிட்டி அவுட்டர்ல புதுசா சின்னவீடு செட்டப் பண்ணியிருக்கலாம்...’’

‘‘ஷட்டப்...’’

‘‘ஒரு பேச்சுக்கு சொன்னேன்... ஏன்னா இந்த ஆம்பளைகளை மட்டும் நம்பவே முடியாது... வீட்ல பெண்டாட்டியை கொஞ்சிகிட்டே... வேற எங்கேயாவது சின்ன வீடு வெச்சிருப்பான்... நீ மும்முரமா கதை எழுதற வேலை மட்டும் பார்க்காமே புருஷனையும் அப்பப்ப கவனிச்சுக்கோ... இல்லாமே போனா இப்படித்தான்...’’

ரிஸீவரைத் தட்டென்று சாத்திவிட்டு ‘‘ராஸ்கல்!’’ என்று கடைவாயில் பற்களை அரைத்தாள் இந்து.

## 14



**சாதனை**

**வானத்தில் ராக்கெட்**
**வட்டமிடும் 'இன்சாட்' - இங்கு**
**வயல்வெளிகளில் பவர்கட்.**



நேரம் 10.55.

குமாரலிங்கம் தன் கையிலிருந்த சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் இட்டு தேய்த்துக் கொண்டே புன்னகைத்தான்.

‘‘இன்னும் அஞ்சே நிமிஷம்...’’

ராஜமன்னார் பலமாகவே சிரித்தான். ‘‘மாதா பிதா செய்தது மக்களின் தலையிலே...ன்னு கிராமத்துல ஒரு பழமொழி சொல்லுவாங்க... ஆனா இங்கே என்னடான்னா பெண்டாட்டி செய்தது புருஷன் தலையிலே...’’

பரிதி வியர்த்தான். யோசித்தான்.

‘இவர்களை தாக்க முடியுமா...?’

‘நிச்சயமாய் அது சாத்தியமில்லை...! சினிமாவில் வரும் ஹீரோ மாதிரியெல்லாம் ஒற்றை ஆளா நின்னு சண்டை போட்டு... ஊ...ஹூம்...ம்... முடியவே முடியாது...’

‘என்ன செய்யலாம்...?’

நேரம் நகர்ந்தது... 10.56... 10.57... 10.58...

குமாரலிங்கம் – தான் கொண்டு வந்திருந்த ப்ரீப்கேஸைத் திறந்து அந்த ரிவால்வரை எடுத்து – இளைஞனிடம் கொடுத்தான்.

‘‘முடி...’’

அவன் சொன்ன விநாடி –

மின்சாரம் சட்டென்று இறந்து போக –

வீடு முழுதும் இருட்டு.

அந்த திடீர் பவர்கட்டை ஜீரணித்துக் கொள்ள அவர்கள் திணறிக் கொண்டிருக்கும் போதே – பரிதி அதை பயன்படுத்திக் கொண்டு

– இருட்டில் குறிவைத்து வாசல் கதவை நோக்கி பாய்ந்தான்.

''மணி அவனைப் பிடி...''

குமாரலிங்கம் கத்திக் கொண்டிருக்க – இருட்டில் நிதானம் தெரியாமல் தன்மேல் பாய முயன்றவனை இடறித் தள்ளிவிட்டு – பரிதி ஓடிப்போய் – கதவின் மேல் விழுந்து – தாழ்ப்பாளை விலக்கி – வெளியே பாய்ந்தான்.

வெளியேயும் இருட்டு.

குத்து மதிப்பாய் ஓடி – காம்பௌண்ட் கேட்டைக் கடந்து – எக்ஸ்டென்ஷன் ஏரியாவின் – குறுகலான தெருவில் – இலவம் பஞ்சாய் ஓடினான்.

பின்னால் காலடிச் சத்தம் கேட்காமல் போகவே – சிறிது தூரம் ஓடியதும் திரும்பிப் பார்த்தான்.

காரின் ஹெட்லைட் வெளிச்சம் தெரிந்தது.

'காரில் துரத்துகிறார்கள்!'

ஓட்ட வேகத்தை அதிகப்படுத்தினான் பரிதி.






**எச்சரிக்கை**

மலர்ந்த பூக்கள்
காய்ந்து கிடக்குது கீழே
மொக்குகளே! மலராதீர்கள்.



இந்து சரியாய் பதினோரு மணிக்கு – கணவனின் பாங்க் கொலீக் சிவராஜ் வீட்டுக்கு போன் செய்தாள். ரிஸீவர் எடுக்கப்பட்டதும் சிவராஜே பேசினான்.

''ஹலோ...''

''மிஸ்டர் சிவராஜ்...?''

''ஹோல்டிங்...''

''வணக்கம்...! நான் இந்துவதனா பேசறேன்!''

''நீங்களா...? வணக்கம் சிஸ்டர்...''

''ஒரு இன்பர்மேஷன் வேணும்... ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ்.''

''நோ ப்ராப்ளம்! என்ன விஷயம்...?''

''அவர் இன்னும் வீட்டுக்கு வரலை...''

''யாரு... பரிதியா...?''

''எஸ்...''

''அஞ்சரை மணிக்கு புறப்பட்டாரே...'' என்று சொன்ன சிவராஜ் சட்டென்று ஞாபகத்துக்கு வந்தவனாய் 'ஒன் மினிட் சிஸ்டர்...! நான் ஆறு மணிக்கு என்னோட வேலைகளை முடிச்சுட்டு – வீட்டுக்கு போக வெளியே வந்தப்ப – மாடி செக்ஷனில் வேலை பார்க்கிற டைப்பிஸ்ட் பிலோமினாவும் கீழே வந்தாங்க. என்னைப் பார்த்ததும் ''என்ன... இன்னிக்கு மிஸ்டர் பரிதி கார்ல் புறப்பட்டு போறார். ஸ்கூட்டர் என்னாச்சுன்னு கேட்டாங்க. அதுக்கு நான் காஷுவலா தெரிஞ்சவங்க காராய் இருக்கும்ன்னு சொன்னேன்... இப்ப நீங்க கேட்கிறதைப் பார்த்தா...''

பேச்சை பதட்டமாய் வெட்டினாள் இந்து.

''அவர் கார்ல ஏறிப் போனாரா...?''

''அப்படித்தான் டைப்பிஸ்ட் பிலோமினா சொன்னாங்க...''

''பிலோமினா வீட்டுக்கு போய் இருக்கா...?''

''இல்லை...''

''வீட்டு அட்ரஸ்...?''

''கரெக்ட்டா... தெரியாதே...?''

## 16



## மறுபக்கம்

**புல்லாங்குழல் இசை பொழிந்தது.**
**மூங்கில் மரத்தை எண்ணி**
**மனம் கசிந்தது.**

பரிதி ஓடிக்கொண்டே சுற்றும் முற்றும் பார்த்தான்.

எல்லா பக்கமும் இருட்டு.

'கட்டி முடிக்கப்படாத வீடு ஒன்றுக்குள் புகுந்து மறைந்து கொள்ளலாமா...?'

'வேண்டாம்! மாட்டிக் கொள்வோம்...'

'கஷ்டப்பட்டு ஓடி மெயின்ரோட்டுக்கு போய் விட்டால் போதும். ஆள் நடமாட்டம் இருக்கும். தப்பித்துக் கொள்ளலாம்...'



பின்னால் கார் என்ஜினின் இரைகிற சத்தம் கேட்டது. ஹெட்லைட் வெளிச்சத்தின் ஒளிச் சிதறல்கள் – மண்ரோட்டின் ஓரங்களில் வளர்ந்திருந்த பார்த்தீனிய செடிகளின் மேல் விழுந்து நீண்டது.

'மெயின்ரோட்டுக்கு எவ்வளவு தூரம் இருக்கும்?'

யோசித்துப் பார்த்தான்.

குறைந்தது ஒரு கிலோ மீட்டர் தூரமாவது இருக்கும்போல் தோன்றியது. இருட்டில் வழியை அனுமானித்துக் கொண்டு – பெரிது பெரிதாய் மூச்சிரைத்து ஓடினான் பரிதி.

காரின் வேகம் பின்னால் அதிகரித்தது.

கொஞ்சம் தொலைவில் மண்பாதை கொண்டை ஊசி வளைவோடு திரும்புவது தெரிந்தது.

'அந்த வளைவைத் தாண்டினால் – மெயின் ரோடு பார்வைக்கு கிடைத்துவிடும். பிறகு பயமில்லை... ஏதாவது ஒரு வீட்டில் கூட அடைக்கலம் கேட்டு புகுந்து கொள்ளலாம்.'

பரிதி தம் பிடித்து ஓட – கார் வேகம் பிடித்து அவனை துரத்தியது. சமீபித்தது.

அவன் அந்த மண்பாதையின் வளைவில் திரும்பியபோது –

எதிரே ஹெட்லைட் இல்லாமல் –

அந்த வேன் செங்கல் பாரத்தோடு பேய் வேகத்தோடு எதிர்ப்பட – சட்டென்று விலகி பாதையோரத்துக்கு தாவினான் பரிதி.

அவன் கீழே விழுந்து உருண்டு கொண்டிருக்கும் போதே –

வேனும் காரும் –

ஆக்ரோஷமாய் மோதிக் கொண்டன.

''ச்சட்டீர்...''

தீனமான அலறல்களோடு கார் நொறுங்கியது.

## 17



## நன்றி

கைகாட்டி மரங்கள்
மழையிலும் வெயிலிலும் நனைந்து
காய்ந்தபடி அங்கேயே

டெலிபோனில் தொடர்ந்தாள் இந்து.

''மிஸ்டர் சிவராஜ்! அந்த டைப்பிஸ்ட் பிலோமினாவோட வீட்டு அட்ரஸை ட்ரேஸ் அவுட் பண்ணி குடுக்க முடியாதா...?''

''கேஷியர் டேவிட்டுக்கு பிலோமினா வீட்டு அட்ரஸ் தெரியும். நான் அவனை கான்டாட்க் பண்ணி – இன்னும் ரெண்டு நிமிஷத்துல மறுபடியும் உங்களுக்குப் போன் பண்றேன்...''

''ப்ளீஸ்...''

ரிஸீவரை வைத்துவிட்டு – அருகேயிருந்த பிரம்பு நாற்காலியில் கலக்கமாய் உட்கார்ந்தாள் இந்து.



வயிற்றுக்குள் பயம் காரணமாய் ஒரு இம்சை.

'அது யாருடைய கார்...?'

'அவ்வளவு சுலபத்தில் அவர் யார் காரிலும் ஏறிவிட மாட்டாரே?'

'மதனகோபால் இந்தக் காரியத்தை பண்ணவில்லையென்றால்... வேறு யார்...?'

யோசனைகளோடு இரண்டு நிமிஷத்தை கரைத்திருந்தபோது –

டெலிபோன் துடித்தது.

எடுத்தாள்.

மறுமுனையில் சிவராஜ் பேசினான்.

''சிஸ்டர்! பிலோமினாவோட அட்ரஸ் கிடைச்சுடுச்சு... நோட் பண்ணிக்கறீங்களா?''

''சொல்லுங்க...''

''நெம்பர் தர்ட்டி ட்டூ ஃபாதர் சேவியர் ஸ்ட்ரீட் பரிசுத்தம் லே – அவுட் வீட்டுக்கு முன்னாடி பெரிய வேப்ப மரம் இருக்கும்... நான் என்னோட ஸ்கூட்டர்ல பிலோமினாவோட வீட்டுக்கு வந்துடறேன். நீங்க ஒரு ஆட்டோ பிடிச்சு வந்துடறீங்களா...?''

''ஆட்டோ வேண்டாம். நான் என்னோட கைனடிக் ஹோண்டாவில் வந்துடறேன்...''

''அட்ரஸை கரெக்ட்டா நோட் பண்ணிட்டீங்களா...?''

''பண்ணிட்டேன்...''

''சீக்கிரமா வாங்க... பிலோமினாகிட்ட பேசிட்டு அப்புறமா போலீஸுக்கு போவோம்...''

இந்து ரிஸீவரை வைத்துவிட்டு அணிந்திருந்த நைட்டியை உதறி வேறு சேலைக்கு மாறி – கைனடிக் சாவியோடு வெளியே வந்தாள்.

வீட்டைப் பூட்டிக் கொண்டபின் – கைனடிக் ஹோண்டாவின் ஸ்டாண்ட்டை விடுவித்து அதன் மேல் பரவினாள். ஸ்டார்ட்டரை அழுத்தியதும் – அது கனைத்து உயிர் பிடித்தது. விரட்டிக் கொண்டு தெருவுக்கு வந்தாள்.

தெரு நீளமாய் வெறிச்சிட்டது.

வேபர் விளக்குகள் மஞ்சள் தூவுகிற சைஸில் பிரகாசமாய் இருந்தது. பிளாட்பார இட்லிக்கடை அருகே –

இரண்டு குடிகாரர்கள் இந்தியாவின் பொருளாதார நிலைமையைப் பற்றி கவலையோடு பேசிக் கொண்டிருந்தார்கள்.

பேக்கரி ஒன்று ட்யூப் லைட் வெளிச்சத்தில் உயிரோடு இருந்தது.

இந்து கைனடிக்கை அறுபதில் விரட்டினாள்.

தலைமுடியை குளிர்காற்று அலம்பியது.

நஞ்சப்பா ரோட்டில் திரும்பினாள்.

ஆள் இல்லாமல் – வாகனம் இல்லாமல் – ரோடு பாலைவனம்.

கைனடிக் பஞ்சுத் துணுக்காய் பறந்தது. இந்த வேகத்தில் அவள் என்றைக்குமே போனதில்லை.

ரோட்டின் பாதி தூரத்தை விழுங்கியிருந்த போது – பின்னால் அந்த வாகன சத்தம் கேட்டது.



இந்து திரும்பிப் பார்த்தாள்.

ஜிப்ஸி மாருதி வேன் ஒன்று புயலாய் வந்து கொண்டிருந்தது.

## 18



## சாதிப்பிரச்சனை

சிலரின் குளிர்க்கு
பலர் இங்கே விறகாகும்
சமுதாய நெருப்பு.

முல்லைநகர் எக்ஸ்டென்ஷனில் – அந்த இரவு நேர நிசப்தத்தை கீறிக் கொண்டு இரண்டு போலீஸ் ஜீப்களும் – ஒரு ஆம்புலன்ஸ் வேனும் ஊளையிட்டுக் கொண்டு வந்து – சிவப்பு விளக்குகள் சுழல நின்றது. ஒரு இன்ஸ்பெக்டரும், சப்–இன்ஸ்பெக்டரும் – கான்ஸ்டபிள்களோடு கீழே இறங்கினார்கள்.

ஏற்கெனவே அங்கு வரவழைக்கப் பட்டிருந்த டாக்டர் எதிர் கொண்டார்.

''கார்ல வந்த நாலு பேருமே... ஸ்பாட் டெத்... ஆக்ஸிடெண்ட் எப்படி நடந்ததுங்கிறதை பார்த்த ஒரு விட்னஸ் இவர்தான்...'' – பக்கத்தில் நின்றிருந்த பரிதியை சுட்டிக் காட்டினார் டாக்டர்.

பரிதி முன்னால் வந்தான்.

இன்ஸ்பெக்டர் அவனை ஏறிட்டபடி கேட்டார்.

''உங்களை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கே...?''

''இருக்கலாம்... என் பேர் பரிதி... ஸ்டோரி ரைட்டர் இந்துவதனாவோட ஹஸ்பெண்ட்...''

அவர் மலர்ந்தார்.

''எனிட்?'' — கை குலுக்கிவிட்டு கேட்டார்.

''இங்கே எப்படி நீங்க...?''

தான் கடத்தப்பட்ட விபரத்தை மெல்லிய குரலில் சொல்ல ஆரம்பித்தான். அவன் சொன்னதை இரண்டு நிமிஷ நேரம் உன்னிப்பாய் செவிமடுத்த இன்ஸ்பெக்டர் கேட்டார்.

''மிஸஸ் இந்துவதானவுக்கு நீங்க கடத்தப்பட்ட விபரம் தெரியுமா?''

''தெரியாது...''

''மொதல்ல போன் பண்ணிச் சொல்லுங்க... ஜீப்ல மெயின் ரோட்டுக்கு போனா... பெட்ரோல் பங்க்ல டெலிபோன் இருக்கு. நீங்க போய் பேசிட்டு வாங்க... நாங்க இந்த ஆக்ஸிடெண்ட் சம்பந்தமான சடங்குகளை... கவனிச்சுட்டு இருக்கோம்...''

''தாங்க்யூ ஸார்...''

பரிதி ஜீப்புக்கு தாவினான். டிரைவர் ஜீப்பைக் கிளப்பி ஒரு ட்யூப்லைட் மட்டும் எரிந்து கொண்டிருந்த பெட்ரோல் பங்க் வாசலில் நிறுத்தினார். பரிதி இறங்கி உள்ளே போனான். கேஷை எண்ணி தோல் பையில் திணித்துக் கொண்டிருந்த அந்த இளைஞன் — நிமிர்ந்தான்.



''என்ன ஸார்... பெட்ரோலா...? ஸ்டாக் இல்லையே!''

''பெட்ரோல் வேண்டாம். ஒரு போன் பண்ணனும்...''

''லோக்கல் கால்தானே...?''

''ஆமா...''

''பண்ணிக்குங்க...''

பரிதி டெலிபோனை நெருங்கி — ரிஸீவரை எடுத்து — வீட்டு டெலிபோன் எண்களை டயலில் சுழற்றினான்.

மறுமுனையில் ரிங் போயிற்று.

ஒரு நிமிஷம்...

இரண்டு நிமிஷம்

ரிஸீவரை எடுக்க ஆள் இல்லாமல் ரிங் போய்க் கொண்டே இருந்தது.

## 19



## வாக்காளர்கள்

*மழைக்கால குடைகள்*
*மழை நின்றால் மீண்டும்*
*மாட்டி வைப்பார் மூலையில்*

இந்துவதனா யோசிப்பதற்குள் — ஜிப்ஸி வேன் — ராட்சஸ வேகத்தோடு — கைனடிக் ஹோண்டாவை கடந்து — அவளுக்கு முன்பாய் பிரேக்கிட்டு நின்றது.

''த்த்தட்ட்ட்...''

கைனடிக் நிலை குலைந்து சாய – கீழே விழுந்த இந்துவதனாவை – வேனுக்குள்ளிருந்து குதித்த இரண்டு பேர் அள்ளினார்கள்.

''ஏ...ஏ...ஏய்...!''

அவள் கத்த – முகம் கர்ச்சிப்பால் பொத்தப்பட்டது.

திமிறினாள்.

வேனுக்குள் திணிக்கப்பட்டாள்.

''டே...டேய்...யார்ரா... நீங்க...?'' வீறிட்டு கத்திக் கொண்டிருக்கும்போதே – வலது தோள்பட்டையில் அந்த இஞ்செக்ஷன் மருந்து சுருக்கென்று பாய்ந்தது.

இந்துக்கு கண்கள் சொருகிக் கொண்டு போயிற்று. மயக்கம் தலையை வலது பக்கமாய் சாய்த்தது.

## 20



### மரியாதை

காலத்தின் மிச்சம்.
கடற்கரையில் சிலைகளின்
தலையில்
காகங்களின் எச்சம்.

பெட்ரோல் பங்கிலிருந்து திரும்பிய பரிதியை – நான்கு பேரின் சடலங்களுக்கு மத்தியில் நின்றபடியே இன்ஸ்பெக்டர் கேட்டார்.



''உங்க மிஸஸ்கிட்டே பேசிட்டீங்களா...?''

''நோ ரிப்ளை இன்ஸ்பெக்டர்... ரிங் மட்டும் போயிட்டிருக்கு...''

''உங்களைப் பத்தி விசாரிக்க – அவங்க வெளியே போயிருக்கலாம்னு நினைக்கிறேன். நீங்க ஜீப்பிலேயே வீட்டுக்கு புறப்பட்டு போய் வெயிட் பண்ணுங்களேன்...''

''நானும் அதைத்தான் நினைச்சேன்... வீட்டுச்சாவி என்கிட்டேயும் ஒண்ணு இருக்கு...''

''பிறகென்ன...? நீங்க புறப்படுங்க... மிஸ்டர் பரிதி.''

''வீட்டுக்குப் போனதும் ஜீப்பை திருப்பி அனுப்பிச்சுடறேன்.. இந்த கேஸ் சம்பந்தமா நாளைக்கு காலையில ஸ்டேஷனுக்கு வந்து ஒரு ஸ்டேட்மெண்ட் குடுத்துடறேன்...''

''ஒரு நிமிஷம்...''

''எஸ்...''

''செத்து கிடக்கிற இந்த நாலு பேரில் குமாரலிங்கம் யாருங்கிறதை ஐடெண்டிஃபை பண்ணிட்டு போயிடுங்க...''

டார்ச் வெளிச்சத்தில் – ரத்தக் கசகசப்பில் உறைந்து போன உடல்களை உற்றுப் பார்த்துவிட்டு – குமாரலிங்கத்தை அடையாளம் காட்டினான் பரிதி.

''தேங்க்யூ...! இனி நீங்க புறப்படலாம்...'' இன்ஸ்பெக்டர் தலையசைக்க – பரிதி ஜீப்புக்கு வந்தான்.

இருபது நிமிஷ பயணம்.

வீடு வந்ததும் – இறங்கிக் கொண்டு ஜீப்பை அனுப்பிவிட்டு – கேட்டை திறந்து கொண்டு – வீட்டுக்குள் போனான்.

வாசல் கதவில் பூட்டு மின்னியது.

பேண்ட் பாக்கெட்டில் இருந்த சாவியை எடுத்து – பூட்டுக்கு விடுதலை கொடுத்து – கதவைத் தள்ளி உள்ளே போனான். ஸ்விட்சைத் தேய்க்க – ட்யூப் லைட் வெளிச்சம் ஹாலுக்குள் நிரம்பியது.

'இந்து எங்கே போயிருப்பா...?'

'நான் வீட்டுக்கு திரும்பாததை என்கொயரி பண்ண பாங்க் மேனேஜர் வீட்டுக்கு போயிருப்பாளோ...?'

'அவர்க்கு போன் செய்து பார்த்தால் தெரிகிறது...'

டெலிபோனை நெருங்கினான்.

ரிஸீவரைத் தொட்டபோது – டெலிபோன் டைரக்டரிக்கு கீழே துண்டு பேப்பர் தெரிந்தது. எடுத்தான்.

அதில் இந்துவின் கையெழுத்தில் கிறுக்கப் பட்ட ஒரு டெலிபோன் நெம்பர். எண்ணைப் பார்த்ததுமே புரிந்தது.

'இது... இது... சிவராஜ் டெலிபோன் நெம்பர்!'

'இந்து நான் வீட்டுக்கு வராத காரணத்தை தெரிந்து கொள்வதற்காக சிவராஜை போனில் தொடர்பு கொள்வதற்காக – என் டயரியைப் பார்த்து இண்டக்ஸில் இருந்த சிவராஜின் டெலிபோன் நெம்பரை இந்த பேப்பரில் எழுதிக் கொண்டிருந்திருக்க வேண்டும்...'



'சிவராஜைக் கேட்டால் விஷயம் தெரியும்.'

ரிஸீவரை எடுத்துக் கொண்டு – சிவராஜ் வீட்டுக்கு டயலைச் சுழற்றினான். சிவராஜின் மனைவி பேசினாள். பரிதியின் குரலைக் கேட்டதும் ஆச்சர்யப்பட்டாள்.

''என்னங்க... நீங்க எங்கே போயிருந் தீங்க...?''

சுருக்கமாய் விஷயத்தைச் சொன்னான் பரிதி. பின்பு கேட்டான்.

''சிவராஜ் இப்ப எங்கே...?''

''பாங்க்லிருந்து நீங்க வெளியே வந்தப்ப ஒரு கார்ல உங்களை... யாரோ கூட்டிப் போனதை டைப்பிஸ்ட் பிலோமினா பார்த் திருக்கா. அந்தக் காரை பத்தின தகவல்களை தெரிஞ்சுக்கிறதுக்காக – பிலோமினா வீட்டுக்கு புறப்பட்டு போனார். உங்க மனைவியையும் பிலோமினா வீட்டுக்கு வரச் சொல்லி யிருந்தார்...''

''பிலோமினா வீட்டு அட்ரஸ் உங்களுக்கு தெரியுமா?''

''தெரியும்...''

''சொல்றீங்களா...? நோட் பண்ணிக் கிறேன்...''

## 21



**நாங்கள்**

திரைச்சீலைப் பூக்களில்
மொய்க்கும் வண்ணத்துப் பூச்சியாய்
நாங்கள். ஆம்! இந்தியர்கள்.

நடுநிசி.

குட் ஹெல்த் நர்சிங்ஹோம் வாசலில் அந்த பைக் வந்து நின்று எஞ்சின் இயக்கத்தை நிறுத்திக் கொண்டது. அதிலிருந்து இறங்கிய நபர் – வாசல் படிக்கட்டுகளில் சோகமாய் உட்கார்ந்திருந்த நபர்களை நெருங்க – அவர்கள் எழுந்தார்கள்.

''அண்ணே! தலைவர்க்கு இப்போ எப்படியிருக்கு...''

''பரவாயில்லைன்னு டாக்டர் சொல்றார்...''

''நெஞ்சு நோவு மறுபடியும் வரலையே...?''

''வந்தது... அதைக் கட்டுப்படுத்தத்தான் ஊர் பூராவும் இருக்கிற மெடிக்கல் ஸ்டோர் ஸெல்லாம் அலைஞ்சு... இந்த மருந்தை வாங்கியாந்தேன்...'' சொல்லிக் கொண்டே அவன் உள்ளே போனான்.

ஸ்பெஷல் கேர் யூனிட்டின் அறைக்குள் நுழைந்தான்.

கட்டிலில் மதனகோபால் கண்களை மூடிப் படுத்திருந்தான். உள்ளே நுழைந்த ஆள் சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு – அவர்க்குப் பக்கத்தில் போய் ''தலைவரே!'' என்றான்.

மதனகோபால் பளிச்சென்று கண்களைத் திறந்தான். டாக்டரோ நர்ஸோ யாரும் பக்கத்தில் இல்லை என்பதை புரிந்து கொண்டு புன்னகைத்தார்.

''என்னாச்சு...?''

''நம்ம ஆட்கள் இந்துவை மடக்கிட் டாங்க...''



''குட்...! ரோட்ல யாரும் பார்த் துடலையே...?''

''அவளை வேன்ல தூக்கிப் போட்டது ஒரு ஈ காக்கைக்கு கூட தெரியாது...''

''சரி அடுத்த காரியத்தையும் முடிச்சுட சொல்லு...! என்னா அவளோட புருஷன் காணாம போயிருக்கிற இந்த நேரத்திலேயே... இவளையும் பழி தீர்த்துக்கணும். அப்பத்தான் நம்மை யாரும் சந்தேகப்படமாட்டாங்க...''

''முடிச்சுடுவாங்க தலைவரே...''

''ஹார்ட் அட்டாக் வந்த மாதிரி... நான் நடிச்ச நடிப்பு எப்படி?''

''அற்புதம் தலைவரே! தொண்டர்க ளெல்லாம்... வீட்டுக்குக் கூட போகாமே ஆஸ்பத்திரி வாசல் படியிலேயே உட்கார்ந்து அழுதிட்டிருக்காங்க...''

''பேப்பர்காரங்களுக்கு நியூஸ் குடுத் துட்டியா...?''

''குடுத்துட்டேன் தலைவரே... நாளைக்கு காலையில எல்லா பேப்பர்லேயும் நியூஸ் வந்துடும்... ஹெட்டிங் என்ன குடுத் திருக்கே...?''

''முன்னாள் எம்.எல்.ஏ.மதனகோபாலுக்கு திடீர் மாரடைப்பு.''

ஆஸ்பத்திரியில் தீவிர சிகிச்சை.

'அபாயக் கட்டத்தை தாண்டுவாரா...?' – இன்று தெரியும்.''

மதனகோபால் புன்னகைத்தார்.

''குட்...! நம்ம ஆட்களுக்கு இன்னொரு வாட்டி நல்லா இன்ஸ்ட்ரக்ஷன் குடுத்துடு... இந்துவோட உயிர்க்கு எந்த ஆபத்தும் வரக்கூடாது. எழுதுற அவ வலதுகையை முடமாக்கி – வாய் பேசாதபடி பண்ணனும் அவ்வளவுதான். அவளை கற்பழிச்சுட்டாலோ, கொன்னுட்டாலோ விவகாரம் பெரிசாயிடும்... எனக்கு வேண்டியதெல்லாம் அவ எழுதக் கூடாது. எழுத முடியாதபடி அவளை முடக்கணும்... என்னோட சபதத்துல நான் ஜெயிக்கணும். அதே நேரத்துல...அவளை முடமாக்கின பழி – அவ புருஷனைக் கடத்திட்டு போனவங்க மேல விழும். அவ்வளவுதான்...''

''உங்க எண்ணப்படியே எல்லாம் நடக்கும் தலைவரே... நீங்க மட்டும் ரெண்டு நாளைக்கு நெஞ்சு வலியால கஷ்டப்படற மாதிரி நடிச்சுடுங்க போதும்...''

''அதைப்பத்தி நீ கவலைப்படாதே...! ஒரு கணிசமான தொண்டர்கள் கூட்டம் ரெண்டு நாளைக்கு வாசற்படியிலேயே இருக்கிற மாதிரி நீ பார்த்துக்க...''

''சரி... தலைவரே...!''

கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டது.

டாக்டரும் நர்ஸும் உள்ளே நுழைந்தார்கள். டாக்டர் கடுகடுப்பாய் அந்தப் பேர்வழியைப் பார்த்தார்.

''மருந்தை வாங்கிகிட்டு என்னோட ரூமுக்குத்தானே உன்னை வரச்சொன்னேன்.



பேஷண்ட் கிட்டே உன்னை யார் போகச் சொன்னது?''

''ஸாரி டாக்டர்! தலைவரை பார்க்கணும் போல் இருந்தது. பார்த்துட்டு உங்க ரூமுக்கு வரலாம்னு இருந்தேன்...''

''மருந்தை வாங்கிட்டியா...?''

''வாங்கிட்டேன்...''

''குடுத்துட்டு போ... இனிமே என்னோட அனுமதியில்லாமே பேஷண்ட்டை யாரும் பார்க்க வரக்கூடாது...''

''சரி டாக்டர்...''

மருந்தை கொடுத்துவிட்டு – அவன் வெளியே நழுவினான். டாக்டர் மதன கோபாலிடம் குனிந்தார்.

''இப்ப வலி எப்படியிருக்கு...?''

''கொஞ்சம் குறைஞ்சிருக்கு டாக்டர்...''

''உங்க ஈ.சி.ஜி. ரிப்போர்ட் பார்த்தேன். நார்மலா இருக்கு மிஸ்டர் மதனகோபால். B P கூட இல்லை...''

''பின்னே ஏன் டாக்டர் அந்த சிவியர் ஹார்ட் பெயின்?''

''அதான் எனக்கும் புரியலை... எதுக்கும் ஒரு கார்டியாலஜிஸ்ட்டை கன்சல்ட் பண்ணிக்கலாம்னு இருக்கேன்...''

நர்ஸ் இஞ்செக்ஷன் மருந்தை ஸிரிஞ்சில் ஏற்றி டாக்டரிடம் நீட்ட – அவர் அதை வாங்கிக் கொண்டு – மதனகோபாலின் இடது புஜத்தைப் பற்றினார்.

## 22



### இன்றைய கல்வி

முதுகில் புத்தகக் கட்டுக்கள்
மூளையில் திணிக்கும்
பாடத்திட்டங்கள்
முதுமையடைந்த மழலைகள்.

டைப்பிஸ்ட் பிலோமினாவின் வீட்டில் காத்திருந்த – சிவராஜ், ஆட்டோவில் வந்து இறங்கும் பரிதியைப் பார்த்ததும் ஆச்சர்ய மானான்.

''டேய் பாவி! எங்கடா போயிருந்தே... உன்னை காணோம்ன்னுட்டு தானே உன்னோட மிஸஸ் எனக்கு போன் பண்ணியிருந்தாங்க...''

''எல்லாத்தையும் விபரமா சொல்றேன்... இப்ப இந்து எங்கே?''

''அவங்களுக்காகத்தானே... நான் வெயிட் பண்ணிட்டிருக்கேன்... அரை மணி நேரத்துக்கு முந்தியே... உன் வீட்டுக்கு போன் பண்ணி மிஸஸ் இந்துவை இங்கே பிலோமினா வீட்டுக்கு வரச் சொல்லியிருந்தேன்...''

''அரை மணி நேரத்துக்கு முந்தி புறப் பட்டவ இன்னுமா இங்கு வந்து சேரலை...?''

''அதான் எனக்கும் ஆச்சர்யமாயிருக்கு... நீ வீட்லருந்து இங்கே எந்த ரூட் வழியா வந்தே...?''



''அண்டர் பிரிட்ஜ் வழியா...''

''நஞ்சப்பா ரோடு பக்கம் வரலையா...?''

''இல்லை...''

''சரி... என் ஸ்கூட்டர்ல ஏறு... அந்த வழியா போய்ப் பார்ப்போம்... ஒரு வேளை உன்னோட மிஸஸ் வந்த கைனடிக் ரிப்பேராகி வழியில் நின்னிருக்கலாம்...''

''சரி... கிளம்பு...''

பிலோமினாவிடம் சொல்லிக் கொண்டு கிளம்பினார்கள். ஸ்கூட்டரில் போகும்போதே – தான் கடத்தப்பட்ட விவரத்தையும் – அதற்குப்பின் நடந்த சம்பவங்களையும் சொன்னான் பரிதி. சிவராஜன் பயந்தான்.

''என்னடா இது...? கதை எழுதினா... இவ்வளவு பிரச்சனை வருமா?''

''வந்துடுச்சே...!''

ஸ்கூட்டர் நஞ்சப்பா ரோட்டில் திரும்பியது.

ரோட்டின் மையத்தில் நான்கைந்து பேர் நின்றிருக்க நடுவே – கைனடிக் ஹோண்டா ஒருக்களித்து விழுந்திருந்தது. ஸ்கூட்டரை அருகே கொண்டு போய் நிறுத்தி பதை பதைப்புடன் இறங்கினார்கள். பரிதி கத்தினான்.

''சிவா! இது... இந்துவோட கைனடிக் தான்...''

''என்னய்யா ஆச்சு...? இந்த ஸ்கூட்டர்ல வந்த பொண்ண எங்கே?''

ஒட்டுக் கம்பளியைப் போர்த்துக் கொண்டிருந்த அந்த பிச்சைக்காரன் முன்னால் வந்தான். ''அய்யா...! நான் அந்த ஷட்டர்க்கு

ஓரமா படுத்திட்டிருந்தேன். ஒரு வேன் திடீர்ன்னு இந்த ஸ்கூட்டர்க்கு முன்னாடி வந்து நின்னு – அந்தப் பொண்ணை தூக்கி போட்டுக்கிட்டு போயிட்டாங்க...''

''யா...யாரு... அவங்க...?''

## 23



### சோம்பல்

கட்டிலில் நான்
சுவரில் ஒட்டடை.
நாளையாவது
எழ முடிந்தால்
சுத்தமாக்கலாம்.

இந்துவுக்கு நினைவு திரும்பியபோது – தன்னுடைய கண்கள் ஒரு துணியால் கட்டப்பட்டிருப்பதையும் – கைகளை இரண்டு பக்கமும் விரித்து கட்டப்பட்டிருப்பதையும் உணர்ந்தாள்.

மெல்ல உடம்பை அசைத்தாள்.

தலைமாட்டில் ஒரு குரல் கரகரத்தது.

''எழுத்தாள அம்மணிக்கு மயக்கம் தெளிஞ்சிடுச்சு... மண்டகப்படியை நிறை வேற்றிட வேண்டியதுதான்... கிரண்! அந்தத் தடியைக் கொண்டா...''

''பேர் சொல்லி கூப்பிடாதே... அது காதுல விழுந்துட போவுது...''



''இன்னும் மயக்கம் தெளியலை...''

''எதுக்கு வம்பு...! மௌனமாவே காரியத்தை முடிப்போம்.''

இந்துவுக்கு அந்த மயக்கமான நிலைமையிலும் திக்கென்று இருந்தது. 'இவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்...?'

யோசித்துக் கொண்டிருக்கும்போதே – கட்டப்பட்டிருந்த வலது கையின் மேல் – அந்த இரும்புத்தடி இடி மாதிரி இறங்கியது.

''ம்...ம்...மா...ஆ...ஆ...''

கை எலும்பு நொறுங்கி – ரத்தம் சிதற – இந்து துடித்தாள். அடித்தவன் சிரித்தான்.

''இந்தக் கை எழுதறதுக்கு மட்டுமில்லை... எதுக்குமே பிரயோஜனப் படக்கூடாது... கை இல்லேன்னாக்கூட வாய்ல டிக்டேட் பண்ணி யாரையாவது எழுதச் சொன்னாலும் சொல் விடுவே! அதனாலே... இனிமே நீ பேசவே முடியாதபடி...''

சொல்லிக் கொண்டே அவனுடைய கழுத்தில் பிசுபிசுப்பாய் கையை வைத்தான். தலையை சாய்த்து அழுத்தி பிடித்துக் கொண்டான்.

''நான் வர்மம் வெச்சா... அதை எந்த கொம்பனாலும் எடுக்க முடியாது... இனி நீ அடுத்த ஜென்மத்தில்தான் பேசலாம்...''

இந்துவின் தலையை சாய்த்து பிடித்து – கழுத்தில் பேச்சு நரம்பைத் தேடிக் கண்டுபிடித்து – பெருவிரலால் அதை அழுத்தி நசுக்கிக் கொண்டு – தன் வலது கையை ஒரு வெட்டுக்கத்தி மாதிரி உயர்த்தி – சட்டென்று நரம்பில் இறங்கினான்.

இந்துவின் உடல் சற்று உதறிக் கொண்டது.

'ஹக்...' — என்று ஒரு சத்தம்.

உடைந்த வலது கையில் ரத்தம் பெருக –

கொஞ்சம் கொஞ்சமாய் —

நினைவிழந்தாள்.

''கிரண்!''

''காரியம் சுத்தம்... இவளை வேன்ல கொண்டு போய் — அவ வீட்டு வாசலிலேயே போட்டுட்டு — ஹாஸ்பிடலுக்கு போய் தலைவரைப் பார்த்து சொல்லிடு. வாரம் பத்து நாளைக்கு நான் ஆந்திரா பக்கம் போய்ட்டு நிதானமா வந்து அமௌண்ட்டை செட்டில் பண்ணிக்கிறேன்.''

''சரி...''

இந்துவை ரத்தம் சொட்ட சொட்ட தூக்கினார்கள்.

## 24



**முயற்சி**

அருவி நீர்
பாறையில் மோதி மோதி
சிதறியது பாறை.

**போ**லியாக நெஞ்சைப் பிடித்துக் கொண்டு துடிக்க ஆரம்பித்தார் மதனகோபால்.



'ஹா! தாங்க முடியலையே...! அய்யோ நான் செத்துடுவேன்...' திக்கித் திணறும் குரலில் — சிரமமாய் கத்திய அவரைப் பார்த்து பயந்து போன நர்ஸ் ஓடிப்போய் — தூங்கிக் கொண்டிருந்த ஹவுஸ் சர்ஜனை கூட்டிக் கொண்டு வந்தார்.

அவர் சோதித்தார்.

அவர்க்கு அந்த வலி பிடிபடவில்லை.

''டாக்... டர்! என்னோட ஹார்ட்டை ஏதோ ஒரு வலி இறுக்கி பிடிக்குது... எ...என்னால... மூ...மூச்சு விட முடியலை... ஏதாவது... ப... பண்ணுங்க... டாக்டர்...''

டாக்டர் விதிர்விதிர்த்துப் போய் நர்ஸைப் பார்த்தார்.

''சிஸ்டர்! அந்த ப்ரிப்லேட்டரை கொண்டு வா...''

அவள் ஓடினாள்.

ஹார்ட் அட்டாக் வரும் சமயங்களில் — உபயோகப்படுத்தக்கூடிய கார்டியாக் மானிடரை கொண்டு வந்து கொடுத்துவிட்டு தயங்கினாள்.

''டா...டாக்டர்...''

''என்ன...?''

''பெரிய டாக்டரை கன்சல்ட் பண்ணிகிட்டு...இந்த ப்ரிப்லேட்டரை யூஸ் பண்ணலாமே...?''

''அவரை கன்சல்ட் பண்ணிட்டிருக்க இது நேரமில்லை...! மனுஷன் வலியாலே துடிக்கிறார்... எந்த நிமிஷமும் ஹார்ட் ஸ்ட்ரக் ஆகலாம்... இதை உபயோகப்படுத்தறதை தவிர வேறு வழியில்லை...''

''டா...க்...டர்... வந்து...''

''எனக்கு அட்வைஸ் பண்ணாதே... பேஷண்ட் தலைமாட்டில் போய் நில்லு... தலையை அசையாமே பிடிச்சுக்க...''

நர்ஸ் தயக்கமாய் நடந்து தலைமாட்டுக்கு போனாள். ஹவுஸ் சர்ஜன் கார்டியாக் மானிட்டரை — மதனகோபாலின் ஹார்ட் பாகத்தில் பொருத்தினான். பட்டனைத் தட்டி இயக்கினார்.

(கார்டியாக் மானிட்டர் எனப்படுகிற ப்ரிப்லேட்டர்... ஹார்ட் அட்டாக் ஏற்பட்டு ஹார்ட் நின்று போய்விடுகிற அபாயகரமான காலங்களில் — அதை நோயாளியின் இருதயத் தோடு பொருத்தி — மின்சார ஷாக் கொடுத்து — ஹார்ட்டை மசாஜ் செய்து மறுபடியும் இயங்க வைக்கக்கூடிய ஒரு சாதனம். ஹார்ட் ஆரோக்ய மாய் இருக்கிற நபர்களுக்கு இதை உபயோகப் படுத்தினால் — இதயம் அதிர்ச்சியால் தாக்கப் பட்டு — நபர் மரணமடைவது நிச்சயம்)

மானிட்டர் இயங்க ஆரம்பித்தது.

''ர்ர்ர்ர்ர்....''

## 25



## தியாகம்

**வெய்யிலில் காய்ந்துகொண்டே**
**தண்ணீர் குடங்களோடு நிற்கும்**
**தென்னைமரம்.**

மறுநாள் காலை ஆறு மணி.



வலது கையில் பெரிய பாண்டேஜ் கட்டோடு — கட்டிலுக்கு சாய்ந்து உட்கார்ந்திருந்தாள் இந்து. அருகே பரிதி, சிவராஜ், ஒரு உயர்தர போலீஸ் அதிகாரி, பத்திரிகை நிருபர்கள்.

போலீஸ் அதிகாரி பரிதியிடம் கேட்டுக் கொண்டிருந்தார்.

''உங்க ஒய்ப்பை வீட்டு வாசல்ல கொண்டு வந்து போட்டுட்டு போனவங்க யாராயிருக்க முடியும்னு நினைக்கறீங்க...?''

''தெரியலை ஸார்... 'கிரண்'ங்கிற பேரை மட்டும் இந்து எழுதி காட்டினா...! இந்து இடது கை பழக்கம் உள்ளவள்... இடது கையில்தான் கதை எழுதுவாங்கிற விஷயம் அவங்களுக்கு தெரியாமே போனது ஒரு சின்ன அதிர்ஷ்டம்...''

''உங்க மனைவியை வாசல்ல பார்த்தப்ப மணி எவ்வளவு இருக்கும்...?''

''விடிகாலை மூணு மணி...''

''உங்களை கடத்திட்டு போன... குமார லிங்கம் கும்பல்தான்...உங்க மனைவிக்கும் இந்த முடிவை குடுத்திருக்காங்கன்னு நினைக்கிறேன்... மிஸஸ் இந்து 'மதனகோபாலை' சந்தேகப்படறதா பேப்பர்ல எழுதி காட்டினாங்க... ஆனா அவர் முந்தின ராத்திரி எட்டு மணிக்கு ஹார்ட் அட்டாக்ல விழுந்து — ஹாஸ்பிடல்ல அட்மிட்டாகி — ட்ரீட்மெண்ட் குடுத்தும் பலனில்லாமே மிட் நைட் ரெண்டு மணிக்கு மணிக்கு இறந்துட்டார். உண்மையான குற்றவாளிகள் யாராயிருந்தாலும் சரி அட் எனி காஸ்ட்... இன்னும் ஒரு வாரத்துக்குள்ளே கண்டுபிடிச்சுடுவோம்...''

டாக்டர் உள்ளே வந்தார்.

கையில் சில மருத்துவ ரிப்போர்ட்ஸ்.

அதிகாரி கேட்டார்.

''மிஸஸ் இந்துவோட ரிப்போர்ட்ஸ் என்ன சொல்லுது டாக்டர்...?''

அவர் புன்னகைத்தார்.

''பயப்படுகிற மாதிரி எதுவும் இல்லை... வலது கை எலும்பு மோசமான முறையில் உடைஞ்சிருந்தாலும்... அதை ஆறு மாச காலத்தில் சரி பண்ண முடியும்... கழுத்து நரம்பை சரி பண்ண ஒரு வருஷம் பிடிக்கலாம்... ஸ்பீச் தெரபி மூலம் அவங்களை குணப்படுத்த முடியும்... இது நான் ஆறுதலுக்காக சொல்ற வார்த்தையில்லை... சத்தியமான வார்த்தை...''

பரிதி கண்களில் நீரோடு — டாக்டரின் கைகளைப் பற்றிக் கொண்டான். ''தாங்க்யூ டாக்டர்...''

பத்திரிகை நிருபர்கள் இந்துவைச் சூழ்ந்தார்கள்.

''மேடம்! உங்ககிட்டே ரெண்டே ரெண்டு கேள்வி...''

அவள் தலையசைத்தாள். இடது கையால் பேப்பர் பேடையும் பேனாவையும் எடுத்துக் கொண்டாள்.

''நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி என்ன நினைக்கிறீங்க...?''

இந்து எழுதிக் காட்டினாள்.

''உலகிலேயே மிகவும் கோழைத்தனமான செயல்... ஒரு பேனாவை நொறுக்க பீரங்கிப் படை தேவைப்பட்டிருக்கிறது...''

''உங்கள் எழுத்து வாழ்க்கை தொடருமா?''



எழுதினாள்.

''நிச்சயம் தொடரும். நான் எழுத்துப் பணியை தொடர வேண்டும் என்பதற்காகத் தான்... நான் எழுதுகிற கையை விட்டுவிட்டு — எழுதாத கையை முடமாக்கியிருக்கிறார்கள். என் எழுத்து ப் பணிக்கு அவர்களே கொடுத்த அங்கீகாரம் இது...''

நிருபர்கள் விடை பெற்று போனதும் —

தன் அருகில் இருந்த கணவனுக்கு பேடில் எழுதிக் காட்டினாள் இந்து.

''மதனகோபாலின் மறுபக்கம்'' — தொடர்கதையின் மூன்றாவது அத்தியாயத்தை எழுத வேண்டும். பேனாவுக்கு இங்க் ஊற்றி கொடுங்கள்...''

அவளிடமிருந்து பேனாவை பரிதி கண்ணீரோடு வாங்கிக் கொண்டான்.

**(முற்றும்)**

## குழப்பம்



நீ எதுவாக நினைக்கிறாயோ
அதுவாக ஆவாய் என்கிறார்
ஓர் அறிஞர்...
என் காதலி சொல்கிறாள்
நினைப்புதான் பொழப்பக் கெடுக்குமென
யார் சொல்வது உண்மை
ஒரே குழப்பமாக இருக்கிறது!


**நாகை ஆசைத்தம்பி,**
**கோவை-31.**

# கலங்காதே கண்மணி



ரேசாகீ
சென்னை.
செல்: 9445338442






சென்னை...

மாம்பலம்... தமிழகத்தில் இருக்கிற நிறைய பேருக்கு மாம்பலம் இருக்குமிடம் தெரியும். அந்த மாம்பலத்தில் ராஜாபாதர் தெருவில் உள்ள சாந்தி இல்லத்திற்கு சொந்தக்காரர் தான் சாரங்கபாணி... டி.வி. சீரியலில் வரும் அப்பா காரெக்டர் போலுள்ள சாரங்கபாணி காலை பத்து மணிக்கு சோபாவில் ஹாயாக உட்கார்ந்து கொண்டு இந்து ஆங்கில பத்திரிகையை படித்துக் கொண்டிருந்தார். எதிரே உள்ள டீபாயில் ஒரு ரூபாய் தினகரன் பேப்பரும் இருந்தது.

சாரங்கபாணியின் மனைவி சாந்தி காய்கறி நறுக்கிக் கொண்டிருந்தாள். பார்ப்பதற்கு டி.வி. சீரியலில் நடிக்கும் அண்ணி மாளவிகா போல் இருப்பார். என்ன இவருக்கு வயது கொஞ்சம் கூடுதல்.

இவர்களுக்கு சாப்பாட்டுக்கு எந்தவித பிரச்சனையும் இல்லை. சொந்த வீடு இருக்கு. பாங்கில் கணிசமான பணம் இருக்கு. இருந்தும் இவர்கள் இரண்டு பேருக்கும் ஒரே கவலை. தங்களது மகன் மனோ எந்த வேலைக்கும் போகாமல் நண்பர்களோடு அரட்டை அடித்துக் கொண்டும் ஊர் சுற்றிக் கொண்டிருப்பதும் தான்.

வீட்டின் மாடியில் மனோவும் அவனது நண்பர்களும் சிகரெட் பற்ற வைத்துக் கொண்டு சுவாரஸ்யமாக பேசிக் கொண்டு இருந்தனர்.

மனோ... பார்ப்பதற்கு நடிகர் சூர்யா சாயல் தெரியும். ஆனால் என்ன கொஞ்சம் நிறம் கம்மி. ஆனால் சூர்யாவை விட சற்று உயரம்.

மனோவின் நண்பர்கள் மூன்று பேர்.

ஒருவன் பெயர் தினேஷ். இன்னொருவன் பெயர் கதிர். மற்றவன் பெயர் ரஹ்மான், இவர்கள் அனைவரும் ஏறக்குறைய ஒரே வயதுடையவர்கள். கல்லூரி வரை ஒன்றாக படித்தவர்கள்.

எங்கு போனாலும் இவர்கள் நான்கு பேர்களும் ஒன்றாகத்தான் போவார்கள். ஒன்றாகத்தான் வருவார்கள்.

''டேய்.... இப்படியே காலத்தை ஓட்டிக் கிட்டு இருந்தா நம்ம எதிர்காலம் என்னாவது'' என்று முதல் முறையாக கேள்வி எழுப்பினான் கதிர்.

''என்னடா பண்ணச் சொல்ற... எம்.ஏ. படிச்சுட்டு கண்ட கண்ட வேலைக்கு போக முடியுமாடா... எங்கப்பாவும் விவஸ்தை யில்லாம பேசிக்கிட்டுருக்கார்'' என்றான் மனோ...

''போடா... மனோ... எங்கப்பா என்ன டான்னா ஊர்ல எவ்ளோ வேலை இருக்கு...''

''உனக்கு முதுகு வளைஞ்சு வேலை செய்ய கஷ்டம்... அதான் என் சம்பாத்தியத்தில் உக்கார்ந்து சாப்பிட்டிட்டிருக்கேன்னு மனசை நோகடிக்கிறார்டா...'' என்றான் கதிர்.



''இதுவாவது பரவாயில்லைடா...எங்க வீட்ல இப்போ ரொம்ப டார்ச்சர். எங்கப்பா கோழிக்கடை வச்சிருக்காரு உங்களுக்கேத் தெரியும். இந்த பறவைக் காய்ச்சல் பீதி வந்ததில் இருந்து கோழி வியாபாரம் சரியா ஆகல. அதனால அந்த வயிற்றெரிச்சலை எங்கிட்ட காட்டி எரிஞ்சு விழறார். உயிரோடு இருக்கிற கோழியை துடிதுடிக்க வெட்டற வருக்கு மனுசனோட மனசு எங்கடா புரிய போகுது'' என்றான் ரஹ்மான்...

உடனே தினேஷ்... ''அப்பாடா எனக்கு இந்த பிரச்சனையே இல்லை...'' என்றான்.

''ஏண்டா உங்க வீட்ல எதையுமே கண்டுக்கறதில்லையா'' - மனோ.

''என்னடா இப்படிக் கேக்குற... எனக்குத் தான் அப்பாவே இல்லையே.... சின்ன வயசுலேயே போய் சேர்ந்துட்டாரே...'' என்றான் புன்னகைத்தபடியே - தினேஷ்....

''நீ கொடுத்து வைச்சவண்டா'' என்று மனோ கூறி முடிப்பதற்குள் -

தினேஷின் கண்களில் தாரை தாரையாக கண்ணீர் வழிய ஆரம்பித்தது.

இதைக் கண்ட மற்ற மூவரும் திடுக்கிட்டு பதறிப்போய் ''என்னடா... ஏதாவது தப்பா கேட்டுட்டமா'' என்று கேட்க.

''இல்லைடா... வயசான எங்க அம்மா வேலைக்குப்போய் என்னை படிக்க வைச்சு இப்பவும் சோறு போட்டுட்டிருக்காங்களே. அதை நினைச்சுதான் நான் ரொம்ப வேதனைப் படறேன்'' என்றான்...

அவன் இப்படி சொன்னதும் மற்றவர்களுக்கெல்லாம் என்னவோ போல் ஆகிவிட்டது.

'சரி... இதுக்கு என்னதான் முடிவு' என்று முதல் முறையாக அனைவரும் சிந்திக்கத் தொடங்கினர்.

வீட்ல பெரியவங்க சொல்றதும் சரிதாண்டா. நாமலும் எவ்வளவு நாளைக்குத்தான் தண்டச் சோறு சாப்பிட்டுக்கிட்டு, ஏதாவது பொய் சொல்லி, வேலைக்கு அப்ளிகேஷன் போடணும், இண்டர்வியூக்கு போகணும்னு சொல்லி பணத்தை வாங்கிட்டு பீர் அடிச்சுகிட்டு இருக்கறது.

''நாமலும் தப்பு மேல தப்பு தான் பண்ணிட்டிருக்கோம்...'' - மனோ

''இதுக்கு ஒரு முடிவு கட்டியாகணும். இப்படி செஞ்சா என்னடா... நாம எல்லோரும் சேர்ந்து கொஞ்சம் பணம் போட்டு ஏதாவது பிஸினஸ் பண்ணா என்ன...'' என்றான் தினேஷ்.

''இதுவும் நல்ல ஐடியாதான்... என்ன பிஸினஸ் பண்றது. அதுக்குப் பணத்துக்கு என்ன பண்றது'' - ரஹ்மான்.


''இதோ பாருங்கடா இப்பதான் பிஸினஸ் பண்ணலாம்னே நமக்கு தோணியிருக்கு... ஆற அமர உட்கார்ந்து யோசிப்போம். முதல்ல என்ன பண்ணாலாம்னு முடிவு எடுப்போம். அதுக்கு எவ்வளவு தேவைப்படும்னு பட்ஜெட் போடுவோம். அதுக்கப்புறம் பணத்தை எப்படி புரட்டலாம்னு தீவிரமா சிந்திப்போம். என்ன நான் சொல்றது'' என்றான் கதிர்.

''இவன் சொல்றதும் சரியாத்தாண்டா இருக்கு... நாம எல்லோரும் வெவ்வேறு கோணத்துல சிந்திப்போம். நாளைக்கு காலைல உட்கார்ந்து பேசுவோம். நம்மளால என்ன பிஸினஸ் பண்ண முடியும். அதுக் கேத்த மாதிரி எப்படி பணம் ரெடி பண்ணலாம்னு முடிவு எடுப்போம்'' என்றான் - மனோ.

இவ்வளவு நாள் கழிச்சு இப்பத்தான் இவங்க நல்ல முடிவை எடுத்திருக்காங்க...

ஆனால், விதின்னு ஒன்னு இருக்கே... இவங்க ஒரு திட்டம் போடறாங்க... ஆனால் ஆண்டவன் பேறு கணக்கு போட்டு இருக்கான் என்பது இவர்களுக்கு எப்படித் தெரியும்...?

இவர்கள் திட்டம் வெற்றிகரமாக அமையப் போவதில்லைன்னு தெரியாம அந்த நான்கு பேரும் சந்தோஷத்தில் திளைக்க ஆரம்பிச்சாங்க.




மறுநாள் காலை

மனோவின் வீடு.

வழக்கம் போல் அனைவரும் ஒன்றாக ஆஜர் ஆனார்கள்... வழக்கம் போலவே மனோவின் அப்பா கண்டும் காணாதது போல் இருந்துவிட்டார். மனோவின் அம்மாதான் மனசுக்குள் இவர்களை பற்றிக் கவலைப் பட்டுக் கொண்டிருந்தாள்.

''என்னடா என்ன யோசனை பண்ணி யிருக்கீங்க'' என்றான் மனோ.

''டேய் மனோ நாம புதுசா எந்தத் தொழில் ஆரம்பிச்சாலும் கணிசமான தொகை தேவைப் படும். அதனால சிம்பிளா ஆரம்பிப்போம். STD-பூத் வைக்கலாண்டா அதுக்குத்தான் அவ்வளவு பணம் தேவைப்படாது'' என்றான் கதிர்.

''டேய் அதெல்லாம் வேணாண்டா... அவனவன் கையில செல்போனை வைச்சி கிட்டு ரோட்ல போய்கிட்டே பேசிக்கிறாங்கடா. அதெல்லாம் ஒத்து வராது'' - தினேஷ்.

''சரி... கூல்டிரிங்ஸ், புரூட் ஜூஸ் கடை வைககலாம்டா'' - தினேஷ்

''மழைக்காலம் வந்தா அவ்வளவா வியாபாரம் ஆகாதுடா'' - மனோ.

''XEROX கடை வைக்கலாம்டா'' - ரஹ்மான்.

''XEROX மிஷின் விலை கிட்டத்தட்ட ஒரு லட்ச ரூபாய்டா. அதை போட்டுட்டு கடை வாடகை குடுத்துட்டு ஒரு ஒரு ரூபாயா சேர்க்கனும்டா'' - தினேஷ்.

''கம்ப்யூட்டர் வைக்கலாம்டா... இப்ப அதுக்குத்தான் நல்ல மார்க்கெட் இருக்கு. நமக்கும் கம்ப்யூட்டர் தெரியும்... என்ன சொல்றீங்க'' என்றான் - கதிர்.

''இதோ பாருங்கடா நாம நாலு பேர் இருக்கோம். அதனால பணத்தை புரட்டி கொஞ்சம் பெரிய லெவல்ல செய்வோம். அப்பததான் நம்ம நாலு பேருக்கும் வேலை



இருக்கும்... கடை வாடகையை கொடுத்து நாமலும் கொஞ்சமா பணம் எடுக்க முடியும்'' என்றான் மனோ...

''அப்படின்னா நீயே ஒரு ஐடியா கொடுடா'' என்றான் தினேஷ்.

''நீங்க ஒவ்வொருத்தரும் சொன்ன ஐடியா நல்லாதான் இருக்கு. அதனால கொஞ்சம் பெரிய இடமா பார்ப்போம். அதையே நான்கா பிரிச்சு ஒரு இடத்துல கம்ப்யூட்டர் வைப்போம். முன் பகுதியில கூல்டிரிஸ்க்ஸ் ஜூஸ் கடை வைப்போம். பக்கத்திலேயே வீடியோ கேம் மெஷின் வைப்போம். கடைக்கு முன்னல சின்னதா ஒரு STD பூத்தும் PCO-பாக்ஸும் வைப்போம். வர்ற கஷ்டமர்களுக்கும் வசதியா இருக்கும். இந்த நாலு பிஸினஸும் ஒன்னுக் குள்ளே ஒன்னு லிங்க் ஆகும். என்ன நான் சொல்றது'' என்றான் மனோ.

''நல்ல ஐடியா என்றார்கள் மற்ற மூவரும்...''

இவர்கள் தீவிரமாக பேசிக் கொண் டிருக்கும் போதே கீழே இருந்து மனோவின் அம்மா குரல் கொடுத்தாள்...

''மனோ... மனோ... சீக்கிரம் கீழே இறங்கி வாடா... ஒரு குட் நியூஸ்'' என்றாள்.

உடனே இவர்கள் நான்கு பேரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர்...

''என்னடா உங்கம்மா குட் நியூஸ்னு சொல்றாங்க... உங்கப்பா வெளியே கிளம் பிட்டாரா... டி.வி.யிலே இந்தியா இங்கிலாந்து ஒன்டே மாட்ச் பார்க்கறதுக்கு கூப்பிட றாங்களா...'' என்றான் ரஹ்மான்.

''மனோ ஒரு வேளை உங்கப்பா மாடிப் படிக் கட்டில் இருந்து கீழே விழுந்துட்டாரோ'' என்றான் சிரித்தபடி தினேஷ்.

உடனே அவர்களை முறைத்தபடி ''பேசாம வாங்கடா'' என்று கூறிக்கொண்டே கீழே இறங்கி வந்தான் மனோ....

''வாடா... மனோ... நாம கும்பிட்ட தெய்வம் கைவிடலைப்பா... உனக்கு கவர் மென்ட்ல வேலை கிடைச்சிருக்கு'' என்றாள் சந்தோஷத்துடன் மனோவின் அம்மா. கையில் சர்க்கரை டப்பா இருந்தது.''

இதைக் கேட்டதும் மனோவின் முகத்தில் சந்தோஷம் தாண்டவமாடியது.

மற்ற மூவரும் 'ஹாய்...' என்று உற்சாகக் குரல் கொடுத்தனர்.

சாரங்கபாணி தனது கையில் இருந்த பிரவுன் நிற கவரை எடுத்து மனோவிடம் நீட்டினார்.


அதை வாங்கி வாயால் ஊதி பிரித்து உள்ளிருந்த தாளை எடுத்து பிரித்து படிக்க ஆரம்பித்தான்.

அதில் இருந்த அவனது வேலையின் விவரம் சம்பள விகிதம் மற்ற பிற விஷயங் களை ஆவலுடன் படித்துக் கொண்டே வந்தவன் வேலை செய்ய வேண்டிய இடம் எங்கே என்பதை படித்தவுடன் முகம் கறுத்துப் போனது மனோவுக்கு.

சாரங்கபாணியின் முகத்தைப் பார்த்து, ''எனக்கு இந்த வேலை வேண்டாம்... நான் போகமாட்டேன்'' என்றான் சிடுசிடுத்தபடி மனோ.



இதைக் கேட்ட அத்தனை பேரின் முகத்திலும் அதிர்ச்சி பாவம் தொடங்கியது.




உடனே சாரங்கபாணி கோபத்தில் கத்தத் தொடங்கினார்.

''என்னடா சொல்ற இந்த வேலை வேணாமா...? கவர்மெண்ட் உத்தியோகம்டா. அவனவன் வேலை கிடைக்கலியேன்னு கஷ்டப்பட்டுக்கிட்டிருக்காங்க...! நீ... என்னடான்னா வந்த வேலையை வேணாம்னு சொல்றியே உனக்கென்ன பைத்தியமா புடிச்சிருக்கு... லூஸாடா நீ'' என பொரிந்து தள்ளினார்.

''அதில்லைப்பா... வேலை எனக்கு சென்னையில் கிடைக்கல... திருநெல் வேலியில் இல்ல கிடைச்சிருக்கு... அவ்வளவு தூரம் என்னால போக முடியாது....''

''திருநெல்வேலி தமிழ்நாட்டுல தான்டா இருக்கு... எவ்வளவோ பேர் தங்களது குடும்பம் குழந்தைங்களை விட்டுட்டு வெளி நாட்டுக்குப் போய் சம்பாதிக்கிறாங்க... அதுக்கு இது எவ்வளவோ மேல் இல்லையா...!''

''நான் என் பிரண்ட்ஸ் மூணு பேரையும் விட்டுட்டு அவ்வளவு தூரம் போக முடியாது. நாங்க எல்லோரும் ஒண்ணா சேர்ந்து இங்கேயே பிஸினஸ் ஆரம்பிக்கலாம்னு இருக்கோம'' என்றான் மனோ...

இவர்களது எண்ணம் என்ன என்பது அப்போதுதான் புரிந்தது சாரங்கபாணிக்கு.

''இதோ பார் மனோ. நீ உன் பிரண்ட்ஸ் மேலே வைச்சிருக்கிற மதிப்புக்கும் மரியாதைக்கும் நான் ரொம்பவே பெருமை படறேன். நான் ஒண்ணு சொல்றன் கேட்டுக்கோ... நீ முதல்ல இந்த வேலைல சேரு. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் நீ சென்னைக்கு மாற்றலாகி வர ஏற்பாடு செய்றேன். அதுவரை மற்றவர்களும் வேலைக்கு டிரை பண்ணட்டும். இதுல வேலை கிடைக்காதவங்களுக்கு மற்றவங்க உதவி செஞ்சு அவங்களை கரையேற்ற முயற்சி பண்ணுங்க'' என்றார் பொறுமையாக சாரங்கபாணி.

அப்போதுதான் அது எவ்வளவு நல்ல விஷயம் என்பது மற்றவர்களுக்கு புரிய ஆரம்பித்தது.

மற்ற மூவரும் அதை ஆமோதிப்பதுபோல் தலையாட்டிவிட்டு சொன்னார்கள்...

''ஆமாண்டா மனோ உங்கப்பா சொல்றது தான் சரி... நாமலும் பிஸினஸ் தொடங்கற துக்கு பணம் புரட்டணும். சிரமப்படணும்... ஏன் எல்லோரும் கஷ்டப்படணும்... நீ இந்த வேலைல போய் சேரு, நாங்களும் தீவிரமா வேலை தேட ஆரம்பிக்கிறோம்'' என்று மனோவை சமாதானப்படுத்தத் தொடங்கி னார்கள்.

அதன் விளைவாக மனோ மனதில் மாற்றம் ஏற்பட்டு சாரங்கபாணியிடம் சொன்னான்...''



''அப்பா... நீங்க சொல்ற மாதிரி நான் வேலைக்கு போகிறேன். ஆனால் என் சம்பளத்துல என் பிரண்ட்ஸ்ங்க மூணு பேருக்கும் அவங்களுக்கு வேலை கிடைக்கிற வரைக்கும் மாசா மாசம் ஐநூறு ரூபாய் அனுப்புவேன். இதுக்கு ஒத்துக்குவீங்களா'' என்றான் நம்பிக்கையில்லாமல் - மனோ.


ஆனால் அவன் நினைத்ததற்கு மாறாக ''தாராளமா அனுப்புப்பா... அதுக்கு நான் தடை சொல்ல மாட்டேன்...''

''ஏன்னா பழகிய நண்பர்களுக்கு நீ இவ்வளவு செய்யறின்னா, உனக்கு கல்யாணம் ஆகி குடும்பஸ்தனா ஆன பிறகு எங்களக் கைவிட மாட்டேன்னு சொல்லாம சொல் றேப்பா'' என்றார் உற்சாகமாக...

''சரிப்பா நீ ஊருக்கு போக வேண்டிய ஏற்பாடெல்லாம் கவனி'' என்றார்.

மனோவின் பெருந்தன்மையை எண்ணி உள்ளுக்குள் மகிழ்ந்து கொண்டார் சாரங்க பாணி....

தற்போது தன் மகனை எண்ணி சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கும் சாரங்க பாணி வாழ்நாள் முழுதும் சாகும் வரை மனோவைத் திட்டி தீர்க்கப் போகிறார் என்பது அவருக்கு எப்படி தெரியும்.



4

எழும்பூர் ரயில் நிலையம்.

கன்யாகுமரி எக்ஸ்பிரஸ்ஸில் தனது கோச் பார்த்து, பெர்த் எண் பார்த்துவிட்டு கீழே தனது சூட்கேஸ், பை ஆகியவற்றை வைத்துவிட்டு கீழே இறங்கி வந்து பிளாட்பாரத்தில் நின்று கொண்டு தன்னை வழியனுப்ப வந்த நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தான் மனோ...

தனது மகனுக்கு வேலை கிடைத்த சந்தோஷத்தில் கோயிலுக்கு போய் அர்ச்சனை செய்துவிட்டு கையோடு கொண்டு வந்திருந்த விபூதி குங்குமத்தை பேப்பரில் மடித்து மனோவிடம் தந்தாள்... அவன் அம்மா.

அதை வாங்கி பாக்கெட்டில் பத்திரப் படுத்திக் கொண்ட மனோ மற்ற மூவர் களிடமும் பேசிக் கொண்டிருந்தபோது சிக்னல் போடப்பட்டு ரயில் புறப்படும் என அறிவிப்பு வெளியானதும் எல்லோரிடமும் கை கொடுத்துவிட்டு பெட்டியில் ஏறப் போகும் முன் சாரங்கபாணி மனோவின் கையில் சிறிய கிப்ட்பாக்ஸ் ஒன்றை கொடுத்தார்... கூடவே ஒரு சிறு கடிதமும் இருந்தது.

''இந்தாப்பா மனோ... இதை வாங்கிக்க என்று கூறிவிட்டு நீ திருநெல்வேலிக்குப் போனதும் நான் கொடுத்த விலாசம் இருக் குல்ல... பாளையங்கோட்டைல ராஜா தெருவில் நாராயணமூர்த்திங்கறவரை போய்ப் பாரு... அங்கே போய் மாரி வீடு எதுன்னு கேட்டா எல்லோருக்கும் தெரியுமாம்... அந்த மாரி வீட்டுக்கு நேரேதிர்த்த வீடுதான் நாராயணமூர்த்தி வீடு. உனக்கு தேவையான எல்லா உதவியையும் செய்வார். காலைல நாலு மணிக்கெல்லாம் திருநெல்வேலி



போயிடும் பார்த்து இறங்கிக்கப்பா'' எனக் கூறி முடிக்கவும் இரயில் நகரவும் சரியாக இருந்தது.

அனைவரும் கையை அசைத்து விடை கொடுத்தனுப்பினர். மனதில் வருத்தத்தோடு.

ரயில் செங்கல்பட்டை தாண்டிக் கொண்டிருந்தது. வேடிக்கை பார்த்துக் கொண்டே வந்த மனோவுக்கு சட்டென்று சாரங்கபாணி கொடுத்த கடிதம் நினைவுக்கு வர பாக்கெட்டில் கையை விட்டு கடிதத்தை எடுத்து பிரித்து படிக்க ஆரம்பித்தான்....

அன்புள்ள மனோவுக்கு அப்பா சாரங்க பாணி எழுதிக் கொண்டது.

என் மேல் உனக்கு வருத்தம் இருக்கும் என்பது தெரியும். நான் உன்னை திட்டியது, எரிந்து விழுந்தது எல்லாமே உன்னோட நலனுக்குத் தாம்பா... நீ நல்லாயிருக்கனும்னு தானே நாங்க இவ்வளவு நாள் வேதனைப் பட்டோம். இது கடமைன்னு சொல்றதைவிட பாசம்னு சொல்றது தான் கரெக்ட்.

அதை நீ புரிஞ்சுக்கனும்னு தான் இந்தக் கடிதத்தை எழுதியிருக்கிறேன்... நீ நல்லபடியா முன்னுக்கு வந்தா முதல்ல சந்தோஷப் படறவங்க நாங்கதானே... அதனால என்னைப் புரிஞ்சுக்க.. என்மேல் வெறுப்பு ஏதேனும் இருந்தால் அதை விலக்கிக் கொள்.

ஒரு சிறிய பரிசு கொடுத்துள்ளேன். நீ எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் அது உன்னையும் எங்களையும் இணைத்துக் கொண்டிருக்கும். வாழ்க்கையில் நீ மிகப்

பெரிய அந்தஸ்தை அடைய வேண்டும் என்று அன்புடன் வாழ்த்துகிறேன்.

இப்படிக்கு
உனக்காக வாழும்
சாரங்கபாணி.

உணர்ச்சிகரமான கடிதத்தைப் படித்து பார்த்த மனோ, உடனே சாரங்கபாணி கொடுத்த பரிசை பிரித்து பார்த்தான். அதில் புத்தம் புதிய கலர் செல்போன் இருந்ததைக் கண்டான். கடிதத்தில் அவர் எழுதியிருந்ததின் அர்த்தம் இப்போது புரிந்தது.

அப்போதுதான் தன் மீது சாரங்கபாணி எவ்வளவு நம்பிக்கையும், பாசத்தையும் வைத்திருக்கிறார் என்பது புரிந்தது மனோவுக்கு.

அவனையுமறியாமல் அவனது கண்களில் ஈரம் எட்டிப் பார்க்க ஆரம்பித்தது.

எதிரில் இருப்பவர்கள் பார்த்துவிடப் போகிறார்கள் என்று எண்ணி அவசரமாக துடைத்துவிட்டுக் கொண்டான்.

அப்போது அவன் தவறு செய்து விட்டோமா? என மனதில் நினைத்துக் கொண்டான். அப்பா அம்மா மனசை எவ்வளவு நோகடித்துவிட்டோம் என்று மனதிற்குள் வருந்தினான்.

இனி அவர்களது மனசு நோகாமல் நடந்து கொள்ள வேண்டும். என்னைப் பார்த்து அவர்கள் மனம் குளிர வேண்டும் என எண்ணிக் கொண்டான்.

பாவம் மனோ... இவனை எண்ணி அவனது அப்பாவும் அம்மாவும் வயிறெரியப் போகிறார்கள்.



மீளாத்துயரத்தில் மூழ்கப் போகிறார்கள் என்பது தெரியாமல் வேடிக்கைப் பார்த்துக் கொண்டே பயணம் செய்து கொண்டிருந்தான்.




பாளையங்கோட்டை பஸ் நிறுத்தத்தில் இறங்கி அங்கிருந்த ஆட்டோ ஸ்டாண்டை நோக்கி நடந்தான் மனோ...

''வாங்க... ஸார்... எங்கே போவணும்?'' அன்புடன் ஒரு ஆட்டோ டிரைவர் அழைக்க... அவனை நெருங்கினான் மனோ.

''ராஜா தெரு மாரி வீடு இருக்குல்ல அங்கு போவணும்...''

''மாரியண்ணன் வீடா... உட்காருங்க ஸார்... முப்பது ரூபா குடுங்க...''

பேரம் பேசலாமா என நினைத்த மனோ புது இடம் எதுக்கு தெரியாம பேசிக்கிட்டு முதல்ல இடத்துக்கு போய் சேருவோம்னு நினைத்துக் கொண்டே ஆட்டோவில் ஏறினான்.

ஆட்டோவில் போகும் போதே யோசித்துக் கொண்டே போனான். மாரி வீடுன்னு கேட்டதும், ஆட்டோக்காரன் மாரியண்ணன் வீட்டுக்கா... உக்காருங்கன்னு சொல்றானே... மாரிங்கறவர் அவ்வளவு பெரிய ஆளா... ஒரு அரசியல்வாதியா இருப்பாரோ... இல்லை சமூக

சேவகரா இருப்பாரோ... மாரின்னு சொன்னதும் சட்டுனு புரிஞ்சுக்கறாங்களேன்னு நினைத்துக் கொண்டே வந்தான்.

ஆட்டோ வலது புறம் திரும்பி சற்று நேராகப் போய் இடது புறம் திரும்பி கொஞ்ச தூரம் போனதும் மீண்டும் வலது புறம் திரும்பி அந்த ராஜா தெருவிற்குள் நுழைந்து நாலைஞ்சு வீடு தள்ளி ஒரு அழகான பெண் கோலமிட்டுக் கொண்டிருந்த வீட்டின் முன் போய் நின்றது ஆட்டோ...

''இதுதான் ஸார் மாரியண்ணன் வீடு'' என்றான் ஆட்டோ டிரைவர்.

கோலமிட்டுக் கொண்டிருந்த பெண் தலையைத் தூக்கிப் பார்த்து ஆட்டோ டிரைவரிடம் கேட்டாள், ''யாருங்க வேணும்...?''

''மாரியண்ணனைப் பார்க்க வந்திருக்கார்...!'' என்றான் ஆட்டோ டிரைவர்.

மனோ பர்ஸிலிருந்து பணத்தை எடுத்துக் கொடுத்துவிட்டு சூட்கேஸை கையில் எடுத்துக் கொண்டு இறங்கும் சமயம் –

அந்தப் பெண் பேச ஆரம்பித்தாள்... ''இறங்காதீங்க... அப்படியே திரும்பிப் போங்க...'' என்றாள் அவள்.

அதைக் கேட்டதும் அதிர்ச்சியடைந்த மனோ, ''இல்லீங்க... நான் வந்து...'' பேசி முடிப்பதற்குள் அவள் குறுக்கிட்டாள்.

''காலங்கார்த்தாலே வந்துட்டீங்க... யார் கையையாவது, காலையாவது எடுக்கணுமா? இல்லே ஆளையே தீர்த்துக் கட்டணுமா...?



பாக்க டீசண்டா இருக்கீங்க... ஏன் இது மாதிரி வேலையெல்லாம் செய்றீங்க... மாரி எங்க மாமாதான்... இப்ப அவர வீட்ல இல்லே...'' என பொரிந்து தள்ளினாள் அந்தப் பெண்.

ஸ்தம்பித்துப் போயிருந்த மனோ சுதாரித்துக் கொண்டு, ''ஹலோ... இருங்க... என்ன நீங்க பாட்டுக்குப் பேசிகிட்டே இருக்கீங்க... நான் மாரியைப் பார்க்க வரலை... எதிர் வீட்ல இருக்கிற நாராயணமூர்த்தி சாரை பார்க்க வந்திருக்கேன்...'' என்றதும் அந்தப் பெண் உதட்டைக் கடித்துக் கொண்டாள். அவள் முகத்தில் வெட்கமும் அச்சமும் கலந்து குடியேறியது.

''ஸாரிங்க... எங்க மாமனை தேடிக்கிட்டு வர்றவங்க எதாவது அடி தடி வெட்டு குத்து போன்ற விஷயத்துக்குத்தான் தேடிக்கிட்டு வருவாங்க... அதான் உங்களையும் அதே மாதிரி நினைச்சிட்டேன்... வாங்க நான் கூட்டிகிட்டு போறேன்னு'' சொல்லி மனோவுக்கு முன் நடந்து அந்த எதிர் வீட்டுக்குள் நுழைந்தாள்.

''மாமா... மாமா... உங்களைப் பார்க்கறதுக்காக வெளியூர்ல இருந்து யாரோ வந்திருக்காங்க...'' என்று குரல் கொடுத்துக் கொண்டே சென்றாள்.

மனோவும் அவளைத் தொடர்ந்து உள்ளே சென்றான்.

ஹாலுக்கு வந்த நாராயணமூர்த்தி, ''வாங்க தம்பி... நீங்கதான் மனோவா...?'' என்றார்.

''ஆமாம் ஸார்...''

''போன்ல உங்கப்பா எல்லா விவரத்தையும் சொன்னார்... உக்காருங்க தம்பி...'' என்றவர், அருகில் இருந்த சோபாவைக் காட்ட, மனோ அமர்ந்தான்.

''கண்மணி... இவர் என்னோட பிரண்டோட சன். சென்னையிலிருந்து வர்றார்... இவருக்கு இங்க வேலை கிடைச்சிருக்கு... கொஞ்ச நாளைக்கு நம்ம வீட்டு மாடியிலதான் தங்கப் போறார்'' என்றார் நாராயணமூர்த்தி.

அந்தப் பெண்ணின் பெயர் கண்மணி என்பதை மனதில் பதிய வைத்துக் கொண்டான் மனோ.

''சரி... மாமா நான் கிளம்பறேன்...'' என்று சொல்லிவிட்டு விடுவிடுவென வெளியேறினாள் கண்மணி.

கண்மணி போவதையே பார்த்துக் கொண்டிருந்த மனோவிடம் ''தம்பி... கண்மணி எதிர்வீட்லதான் இருக்கா... நல்ல பொண்ணு... ஆனா அவருடைய முறை மாமனால அவளுக்கு நிறைய தொந்தரவு... பாவம்... ஆண்டவன் கண் திறந்து அந்தப் பொண்ணுக்கு சீக்கிரமா நல்ல இடத்துல கல்யாணமாகி போற இடத்துலயாவது சந்தோஷமா இருக்கணுங்கறதுதாம்பா என்னோட ஆசை...'' என்றார் நாராயணமூர்த்தி.

உடனே கேட்டார், ''எப்ப டியூட்டில ஜாயின் பண்ணணும்...?''

''நாளைக்குக் காலைல மாமா...!''

''சரி... வாங்க தம்பி, மாடி போர்ஷனைக் காண்பிக்கிறேன்...'' என்று அழைத்துச் சென்றார்.



சின்னதா ஒரு ஹாலும், ஒரு ரூமும் இருந்தது. பாத்ரூம் தனியாக இருந்தது. அவனுக்கு அது போதும். மற்ற விவரங்களைச் சொல்லிவிட்டு நாராயணமூர்த்தி கீழே இறங்கிப் போனார்.

மனோ அந்த இடத்தை ஒருமுறை சுற்றிப் பார்த்துவிட்டு, தெருப்பக்கம் இருந்த ஜன்னலைத் திறந்தான். பார்த்தான். அவன் கண்களில் எதிர்வீட்டு கண்மணி வீடு தெரிந்தது. கண்மணியும் தெரிந்தாள்.

பயணக் களைப்பு தீர சற்று படுப்போம் என்று எண்ணி, அங்கிருந்த பழைய கட்டிலை தூசி தட்டிவிட்டு பெட்ஷீட்டை விரித்துப் போட்டுவிட்டுப் படுத்தான்.

கண்ணை மூடியதும் அவனுக்கு அப்பா அம்மா நினைவுக்கு வர வேண்டும். ஆனால் கண்மணிதான் வந்தாள்.

அது எவ்வளவு பெரிய ஆபத்தில் முடியப் போகிறது என்பது அவனுக்கு எப்படி தெரியும்...? அது தெரியாமலேயே உறங்க ஆரம்பித்தான்...




காலம்தான் எவ்வளவு விரைவாக ஓடுகிறது. மனோ வேலைக்குச் சேர்ந்து கிட்டத்தட்ட ஆறேழு மாதங்களாகி விட்டது. வேலையும் பழகிவிட்டது. ஊரும் பிடித்து விட்டது. கூடவே கண்மணியையும் பிடித்து விட்டது. படிப்பதற்கு நாவல் வாங்க, அவள்

செய்த சுண்டலைக் கொடுப்பதற்காக என ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லி அடிக்கடி மனோவைப் பார்க்க வருவாள்.

வருவாள்... வந்தாள்... வந்துகொண்டே யிருந்தாள். அதனால் இருவர் மனதிலும் ஒருவித பாச உணர்வு தோன்றியது. அதன் விளைவாக அவர்கள் இருவருக்கும் காதல் அரும்பியது.

காலை வேளைகளில் கோயில் பிரகாரத் திலும், மாலை வேளைகளில் கோயில் குளக் கரை படிக்கட்டுகளிலும் சந்தித்துக் கொண்டனர்.

அதேபோல் ஒருநாள் காலை வேளையில் கோயில் பிரகாரத்தில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

''மனோ... எங்க மாமாவை நினைச்சாதான் எனக்கு பயமாயிருக்கு... அவர் எனக்காக என்ன வேணா செய்வார்... நான் அவருக்குதான்னு நினைச்சுக்கிட்டிருக்கார்... நம்ம காதல் விவகாரம் தெரிஞ்சதுன்னா என்னைக் கொன்னே போட்டுடுவார்... உங்களுக்கும் ஆபத்துதான்'' என்று கலக்கமுடன் கூறினாள் கண்மணி.

''கண்மணி... நீ எதற்கும் பயப்படாதே... நான் இருக்கேன். இதை எப்படி சமாளிக் கிறதுன்னு எனக்குத் தெரியும். நானே உங்க மாமாகிட்ட பேசறேன்... நம்ம காதலைப் பத்தி எடுத்துச் சொல்லி சம்மதம் வாங்கறேன்... போதுமா...?'' என்றான் மனோ.

''அது அவ்வளவு சுலபமல்ல...'' என்றாள் கண்மணி.

இவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருப் பதைப் பார்த்துவிட்டான் மாரியின் கையாள்.



மாரி வாங்கித்தரும் சாராயத்துக்கும், அவன் தரும் அஞ்சு பத்துக்கும் விசுவாசமாக இருக்க வேண்டாமா...?

மாரியைத் தேடி மூச்சிறைக்க ஓடினான். அவன் வேகமாக ஓடி வருவதைப் பார்த்த மாரி, ''என்னடா...? தலைதெறிக்க ஓடி வர்றே... என்ன விஷயம்...?'' என்றான்.

''அண்ணே... உங்க கண்மணி இல்லை... கண்மணி...!'' மென்று விழுங்கினான்.

''கண்மணிக்கு என்னடா...? என்னாச்சு...'' பதறினான் மாரி.

''கண்மணிக்கு ஒண்ணும் ஆகலைண்ணே! ஆனா கண்மணியும்... கண்மணியும்...''

''ஏய்... ஒழுங்கா விஷயத்தைச் சொல்லு... சும்மா இழுத்தடிச்சுப் பேசாதே...'' என்றான் மாரி கடுப்புடன்.

''உங்க கண்மணியும் எதிர்வீட்ல இருக்கற மெட்ராஸ்காரனும், கோயில்ல உட்கார்ந்து பேசிக்கிட்டு இருக்காங்கண்ணே...!''

''சே... இதுவாடா விஷயம்... அவ கோயிலுக்குப் போயிருப்பா... எதிர் வீட்டுக் காரனாச்சேன்னு ஏதாவது பேசியிருப்பா... அதுக்கென்ன இப்ப...?''

''அண்ணே... விஷயத்தை முழுசா கேளுங்க... அவங்க ரெண்டு பேரும் ஒருத்தரை யொருத்தர் விரும்புறாங்க அண்ணே...!''

''என்னடா சொன்னே...?'' மாரிக்கு கோபம் தலைக்கேறி எதிரில் நின்ற அவனைக் காலால் எட்டி ஒரு உதை விட்டான்.

அவன் எகிறி நான்கடி தள்ளிப் போய் விழுந்தான்.

''ஏண்டா நாயே...! என் கண்மணியைப் பத்தி என்கிட்டயே தப்பா சொல்றியா...?'' மீண்டும் அவனை உதைக்க வர -

அவன் மாரியின் காலைப் பிடித்துக் கொண்டு ''நான் சொல்றதெல்லாம் உண்மை தாண்ணே... அவங்க பேசிக்கிட்டிருந்ததை என் காதால கேட்டேன்... அதைத்தான் உங்ககிட்ட சொன்னேன்...'' என்று மறுபடியும் கூற,

''என்ன பேசிக்கிட்டாங்க...?''

''நம்ம காதல் விவகாரம் தெரிஞ்சதுன்னா என்னை கொன்னே போட்டுருவாருன்னு கண்மணி சொல்லிக்கிட்டிருந்துச்சு...''

அவ்வளவுதான்... மாரியின் உடம்பில் வெறி ஏறியது. இரத்தம் கொதிக்க ஆரம்பித்தது. தலையை கோபத்துடன் அப்படியும் இப்படியும் ஆட்டிக் கொண்டே கேட்டான். ''இப்ப எங்கடா இருக்காங்க...'' என்றான் மாரி.

''கோயில் பிரகாரத்திற்குள்தான் உட்கார்ந்திருக்காங்க...'' என்று அவன் சொல்லி முடிப்பதற்குள், அவன் கோயிலை நோக்கி விறுவிறுவென்று நடக்க ஆரம்பித்தான்.

''கண்மணி... எனக்கு ஆபீஸுக்கு டைம் ஆச்சு... நான் கிளம்பறேன்... சாயந்தரம் ஆறு மணிக்கெல்லாம் குளக்கரைக்கு வந்திடு... நானும் சரியா ஆறு மணிக்கெல்லாம் வந்தர்றேன்...'' என்று சொல்லிவிட்டு கோயிலை விட்டு வெளியே வந்து அலுவலகத்திற்குச் செல்ல ஆரம்பித்தான் மனோ.



மனோ சென்ற சிறிது நேரத்திற்குள் அங்கே வந்த மாரி, கண்மணியைத் தேடினான். அவன் கண்களில் பட்டாள கண்மணி

கண்மணி கோயில் பிரகாரத்தை மூன்று முறை சுற்றிக் கொண்டிருந்தாள்.

கண்மணி தனியாகக் கோயிலைச் சுற்றிக் கொண்டிருப்பதை மறைந்திருந்து பார்த்த மாரி, மிகவும் குழப்பம் அடைந்தான்.

கோயில்ல இரண்டு பேரும் இருக்காங்கன்னு சொன்னான்... ஆனா இவ மட்டும்தான் இருக்கா...! அவன் சொன்னதை நம்பவும் முடியவில்லை... நம்பாமல் இருக்கவும் முடியவில்லை...

சரி... இந்த விஷயத்தை கண்மணியிடமே கேட்டுவிடலாம் என்ற முடிவுக்கு வந்தவன் அவளை நெருங்கினான்.

மாரியை கோயிலில் பார்த்ததும் கண்மணிக்கு பகீரென்றது. மனோவுடன் தான் இருந்ததைப் பார்த்திருப்பாரோ...?

கண்மணியின் மனதில் லேசாக சந்தேகம் வந்தது... சுதாரித்துக் கொண்டாள். அதை வெளிக்காட்டாதவாறு, ''என்ன மாமா...? ஆச்சரியமாயிருக்கு... கோயிலுக்கெல்லாம் வந்திருக்கே...?''

மாரி எச்சில் விழுங்கினான். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. சமாளித்துக் கொண்டு ''சும்மாதான் கோயிலுக்கு வந்தேன்... ஏன் வரக்கூடாதா?'' என்று கூறிக் கொண்டே, ''என்ன கண்மணி... நீ மட்டுமா கோயிலுக்கு வந்தே...?'' என்றான்.

கண்மணியின் மனசு எச்சரிக்கை செய்தது. மாமாவுக்கு விஷயம் தெரிஞ்சு

போச்சு... அதான் நம்மளைக் கிளறிப் பார்க்கிறார்னு...

''ஆமா மாமா... நான் மட்டும்தான் வந்தேன்... ஏன் கேக்கறே...?''

''இல்லே... சும்மாதான் கேட்டேன்...'' என்று சொல்லிவிட்டு கோயிலை விட்டு வெளியே வந்தான். கண்மணியும் கூடவே வந்தாள்.

கண்மணியின் போதாத காலம், வெளியே விற்கும் பெண்மணி, ''இந்தாம்மா... நீங்க கோயிலுக்குப் போற அவசரத்தில மீதியை வாங்காம போயிட்டீங்க... உங்க கூட வந்தாரே அவர் இருபது ரூபா கொடுத்தார்... அஞ்சு ரூபா பூ... இந்த புடி மீதி பதினைஞ்சு ரூபா...'' எனக்கூறி கண்மணியிடம் கொடுக்கவும், மாரி அவளை முறைக்கவும் சரியாய் இருந்தது.

''அவர்கிட்டயே கொடுங்க...'' என்று சொல்லிவிட்டு நகர்ந்தாள் கண்மணி.

வீட்டிற்கு வந்ததும் கண்மணியின் தலைமுடியைப் பற்றி இழுத்து முகத்தில் ஒரு அறை விட்டான்.

''என்னடி... என்னையே ஏமாத்தப் பாக்கறியா... யாருமே கூட வரலைன்னு சொன்னே... நீ யார்கூட போனேன்னு எனக்குத் தெரியும்... உண்மையைச் சொல்லு...''

மீண்டும் பளாரென்று அறைந்தான். கண்மணி சுருண்டு விழ, அப்பொழுதும் கண்மணி மாரியைச் சமாளிக்கப் பார்த்தாள்.


''மாமா... இருங்க மாமா... உண்மையைச் சொல்றேன்... நான் கோயிலுக்குப் போனபோது அங்கே எதிர்வீட்டுல இருக்கிறவரும்



வந்திருந்தார். நான் செருப்பை விட்டுட்டு நகரப் போன சமயம் அவர் பூ வாங்கிக் கொண்டிருந்தார். அதனால பூக்காரம்மா நானும் அவரும் ஒண்ணா வந்ததா நினைச்சுட்டாங்க...'' அழுதுகொண்டே சொல்லவும் மாரிக்கு தலை சுற்றியது.

கண்மணி சொல்வது உண்மையாக இருக்குமோ...? இந்த விஷயத்தில் நாம அவசரப்படக் கூடாது. கண்மணிக்குத் தெரியாம அவனை நாலு தட்டு தட்டி விசாரிச்சா அவன் என்ன சொல்றான்னு பார்க்கலாம்னு முடிவெடுத்து அங்கிருந்து கிளம்பினான் மாரி.

மாரியை சமாளித்த சந்தோஷத்தில் மிதந்தாள் கண்மணி. அந்த சந்தோஷம் நீடிக்கப் போவதில்லை என்பதை எப்படி அறிவாள் கண்மணி?




**கா**லை 11.30 மணி.

அலுவலகத்தில் ஃபைல் பார்த்துக் கொண்டிருந்த மனோவை பியூன் வந்து அழைத்தான்.

''ஸார்... உங்களை ஹெட் கிளார்க் கூப்பிடறார்...'' என்றான்.

''என்ன விஷயம்...?''

''எனக்குத் தெரியாது ஸார்... கூப்பிடச் சொன்னார்... அதான் வந்தேன்...''

''சரி... நீ போ... நான் பார்த்துக்கறேன்'' என்று சொல்லிவிட்டு ஹெட் கிளார்க்கைப் பார்க்கச் சென்றான் மனோ.

''வாங்க மனோ... உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா...?'' என்றார்.

''என்ன ஸார் விஷயம்...?''

''எல்லாம் நல்ல விஷயம்தான்... உனக்கு சென்னைக்கு டிரான்ஸ்பர் ஆர்டர் வந்திருக்கு... சந்தோஷம்தானே...?''

பக்கென்றது மனோவுக்கு... உடனே கண்மணி நினைவுக்கு வந்தாள்.

''என்ன மனோ... நான் பேசிக்கிட்டிருக்கேன். நீங்க பதில் சொல்லாமல் சும்மா உட்கார்ந்திருக்கீங்க...''

''ஸாரி ஸார்... எனக்கு சந்தோஷம்தான்'' என்று புன்முறுவல் காட்டிவிட்டு சீட்டுக்கு வந்தமர்ந்தான்.

அச்சமயம் செல்போன் ஒலிக்க, எடுத்து காதுக்குக் கொடுத்து பேச ஆரம்பித்தான்.

மனோவின் அப்பா சாரங்கபாணிதான் பேசினார்.

''என்ன மனோ... எப்படியிருக்கே...?''

''நான் நல்லாயிருக்கேன்பா...''

''உனக்கு விஷயம் தெரிஞ்சிருக்கும்னு நினைக்கறேன்... உனக்கு சென்னைக்கு டிரான்ஸ்பர் கிடைச்சாச்சு... இப்ப சந்தோஷம் தானே...?''

''....''

மனோ மௌனம் காத்தான்.

''....''




''என்ன மனோ... என்ன எதுவும் பேச மாட்டேங்கிறே...!''

''இல்லேப்பா... எனக்கு இந்த டிரான்ஸ்பர் வேண்டாம்பா. நான் இங்கேயே இருக்கேன்...''

''அது எப்படிப்பா முடியும்... உனக்காக கஷ்டப்பட்டு இந்த ஆர்டரை வாங்கியிருக்கேன்... நீ என்ன இப்படி சொல்றே...?''

''இல்லேப்பா... நான் இங்கேதான் இருப்பேன்... நான் சென்னைக்கு வர மாட்டேன்... எனக்கு வேலையே போனாலும் கவலையில்லை'' என்று சொல்லிவிட்டு பட்டென்று போனை வைத்துவிட்டான்.

சாரங்கபாணிக்கு ஒன்றும் புரியவில்லை. குழப்பத்துடன் போனை வைத்துவிட்டார்.




**ம**தியம் 1.00 மணி.

சாரங்கபாணி குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தார்.


மனோவின் நண்பர்கள் மூவரும் உள்ளே நுழைந்தனர்.

''வாங்கப்பா... உக்காருங்க...'' என்ற சாரங்கபாணி, ''மனோவுக்கு என்னாச்சுன்னு தெரியலை... உடனே நீங்க திருநெல்வேலிக்குப் புறப்பட்டுப் போகணும்'' என்றவுடன் அனைவரும் ஒன்றும் புரியாமல் அவரையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

''வேலை கிடைச்சதும் நான் திருநெல்வேலிக்கெல்லாம் போக மாட்டேன்னான். அப்புறம் நாம அவனை கன்வின்ஸ் பண்ணி அனுப்பி வச்சோம்... படாதபாடு பட்டு அவன் சென்னைக்கு மாறுதலாகி வர டிரான்ஸ்பர் ஆர்டர் வாங்கித் தந்தா, இப்ப சென்னைக்கு வரமாட்டேங்கறான்... எனக்கு ஒண்ணும் புரியலை... நீங்க நேர்ல போய் என்ன விஷயம்னு தெரிஞ்சுகிட்டு வாங்க... இதில இரண்டாயிரம் ரூபா இருக்கு... இன்னிக்கு சாயந்தரமே புறப்படணும்... போய் விஷயத்தை தெரிஞ்சுகிட்டு எனக்கு போன் செய்யுங்க...'' என்றார்.

''சரிப்பா...'' என்றனர் கோரஸாக...

ஊருக்குப் புறப்படத் தயாரானார்கள் அங்கே நடக்கப் போகும் விபரீதம் தெரியாமல்.



**மா**லை 6.00 மணி.

கோயில் குளத்தங்கரைப் படிக்கட்டில் அமர்ந்து இருந்தனர் கண்மணியும் மனோவும் எதுவும் பேசாமல்.

டிரான்ஸ்பர் ஆர்டர் வந்த வருத்தத்தில் மனோவும், மாமாவுக்கு விஷயம் தெரிந்து விட்ட அதிர்ச்சியில் கண்மணியும் வருத்தத்துடன் அமர்ந்திருந்தனர்.

கண்மணி லேசாக விசும்பி விசும்பி அழ ஆரம்பித்தாள்.



பதறிப்போன மனோ, ''என்ன கண்மணி... என்னாச்சு...?'' என்றான்.

''இல்ல மனோ... எங்க மாமாவுக்கு விஷயம் தெரிஞ்சு என்னைப் போட்டு அடிச்சிட்டாரு... எனக்கு பயமாயிருக்கு...'' என்றாள்.

''நான் இருக்கேன் கண்மணி. கலங்காதே. எனக்குக்கூட டிரான்ஸ்பர் ஆர்டர் வந்திருக்கு... உன்னை விட்டுட்டு போக முடியாதுங்கறதாலே எங்கப்பாகிட்ட நான் சென்னைக்கு வரமாட்டேன்னு சொல்லிட்டேன்...'' என்றான்.

இதைக்கேட்ட கண்மணியின் உடல் நடுங்கியது. ''இப்ப என்ன பண்றது...?''

''பேசாம நாம ரெண்டு பேரும் கோயில்ல கல்யாணம் பண்ணிக்கிட்டா என்ன...? அப்புறம் யாராலயும் நம்பளை எதுவும் பண்ண முடியாது...'' என்றான் மனோ.

''அப்படியா சொல்றீங்க... அதெல்லாம் நடக்கற காரியமா...'' என்றாள் கண்மணி.

''ஏன் நடக்காது. நம்பிக்கையோட காரியத்துல இறங்குவோம். நீ பயப்படாதே. நாளைக்குக் காலையிலே ஏழு மணிக்கெல்லாம் கோயிலுக்கு வந்துரு...'' என்றான்.

''அப்புறம் ஒரு விஷயம் மனோ... எங்க மாமா உங்களைப் பத்தி கேட்டார்... எல்லாம் அந்தப் பூக்காரியால வந்தது...'' என்று நடந்த விஷயத்தைக் கூறி முடித்தாள்.

''சரி... நான் பாத்துக்கறேன்... நீ இப்ப கிளம்பு. நான் கோயிலுக்குப் போய் கல்யாணத்துக்கு என்னென்ன செய்யணும்னு கேட்டுத் தெரிஞ்சுக்கிட்டு வர்றேன்'' என்றான்.

''சரி மனோ... நான் கிளம்பறேன். ஜாக்கிரதை. யாருக்கும் தெரியாம நடந்துக் கங்க...'' என்று கூறிவிட்டு அங்கிருந்து நகர்ந்தாள் கண்மணி.

மனோ கோயிலுக்குள்ளே சென்று திருமணத்திற்கு எவ்வளவு பணம் கட்ட வேண்டும், என்னென்ன கொண்டு வர வேண்டும் என்று விசாரித்துக் கொண்டு தனது அலுவலக நண்பரின் வீட்டிற்குச் சென்றான். தனக்கு உதவியாக காலையில கோயிலுக்கு வருமாறு கேட்டுக் கொண்டு வீட்டுக்கு வந்து கொண்டிருந்தான்.

வீட்டிற்கு அருகில் வரும்போது எதிரில் வந்த மாரி, மனோவைப் பார்த்து முறைத்தான்.

எடுத்த எடுப்பிலேயே மரியாதை யில்லாமல், ''உனக்கும் கண்மணிக்கும் என்னடா தொடர்பு...?'' என்றான்.

இதை எதிர்பார்த்த மனோ, ''எனக்கும் கண்மணிக்கும் என்ன தொடர்பா...? என்ன பைத்தியக்காரத்தனமான கேள்வி... எப்ப வாவது கண்மணி என்கிட்ட படிக்க புக்ஸ் கேப்பா... அவ்வளவுதான்...'' என்றான்.

அப்பவும் மாரி மூச்சு விடாமல் பேசிக் கொண்டிருந்தான். ''நான் வேற மாதிரி கேள்விப்பட்டேன். அது மாதிரி எதுவும் நடந்தா நீ உயிரோடு இருக்க மாட்டே... சொல்லிட் டேன்... சரி... நான் கேக்க மறந்துட்டேன்... இன்னிக்குக் காலைலே கண்மணிக்கு எதுக்கு பூ வாங்கிக் கொடுத்தே...'' என்று போட்டு வாங்கினான், மாரி.

ஏற்கனவே கண்மணி விவரத்தை சொல்லி விட்டதால், ''நான் பூ வாங்கிக் கொடுத்



தேனா... நான் சாமிக்குத்தான் பூ வாங்கிட்டுப் போனேன்... அதற்குண்டான சில்லறையைக் கூட அந்தம்மா இப்பத்தான் கொடுத்தாங்க'' என்றதும், மாரி சமாதான மடைந்தான்.

கண்மணி சொன்னது சரிதான். நாமதான் தப்பா புரிஞ்சுக்கிட்டோம்னு நினைச்சுட்டு, அப்பவும் பந்தாவாய் ''பார்த்து நடந்துக்க...'' என்று எச்சரிக்கை செய்துவிட்டு நகர்ந்தான் மாரி.

காலைல திருமணம் நடக்கப் போகிற சந்தோஷத்தில் உறங்கிப் போனான் மனோ...

கண்மணிக்குத் தெரிந்தவர்கள், மனோ அலுவலக நண்பர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் மனோ - கண்மணியின் திருமணத்தில் கலந்து கொண்டனர்.

மாரிக்கு விஷயம் தெரிந்து சமாதான மடைந்து மணமக்களை வாழ்த்த வந்திருந் தான்.

புரோகிதர் எல்லோரிடமும் ஆசி வாங்கிய தாலியை மனோவின் கையில் கொடுக்க, அந்தத் தாலியை மனோ வாங்கி கண்மணியின் கழுத்தில் கட்ட, கெட்டி மேளம் கொட்டத் தொடங்கியது.

திடுக்கிட்டு விழித்துப் பார்த்தான் மனோ... தான் கண்டது கனவு என்று அப்போதுதான் புரிந்தது. டைம் பார்த்தான். காலை 3.30 மணி. இன்னும் திருமணத்திற்கு மூன்று மணி நேரம் இருக்கிறது என்று கணக்கிட்டுவிட்டு மீண்டும் படுக்கையில் விழுந்தான்.

திருமணம் ஆவது போல் கன[illegible] நல்லதுக்கில்லை என்பா[illegible]

விஷயத்தில் உண்மையாகப் போகிறது என்பது அப்போது மனோவுக்குத் தெரியாது.




மறுநாள் காலை 6.00 மணி.

கோயிலைப் பெருக்கிச் சுத்தம் செய்கிற வீரைய்யனுக்கு மனோ - கண்மணி கல்யாண விஷயம் தெரிஞ்சுபோய் அவசர அவசரமாக மாரியைத் தேடிக்கிட்டு வந்தான்.

கண்மணி குளித்துவிட்டு யாருக்கும் சந்தேகம் வராதபடிக்கு வழக்கம் போல் சாதாரண மேக்கப் போட்டுக் கொண்டு கோயிலுக்குப் புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தாள்.

மனோவும் குளித்து முடித்து வேஷ்டி சட்டை அணிந்து கொண்டான். தேவையான அளவுக்கு பணத்தை எடுத்து பாக்கெட்டில் வைத்துக் கொண்டான்.

வீட்டுத் திண்ணையில் படுத்து உறங்கிக் கொண்டிருந்த மாரியை வீரைய்யன் எழுப்பிக் கொண்டிருந்தான்.

ராத்திரி குடிச்ச போதை இன்னும் இறங்காததால் அவ்வளவு சீக்கிரத்தில் மாரியை அவனால் எழுப்ப முடியவில்லை.

''அண்ணே...! மாரியண்ணே...!''

''டேய்... யார்ரா அது...?''

''அண்ணே நான்தாண்ணே வீரைய்யன்.''

''என்னடா காலங்கார்த்தாலே...?''

''அண்ணே முக்கியமான விஷயம்னே...''



''அப்புறமா வாடா... பேசிக்கலாம்...''

''இல்லண்ணே தலைபோற காரியம்னே.''

சட்டென்று விழிப்பு வந்து வீரைய்யனைப் பார்த்தான்.

''என்னடா... விஷயம்...?''

மாரியிடம் மனோ - கண்மணி கல்யாண விஷயத்தை காதில் சொல்லச் சொல்ல, மாரியின் உடல் கொதித்தெழுந்தது.

வெளியில் நடக்கிற விஷயம் எதுவும் தெரியாத கண்மணி கோயிலுக்குப் போவதற்காக வெளியே வந்தாள்.

அங்கே மாரி திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருப்பதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தாள்.

'என்ன இது... மாமா முழிச்சிக்கிட்டு இருக்காரு...!'

அதிர்ச்சியை வெளிக்காட்டிக் கொள்ளாமல், ''மாமா நான் கோயிலுக்குப் போயிட்டு வர்றேன்'' என்று சொல்லி வாசலைக் கடக்க முயன்றாள்.

மாரி தடுத்து நிறுத்தினான்.

''கண்மணி... நில்லு... நானும் உன்கூட கோயிலுக்கு வர்றேன்'' என்றான் மாரி.

''இல்லே மாமா... நீங்க குளிச்சிட்டு வர்றதுக்கு நேரமாகும். நான் போயிட்டு சீக்கிரமா வந்தர்றேன்'' என்றாள்.

''இல்லே... நானும் வருவேன். இல்லேன்னா நீயும் போகக்கூடாது...'' என்றான் மாரி.

இதைக் கேட்டதும் விக்கித்து நின்ற கண்மணி, அவன் பேச்சை சட்டை செய்யாமல் தெருவிற்குள் காலடி வைத்தாள்.

இதைக் கண்ட மாரிக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது.

''கண்மணி கோயிலுக்குப் போறியா...? இல்லே எவன்கூடவாவது ஓடிப் போகப் போறியா...?''

இதைக் கேட்டதும் கண்மணிக்கு பகீரென்றது.

விஷயம் தெரிந்து விட்டது என மனதிற்குள் நினைத்துக் கொண்டாள்.

இருந்தாலும் அதை வெளிக்காட்டாமல், ''என்ன மாமா பேசற... நான் கோயிலுக்குத்தான் போறேன்... வரட்டுமா...?'' என்று சொல்லிவிட்டு, விடுவிடுவென்று நடக்க ஆரம்பித்தாள்.

அவ்வளவுதான்... மாரிக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

லுங்கியை தூக்கிக் கட்டிக் கொண்டு எழுந்து, நாலே எட்டில் கண்மணியின் தலைமுடியைப் பற்றி ஒரு அறை அறைந்தான்.

அவள் மாமா என்று அலறுவதற்குப் பதில் 'மனோ' என்று அலறினாள்.

இதைக் கேட்டதும் மாரிக்கு இன்னும் கோபம் அதிகரித்தது.

காலால் எட்டி உதைத்தான்.


''மனோ...'' என்று அலறியபடியே கீழே விழுந்தாள்.

அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் எல்லோரும் ஓடிவந்து மாரியைத் தடுக்க இயலாமல் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

கல்யாணத்திற்குத் தயாராய் இருந்த மனோ, மணி பர்ஸில் இருந்த அவனது அப்பா



அம்மா போட்டோவைப் பார்த்து, ''என்னை மன்னிச்சிடுங்க... என் கல்யாணத்தை உங்களுக்கு நான் தெரியப்படுத்தக்கூட முடியாத பாவி ஆயிட்டேன்... இந்தக் கல்யாணம் இப்ப அவசரம்... அவசியம்... அதான்'' என்று மானசீகமாக மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருந்த வேளையில், தெருவில் என்ன சத்தம் என்று ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தான் மனோ.




அங்கே அவன் கண்ட காட்சி அவன் ரத்தத்தை உறைய வைத்தது. ''கண்மணி...'' என்று அலறிக் கொண்டே படிக்கட்டுகளில் இறங்கி ஓடி வந்து கொண்டிருந்தான்.

''மாரி... வேண்டாம்ப்பா... சின்னப் பொண்ணு... இப்படி அடிக்காதப்பா... ஏதாவது ஆயிடப் போகுது...'' கூட்டத்தில் இருந்த ஒரு பெரியவர் மாரியை சமாதானப்படுத்த முயன்றார்.

''எது ஆனாலும் எனக்குக் கவலையில்லை... இந்த ஓடுகாலி தேவடியா முண்டை என்னை ஏமாத்திட்டுப் போகப் பாக்கறா... விட்ருவேனா...?'' என்று மீண்டும் அவளை அடிப்பதற்கு முயல -

அதற்குள் அங்கு வந்த மனோ, மாரியை தடுத்து நிறுத்தினான்.

''இதோ பாருங்க... நடந்த விஷயத்தை நான் சொல்றேன். கண்மணியை விட்டுடுங்க'' என்று கெஞ்ச -

இப்போது மாரியின் கோபம் மனோவின் மீது பாய்ந்தது.

''இதுக்கெல்லாம் காரணம் நீதாண்டா... உன்னைக் கொன்னாதாண்டா ஆத்திரம் அடங்கும்...'' என்று சொல்லிக் கொண்டு மனோவைத் தாக்க ஆரம்பித்தான்.

மனோ எவ்வளவோ தடுத்தும் மாரி அடங்கற மாதிரி தெரியவில்லை. இருவரும் கட்டிப்புரண்டு தெருவில் உருண்டனர்.

அதற்குள் கண்மணி அங்கே வந்து ''மாமா... அவரை விட்டுடுங்க மாமா... அவரை ஒண்ணும் செஞ்சிடாதீங்க...'' என்று கெஞ்சி கதறிக் கொண்டிருந்தாள்.

கூட்டத்தில் இருந்தவர்கள் பாவம்... கண்மணி... சின்ன வயசிலேயே பெத்தவங்களை இழந்திட்டா... இந்த மாரிதான் வளர்த்தான். அதனால மாரி மேலே பாசம் இருந்ததே தவிர கனிவோ, காதலோ இல்லை. ஆனால் மாரியோ கண்மணி மேல உயிரையே வச்சிருக்கான்... அதான் இப்படியெல்லாம் நடக்குதுன்னு சலசலத்தபடி பேசிக் கொண்டிருந்தனர்.

மாரியின் குணம் தெரியும் என்பதால் யாரும் தடுக்க முன்வரவில்லை.

கண்மணி பதறியபடி மாரியை உலுக்கிக் கொண்டிருந்தாள். ''விட்டுடுங்க மாமா... விட்டுடுங்க...''

ஆனாலும் மாரியும் மனோவும் ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டனர்.

உடனே கண்மணி மாமாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு, ''அவரை அடிக்காதே...



அவர் மேல இனி ஒரு அடி பட்டாக்கூட நான் சும்மா இருக்க மாட்டேன்'' என்று கதத -

இதைக் கேட்ட மாரி அதிர்ச்சி அடைந்து, ''என்னடி சொன்னே... சும்மா இருக்க மாட்டியா...? என்ன பண்ணுவே... பண்ணு பாக்கலாம்...'' என்று காட்டுக் கத்தலாய் கத்திக் கொண்டே ஒரு காலைத் தூக்கி கண்மணியின் வயிற்றின்மேல் ஒரு உதை விட்டான்.

பூந்தளிர் போன்ற கண்மணியை ஒரு பெரிய இடி தாக்கியது போல் தாக்கப்பட்டு எகிறிப் போய் கீழே விழுந்தாள். விழுந்த இடத்தில் இருந்த ஒரு பாறாங்கல்லில் மோதியதால், தலையில் அடிபட்டு இரத்தம் கொட்ட ஆரம்பித்தது.

சுற்றியிருந்தவர்கள் கண்மணியை நெருங்கி வந்தார்கள்.

கண்மணியின் நிலைமையை உணர்ந்த அவர்கள் மாரியையும், மனோவையும் கஷ்டப்பட்டு விலக்கிவிட்டு, ''உங்க சண்டையை அப்புறமா வச்சுக்கங்க... முதல்ல அவளை ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டுப் போங்க'' என்று அவர்கள் சண்டையை தடுத்து நிறுத்தினார்கள்.

கூட்டத்தினரைச் சமாளிக்க முடியாதுன்னு கருதிய மாரி, ''அந்தச் சனியன் செத்தாக்கூட எனக்கு கவலையில்லை...'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து நகர்ந்தான்.

மனோ கண்மணியின் நிலைமையை புரிந்துகொண்டு இரண்டு தெரு தள்ளி இருந்து ஆட்டோ ஸ்டாண்டிற்கு தலை தெறிக்க ஓடினான்.

ஆட்டோ ஸ்டாண்டில் சிகரெட் பிடித்துக் கொண்டிருந்த ஒரு ஆட்டோக்காரனை அவசரப்படுத்தி, ஆட்டோவில் ஏறி அமர்ந்து கண்மணி இருக்குமிடத்திற்கு வந்தான்.

கண்மணி மயக்க நிலையில் இருப்பதை அறிந்து அங்கிருந்தவர்களின் உதவியோடு கண்மணியை ஆட்டோவில் ஏற்றிக் கொண்டு ஆஸ்பத்திரியை நோக்கிப் பறந்தான்.

பாதி தூரம்தான் போயிருப்பார்கள். சட்டென்று ஆட்டோ முன் வந்து நின்றான் மாரி.

உடனே மனோ கீழே இறங்கிவந்து மாரியிடம் கெஞ்ச ஆரம்பித்தான்.

''இதோ பார் மாரி... கண்மணி மோசமான நிலைமையில இருக்கா... இப்ப எதுவும் பேச வேணாம்... அவளை ஆஸ்பத்திரியில சேர்த்துட்டு அப்புறமா பேசிக்கலாம்'' என்று சொல்லச் சொல்ல -

மாரி அலட்சியமாய் பார்த்தான். ''கண்மணி என் கண்மணிடா... எனக்கு இல்லாத அக்கறை உனக்கென்னடா... நான் பாத்துக்கறேன்... முதல்ல நீ இங்கிருந்து போடா...'' என்று சொல்லிக் கொண்டே மனோவைத் தள்ளி விட்டான்.

ஆட்டோவில் இருந்த கண்மணி ''மனோ... மனோ...'' என்று ஈனக்குரலில் முனகினாள்.

இதைப் பார்த்த ஆட்டோக்காரனுக்கு ஒன்றும் புரியவில்லை.

பாட்டிலில் இருந்த தண்ணீரை எடுத்து கண்மணியின் வாயில ஊற்ற முயன்றான். வாயைத் திறக்க முடியவில்லை.




விலுக்கென்று வித்தியாசமானதொரு சத்தத்தோடு மார்பு ஏறி இறங்கி சற்று நேரத்திற்கெல்லாம் மூச்சு அடங்கிப் போனது.

இதைப் பார்த்த ஆட்டோக்காரனுக்கு கண்களில் பயம் ஏற்பட்டது.

திரும்பவும் மாரியையும் மனோவையும் பார்த்தான்.

இறந்துபோன கண்மணிக்காக மனோவும் மாரியும் அடித்துக் கொண்டிருந்தனர்.




''மாரியண்ணே... கண்மணி செத்துப் போச்சண்ணே...'' ஆட்டோக்காரன் பெருங் குரல் எடுத்துக் கத்தினான்.

இதைக் கேட்டதும் மனோவுக்கும் மாரிக்கும் அதிர்ச்சியும் ஆத்திரமும் ஏற்பட்டது.

இருவருமே கண்மணிக்காகத்தான் சண்டை போட்டுக் கொண்டிருந்தனர்.

கண்மணி செத்துப் போயிட்டாளனதும், மனோவால்தான் செத்தாள் என்று மாரியும், மாரியால்தான் செத்தாள் என்று மனோவும் கருதிக் கொண்டு முட்டி மோதிக் கொண்டனர்.

மனோவைப் பார்ப்பதற்காக வந்து கொண்டிருந்த நண்பர்கள் மூவரும் தூரத்தில் மனோவும் மாரியும் சண்டை போட்டுக் கொள்வதைப் பார்த்துவிட்டு பதறிப் போய் ''மனோ...'' என்று கத்திக் கொண்டே அவனை நோக்கி ஓடி வந்தனர்.

கண்மணி செத்தது, மனோவின் மனதில் ஒரு பெரிய சூறாவளியையே ஏற்படுத்தி இருந்தது.

அருகில் இருந்த பெரிய கட்டையை எடுத்து மாரியின் நடு மண்டையில் ஒரு போடு போட்டான்.

நிலைகுலைந்து போன மாரி தட்டுத் தடுமாறி சமாளிக்க முயல - மீண்டும் தடியால் தாக்க, இந்த முறை அடி பலமாகப் பட்டு மாரி அப்படியே சரிந்து கீழே விழுந்தான்.


மனோ திக்பிரமை பிடித்தவன் போல் நின்று கொண்டிருந்தான்.

அதற்குள் அங்கு வந்த நண்பர்கள் மூவரும் என்ன, எது என்றுகூட விசாரிக்க முடியவில்லை. அசம்பாவிதம் நடந்து விட்டது... மாரி இறந்து விட்டான் என்று மட்டும் புரிந்தது.

தூரத்தில் போலீஸ் ஜீப் ஒன்று வருவது தெரிந்தது.

நண்பர்கள் மூன்று பேரும் ஒருவரை யொருவர் கிசுகிசுத்துக் கொண்டனர்.

திடீரென்று மூன்று பேரும் அருகில் இருந்த கட்டையை ஆளுக்கு ஒன்றாக எடுத்துக் கொண்டு செத்துப்போன மாரியை தாக்க ஆரம்பித்தனர்.




நண்பர்கள் மாரியைத் தாக்குவதைப் பார்த்த மனோ அதிர்ச்சியடைந்து ''என்னடா



பண்ணிட்டிருக்கீங்க... செத்துப் போனவனை அடிச்சிட்டிருக்கீங்க... போலீஸ்காரங்க வர்றாங்கடா... போயிடுங்கடா...''

''இல்லே மனோ... நாங்க போக மாட்டோம்... நாங்களும் உன்கூடத்தான் இருப்போம்...''

''நான் செஞ்சது கொலைடா... போயிடுங்கடா... போலீஸ் வருதுடா...''

மீண்டும் கோரஸாகச் சொன்னார்கள்.

''நாங்கள் போக மாட்டோம். இந்தக் கொலையை நம்ம நாலு பேரும் சேர்ந்துதான் செஞ்சோம்...''

''என்னடா உளர்றீங்க...?''

''உளரலை மனோ... நீ சம்பாதிச்சு எங்களுக்கெல்லாம் பங்கு போட்டுக் கொடுத்தே. உன் சந்தோஷத்தையும் இன்பத்தையும் எங்ககூட பகிர்ந்துகிட்டே... இப்ப உனக்கு ஒரு பிரச்சனைன்னு வரும்போது நாங்க ஒதுங்கிக்க விரும்பலை...''

''அதனால...''

''இந்தக் கொலையை நாம நாலு பேரும் செஞ்சதா சொல்லுவோம். உனக்குக் கிடைக்கிற தண்டனை எங்களுக்கும் கிடைக்கட்டும்...''

''போயிருங்கடா... போலீஸ் கிட்ட வந்துருச்சு...''

மனோ சொல்லிக் கொண்டிருக்கும் போதே, போலீஸ் ஜீப் அவர்கள் அருகில் வந்து நின்றது.

ஜீப்பிலிருந்து நான்கைந்து போலீஸ் காரர்கள் கீழே இறங்கி வந்தனர்.

முன்பக்கம் அமர்ந்திருந்த இன்ஸ்பெக்டர் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்து இறந்துகிடந்த மாரியைப் பார்த்தார்.

மனோவையும், அவனது நண்பர்களையும் பார்த்து இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"என்ன நடந்துச்சு...?"

மனோ ஏதோ சொல்ல வாயைத் திறப்பதற்குள், மற்ற மூவரும் ஒன்றாக "இவனை நாங்கதான் கொலை செஞ்சோம்..." என்றனர்.

உடனே இன்ஸ்பெக்டர் போலீஸ்காரர்களைப் பார்த்து இவங்களை ஸ்டேஷனுக்குக் கொண்டு போங்க... அங்கே போய் விசாரிக்கலாம்... பாடியை போஸ்ட் மார்ட் டத்திற்கு அனுப்ப ஏற்பாடு பண்ணுங்க..." என்றார்.

போலீஸ்காரர்கள் அந்த நான்கு பேரையும் ஜீப்பில் ஏற்றிக் கொண்டிருந்தனர்.

மனோவின் பெற்றோர்களும், அவனது நண்பர்கள் மூன்று பேரின் பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகள் வாழ்க்கையில் உயர்ந்த இடத்திற்கு வருவார்கள் என நினைத்துக் கொண்டிருந்தனர்.

ஆனால் அவர்கள் போகும் இடமோ...?

**(முற்றும்)**

Owned & Published by M.Manivannan on behalf of **RAAJ SRI PUBLICATIONS**, 49-B, SURYA AVENUE, Near Kurinji Nagar, Chrompet, Chennai-600 044. Printed by S.B.KUSHALSHA at Sulekhar Printers, Chennai-5. Editor: **R.M.KUMARAVEL**.

Regd. Off.: 6, Typoon Alikhan St., Chennai-5



## போற்றிப் போற்றி!



அன்பே!
வருங்காலத்து
நம்பிக்கை... நீ
முகப்படத்தில்
முழு நிலவு... நீ
வாழ்வின் இசைக்கு
இசைவான சுருதி... நீ
என் முனைப்புகளுக்கு
சிவப்பு கம்பளம்... நீ
சக்தியின் சக்தியை
உணர்த்தும்...
மகா நெஞ்சுரம் நீ
தாயாய் இந்த மான்
மண்ணிலே... நீ
எனக்குத் தாய்



மா. வி. கோவிந்தராசன்
18/23, அருணகிரி தெரு,
ஆரணி - 632 301.
திருவண்ணாமலை மாவட்டம்